Volume-14
Issue-3

# வைகறை வெளிச்சம்

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

மார்ச்-2021 (ரஜப்-1442)

விலை ரூ. 20/-




## நீதிக்காக போராடுபவர்களின் மீது பாயும் சட்டங்களும் உருவாக்கப்படும் ஆதாரங்களும்

## நானொரு 'RSS முழுநேர ஊழியன்' எனது வாழ்க்கை பயணம்

## வெளியான வாக்கு இயந்திர மோசடி... மாட்டிக்கொண்ட தேர்தல் ஆணையம்...

உச்ச நீதிமன்றத்தின் தாழ்ச்சியும் வீழ்ச்சியும் – 5

## பிரதம அமைச்சர் காப்பு நிதியும் (PM - Cares Fund) உச்ச நீதிமன்றமும்

بسم الله الرحمن الرحيم

❝

**அவர்களுக்கு உங்கள் மீது வாய்ப்பு கிடைத்தால், அவர்கள் உங்களுக்கு விரோதிகளாகித் தம் கைகளையும், தம் நாவுகளையும் உங்களுக்குத் தீங்கிழைப்பதற்காக உங்கள்பால் நீட்டுவார்கள்; தவிர, நீங்களும் காஃபிர்களாக வேண்டும் என்று பிரியப்படுவார்கள்.**

(அல்குர்ஆன் 60 : 2)

❞


நானொரு 'RSS முழுநேர ஊழியன்' எனது வாழ்க்கை பயணம் - 4

UAPA நீதிக்காக போராடுபவர்களின் மீது பாயும் சட்டங்களும் உருவாக்கப்படும் ஆதாரங்களும் - 26

பாயும் சட்டங்களும் உருவாக்கப்படும் ஆதாரங்களும் - 31

உச்ச நீதிமன்றத்தின் தாழ்ச்சியும் வீழ்ச்சியும் – 5
பிரதமஅமைச்சர்காப்புநிதியும்(PM-CaresFund)உச்சநீதிமன்றமும்-37

வெளியான வாக்கு இயந்திரம் மோசடி... மாட்டிக்கொண்ட தேர்தல் ஆணையம்... - 41

வாக்கு இயந்திரங்களுக்கு எதிராக புதிய இயக்கம் – 43

மருத்துவம் - 47

இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்), நூருத்தீன் ஸங்கி (ரஹ்), சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) - 48

சிலுவைப்போர்கள் 2.0 - 52

மகளிர் மன்றம் - 55

இவர்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றார்கள்? - 59

மயிலாடுதுறை மாவட்டத்தில் ஒருநாள் தாஃவா சுற்றுப் பயணம் - 63

மர்ஹூம் மணிமொழி மௌலானா பாகவி - 65



மார்ச்-2021

# வைகறை வெளிச்சம்

ரஜப்-1442

ஆசிரியர்

மு. குலாம் முஹம்மது, M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்

கே.எம். இலியாஸ் ரியாஜி, M.A.,



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of Chennai courts.



**கொள்கை வழியில் :**
செய்தி மடல், விடியல் வெள்ளி, ஆகியவற்றின் தொடர்ச்சி

http:/www.facebook.com/vaigarivelicham

தனி இதழ் : ரூ. 20 /-
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240 /-
வெளி நாடு : ரூ. 3000 /-
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
**DARUL ISLAM FOUNDATION TRUST**
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு 81481 29887

**VAIGARAI VELICHAM**
52/1, Mannady Street, Room No. 7, Mannady,
Chennai - 600 001. Tel : 81481 29887
Email : darultrust@yahoo.com
Web : www.darulislam.in

# T.A.வேலாயுதன்

**ஓர் ஆர்.எஸ்.எஸ். காரனாக இருந்த வேலாயுதன் என்ற நான், என் வாழ்க்கையில் ஏற்பட்ட எதிர்பாராத திருப்பங்களை உங்களுக்குச் சமர்ப்பிக்கிறேன்.**

கேரள மாநிலம் எர்ணாகுளம் மாவட்டம், குன்னத்துக்காடு பஞ்சாயத்தில் பிணர்முண்டா என்ற கிராமத்தில் பிறந்தேன்.

எனது தகப்பனார் பெயர் ஐயப்பன், தாய் காளி. 1962–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10–ம் நாள் என்னுடைய பிறந்த தினம். எனது தகப்பனாரின் மூன்று திருமணத்தில் 7 குழந்தைகள். அண்ணன் குமாரன், தம்பி சுரேஷ், சகோதரிகள் அம்மினி, கிரிஜா, பிந்து, மஞ்ஜுசா பின்னர் நான்.

நானும் தங்கை அம்மினியும் ஒரே தாயின் பிள்ளைகள், தந்தை ஒரு செங்கல் தொழிலாளியாக பணிபுரிந்து வந்தார். அம்மா விவசாயம் செய்யக்கூடியவராகவும் இருந்தார்.

எனக்குப் பதினோரு வயது இருக்கும்போது அது நடந்தது.

எனது தந்தை வேலைக்குச் சென்றால் திரும்புவதற்கு சில நாட்கள் ஆகும்.

கோலஞ்சேரிக்குப் பக்கத்தில் கடையிருப்பு என்ற இடத்தில் கொன்னனின் வீட்டில்தான் எனது தந்தை தங்குவார். எனது தந்தை அந்த (கொன்னனின்) வீட்டில் தங்குவதில் எனது அம்மாவிற்கு சில சந்தேகங்கள் எழுந்தன. அந்த சந்தேகங்கள் சில நாட்களுக்குப் பிறகு நிஜங்களாயின.

எனது அப்பாவிற்கும் கொன்னனின் மனைவிக்கும் சில தொடர்புகள் ஏற்பட்டு அது திருமணம் வரை சென்று முடிந்தது. அப்பா தினசரி இரவு குடித்துவிட்டு அம்மாவை சித்ரவதை செய்வது தொடர்ந்து கொண்டே இருந்தது.

அப்பாவின் சித்திரவதை தாங்க முடியவில்லை. கடைசியில் அது விவாகரத்து வரை சென்றது. எனது கண் முன்னே வைத்து அம்மா தன் கழுத்தில் தொங்கிய தாலியை அறுத்து அப்பாவின் முகத்தில் விட்டெறிந்தாள். இது எனது வாழ்வில் மறக்க முடியாத நிகழ்வாக அமைந்து விட்டது.

எனது தங்கை அம்மினியையும் அழைத்துக் கொண்டு, அம்மா வீட்டை விட்டு வெளியேறினாள். அம்மாவுடன் செல்வதற்கு எனது மனம் அனுமதிக்கவில்லை. நான் எனது அப்பாவின் அம்மாவுடன் எனது சிறு வயது வாழ்க்கையைக் கழித்தேன்.

அம்மா வீட்டை விட்டுப்போன இரண்டாவது வாரத்தில் அப்பா புதிய மனைவியை அழைத்து வந்து வீட்டில் குடும்பம் நடத்தத் தொடங்கிவிட்டார். அப்போது நான் நான்காம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். உணவுக்காக மேல் ஜாதி இனத்தைச் சார்ந்த தேவர்களின் வீட்டு மனையை மிதிப்பதற்குக் கூட எங்களுக்கு அனுமதியில்லை. ஏனென்றால் நான் தாழ்ந்த இனத்தைச் சேர்ந்தவன்.



# நானொரு ‘RSS முழுநேர ஊழியன்’ எனது வாழ்க்கை பயணம்

பசி பொறுக்க முடியாமல் நானும் எனது பாட்டியுமாக (அப்பாவின் அம்மா) முஸ்லிம்கள் வீட்டில் ஏதாவது திருமணம் மற்றும் சடங்குகள் நடந்தால் அங்கு செல்வோம். அவர்கள் சாப்பிட்டு விட்டு வெளியே வீசுகின்ற அந்த எச்சில் மாமிசத்திற்காக நாங்கள் காத்து நிற்போம். இந்த எச்சிலை சாப்பிடுவதற்காக காகமும், நாயும் எங்களது நண்பர்களாக அங்கே நின்று கொண்டிருக்கும். எச்சில் இலையை அப்படியே எடுத்து அவர்கள் கடித்துத் துப்பின எலும்பில் ஏதாவது மாமிச துண்டுகள் இருக்கிறதா என்று ஆவலோடு எடுத்து, இருப்பதை சந்தோஷமாக சாப்பிட்டுவிட்டு மீதியை அப்படியே எடுத்து எனது பாட்டியின் மடியில் கட்டி சந்தோஷமாக வீட்டிற்கு எடுத்துச் செல்வோம். அன்று மிகவும் சந்தோஷமான நாளாக இருக்கும். இரவு சாப்பாடு கிடைத்துவிட்டதே என்ற சந்தோஷம்தான். "எச்சில் இல்லாத நல்ல சாப்பாடு கிடைக்காதா?" என்று நாங்கள் ஆவலுடன் இருந்த நாட்கள் பலப்பல!

விடிந்தவுடன் நானும், எனது பாட்டியும் சாப்பாட்டிற்காக பல இல்லங்கள் ஏறி இறங்குவோம். அதிகமாக முஸ்லிம் வீடுகளில் இருந்துதான் எங்களுக்கு திருப்தியான சாப்பாடு கிடைக்கும். நோன்பு நாட்களில்தான் எங்களுக்கு திருப்தியான சாப்பாடு கிடைத்தது.

சாப்பாட்டிற்காக வீடு வீடாக செல்லும் போது எனது பள்ளி நண்பர்களின் வீட்டை அணுகும்போது அவர்கள் என்னைப் பார்த்து விடாமல் நான் மறைந்து நின்று பாட்டியை மட்டும் அனுப்பி விடுவேன்.

6–ம் வகுப்பு வரை எனது படிப்பு நீடித்தது. பள்ளிக்கு செல்வதற்கு அப்பா கட்டாயப்படுத்தியதும் கிடையாது. பள்ளியில் படிக்கின்ற காலத்தில், சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் அப்பா என்னை கல் வெட்டுகின்ற வேலைக்கு அழைத்துச் செல்வார். அப்பாவிற்கு எடுபிடியாக வேலை செய்வேன். காலை 10 மணி ஆகும்போது நல்ல கிழங்கும், சுண்டல் கடலையும் கிடைக்கும் அதன் சுவை தனி ருசிதான். மதிய நேரம் வீட்டில் இருந்து கொண்டு வந்த சோற்றை சாப்பிடுவேன். மாலை வேளையில் நல்ல ஒரு 'டீ' கிடைக்கும்.

இப்படியாக வேலைக்குச் சென்றதனால் எனது படிப்பும் அத்தோடு முடிந்துபோனது. இப்படி நான்கு வருடம் அப்பாவுடன் வேலை பார்த்து எனது வாலிபப் பருவத்தைக் கழித்தேன். வேலை செய்து திரும்பும்போது அப்பா என்னையும் அழைத்துக் கொண்டு சாராயக் கடைக்குச் செல்வார். அப்பா இரண்டு லிட்டர் சாராயத்தை அருந்துவார். நான் கிழங்கும், மீனும் சாப்பிடுவேன்.

இப்படி சாராயக் கடைக்குச் சென்றுச் சென்று சில நாட்களில் அப்பா கையாலேயே எனக்கு சாராயம் குடிப்பதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது. அந்த வாய்ப்பை சந்தோஷமாக நான் பயன்படுத்தினேன். அன்று இரவு சாராய மந்தத்தால் நிம்மதியாக தூங்கினேன்.

இவ்வாறிருக்க அப்பாவுடன் வேலைக்குச் செல்வதற்கு எனக்கு கண்ணியக் குறைவாக இருந்தது. சொந்தமாக வேலை பார்ப்பதற்காக நான் ஊரிலிருந்து அதிகாலையில் புறப்பட்டு விடுவேன்.

அங்கிருந்து நான் ராமாபுரம் என்ற இடத்தைச் சென்றடைந்தேன். அங்கு கொச்சு வர்கிச்சன் என்ற ஒருவரின் வீட்டில் வேலை பார்த்து வந்தேன். இரவு வேளையில் ஒரு சாக்கை விரித்து வீட்டு வராண்டாவில்தான் தூங்குவேன். எனது முதலாளி கொச்சுவர்கிச்சன் ஒரு கிறிஸ்தவராக இருந்தார். அவர் அடிக்கடி என்னிடம் "வேலாயுதா நீ ஒரு கிறிஸ்தவனாகிவிடு, நல்லதொரு கிறிஸ்தவப் பெண்ணை உனக்குத் திருமணம் செய்து தருகிறேன்" என்றெல்லாம் சொல்வார். அதற்கு எனது மனம் இடம் கொடுக்கவில்லை.

காரணம், அந்த ஊரில் ஏற்கெனவே என் இனத்தைச் சார்ந்த தலித் மக்கள் கிறிஸ்தவ மதத்தைத் தழுவி இருந்தார்கள். இந்தத் தலித் மக்களை கிறிஸ்தவர்கள் மிக மோசமாகத்தான் நடத்தி வந்தார்கள். தலித் கிறிஸ்தவர்கள் என்ற கண்ணோட்டத்தில்தான் அவர்களைப் பார்த்தார்கள்.

கிறிஸ்தவனாக மாறினால் எனக்கும் இந்த நிலைதான் என்ற அச்சத்தால்தான் நான் கிறிஸ்தவனாக மாறவில்லை.

மாட்டுச் சாணம் சுமப்பதுதான் எனக்கு அங்கு முக்கிய வேலையாக இருந்தது. சில

நாட்கள் அங்கு தங்கிவிட்டு என் சொந்த ஊருக்குத் திரும்பிவிட்டேன். இப்போது நான் ஒரு இளைஞனாக மாறியிருந்தேன்.

இந்த வாலிபப் பருவத்தில் அம்மாவைப் போய்ப் பார்க்க வேண்டும் என்ற ஆசை என்னுள் எழுந்தது. நான் மனிதனாகி விட்டதால் அப்பாவும் ஒன்றும் சொல்ல மாட்டார் என்று நினைத்து வீட்டிற்குச் சென்றேன்.

அங்கு சென்ற பிறகுதான் தெரிகிறது அம்மா வேறு திருமணம் செய்து விட்டாள் என்று. ஆசைகளும் கனவுகளும் அத்தோடு உடைந்து போயின.

அம்மாவின் சொந்த இடத்தில் ஒரு குடிசையில் நானும் அம்மாவும் என் தங்கை அம்மினியுமாக சந்தோஷமாக இனிவரும் நாட்கள் வாழலாம் என்று நினைத்தேன். எனது ஆசை மண்ணாகிப் போனது. ஒருபோதும் மறக்க முடியாத ஒரு கவலையாக எனது வாழ்வில் அது நின்று நிலைத்தது.

அம்மாவை இழந்த எனக்கு ஒரே ஆறுதலாக என் தங்கை மட்டும் மனதில் தென்பட்டாள். உடனே நான் என் அன்புத் தங்கையைத் தேட ஆரம்பித்தேன். அம்மாவிடம் விசாரித்தபோது தங்கையை எனது அம்மாவின் தம்பி வீட்டில் அதாவது மாமா வீட்டில் விட்டுவிட்டதாக அம்மா சொன்னாள். மாமா எங்கு தங்கியிருக்கிறார் என்று தெரியாமல் அலைந்து ஒருவிதமாக வீட்டைக் கண்டு பிடித்தேன். அது ஒரு வாடகை வீடாக இருந்தது. நான் சென்றடைந்த போது மாமா இல்லை. அத்தையிடம் விசாரித்தபோது தங்கை வெளியில் சென்றிருப்பதாக சொன்னார்கள். வீட்டை விட்டு வந்தபோது அம்மினி வேலைக்குச் சென்றிருப்பதாகப் பக்கத்து வீட்டில் உள்ள ஒரு முஸ்லிம் பெண் என்னிடம் சொன்னாள். "அங்கே ஒரு டீ கடை இருக்கிறது. அங்கு உன் தங்கையை நல்லா வேலை வாங்குகிறார்கள்" என்று அப்பெண்மணி சொன்னாள்.

நான் அந்த டீ கடை பக்கம் விரைந்து சென்றேன். அங்கு சென்று பார்த்த போது எனது மனம் திடுக்கிட்டுப் போனது. "எனது தங்கையா இது?" அந்த டீ கடையின் பின்வாசலில் ஆட்கள் சாப்பிட்டுவிட்டு போடுகின்ற எச்சில் இலைகளுக்கிடையில் எனது தங்கையின் வாடிய முகம் தெரிந்தது.

அங்கு அவள் சகிக்க முடியாதத் தோற்றத்தில் பாத்திரம் கழுவிக் கொண்டிருந்தாள். இதைப் பார்த்தபோது எங்கேனும் அமர்ந்து அழ வேண்டும்போல் இருந்தது.

உடனே நான் அவளை அங்கிருந்து அழைத்து வந்தேன். கை முழுவதும் சொறி பிடித்து, தலை முழுவதும் புண்ணாகவும் அந்தப் புண்களுக்கு மேலாக பேன் ஊறிக்கொண்டிருந்தது.

எனது 12 வயதான தங்கையைப் பார்ப்பதற்கு எனக்கு சகிக்க வில்லை. கொஞ்சம்கூட ஈவிரக்கமில்லாமல் என் இளம் வயது தங்கையை படாத பாடு படுத்தியிருக்கிறார்கள் எனது அம்மாவின் வீட்டார்கள். அவளை ஒரு குளத்தில் குளிக்கச் செய்து அங்கிருந்து வீட்டிற்கு அழைத்து வந்தேன்.

அம்மாவோ வேறு திருமணம் முடித்து விட்டாள்! அப்பாவிற்கோ புது மனைவி! எனது தங்கையின் நிலைமையோ அந்தோ பரிதாபம்! இவற்றையெல்லாம் பார்த்து நொந்த மனதோடு வீட்டைச் சென்றடைந்தேன்.

இரண்டாவது அம்மாவிடம் எனது தங்கையை விடுவதற்கு எனது மனம் இடம் கொடுக்கவில்லை. எனது அத்தை அவளுக்கு இழைத்த கொடுமையை அவள் திரும்பவும் அனுபவிக்க வேண்டுமா? அப்படியிருக்க என்னிடம் மிகவும் அன்பு செலுத்துகின்ற அப்பாவின் தங்கை ஒருத்தி இருந்தாள். அவளின் பெயர் குஞ்ஞாளி. எனது தங்கையை குஞ்ஞாளியின் வீட்டில் விட்டேன்,

நான் சம்பாதிப்பதை எனது தங்கைக்காக சேகரித்து வைக்கலானேன். அவளை ஒரு நல்ல இடத்தில் திருமணம் செய்து கொடுப்பதுதான் இலட்சியமாக இருந்தது.

இப்படிச் சிறிது காலம் சென்றது.

என் தங்கை பருவமடைந்தாள். குஞ்ஞாளி வீட்டில் அவளை விட்டு ஒரு வருடம் கடந்து விட்டது. இனி அவளை அங்கு விடுவது சரியல்ல என்று எனக்குத் தோன்றியது. அப்பாவின் சம்மதத்தோடு நான் தங்கையை வீட்டிற்கு அழைத்து வந்து எனது சித்தியிடம் விட் டேன். அப்போது சித்தி நாலாவது பிள்ளையைப் பெற்றெடுத்தாள்.

ஒருவிதமாக எனது தங்கை 17 வயதை அடைந்தபோது, நான் சம்பாதித்ததின் மூலம்

மூன்று பவுன் நகையையும் ஆயிரம் ரூபாய் வரதட்சணையும் கொடுத்து எனது தங்கையின் திருமணத்தை நடத்தி முடித்தேன்.

அம்மாவிடம் சென்று திருமணத்திற்காக அழைத்தேன். அம்மாவோ அவள் பெற்ற பிள்ளையின் திருமணத்திற்கு வரவே இல்லை. புது கணவனும் பிள்ளையுமாக அவள் சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருந்தாள்.

சொந்தம் என்று சொல்லிக்கொள்ள எனக்கு இருந்த ஒரே சொத்து எனது தங்கை. தங்கையை ஒரு மாதத்திற்கு ஒருமுறை சென்று பார்த்து வருவேன். என்னால் முடிந்தளவு பொருட்களை வாங்கிச் செல்வேன். என் தங்கையைப் பார்த்து விட்டு வரும்போதுதான் எனது மனதுக்கு ஒரு நிம்மதி. மூன்று பிள்ளைகளைப் பெற்று அவள் சந்தோஷமாக வாழ்ந்து வந்தாள்.

நான் தனியாக இருந்தேன்!

இதன்பிறகு எனது முழுக் கவனமும் ஆர்.எஸ்.எஸ். மீது சென்றது. ஆர்.எஸ்.எஸ்.–ன் பணியில் நான் தனியொரு சுகத்தைக் கண்டேன். கல் வெட்டும் தொழில் முடிந்தால் முழுக் கவனமும், உழைப்பும் ஆர்.எஸ்.எஸ்.–ஸிற்காகத்தான்.

சிறு பருவத்தில் நான் ஊரில் கோவிலுக்குச் சென்றுவிட்டு வெளியே வரும்போது சில இளைஞர்கள் வெளியில் நின்று "இந்துக்களெல்லாம் ஒன்று, இந்து நடைமுறை ஒன்றாகும்" என்று பாடுவார்கள். இவர்கள்தான் இந்த ஆர்.எஸ் எஸ். காரர்களா? என்று எனது சிறுவயதில் நான் பார்த்தவற்றை வைத்துக் கணித்துக் கொள்வேன்.

ஒரு கும்பலாக கோவிலுக்கு வெளியே நிற்பதும், அதில் ஒரு நபர் சொல்லிக் கொடுக்க மற்றவர்களெல்லாம் இணைந்து பாடுவதும், கோவிலில் வேறு சில வணக்கங்களில் ஈடுபடுவதும்தான் என்னை அந்த அமைப்பில் ஈர்த்தது. சொந்த பந்தம் எதுவுமில்லை எனக்கு ஆர்.எஸ். எஸ். ஒரு சொந்தமாக மாறியது.

அதற்காக கடுமையாக உழைக்க நான் உறுதி பூண்டேன்.

எனது நாடு முஸ்லிம்கள் அதிகமாக வாழக் கூடிய ஒரு நாடாகும். "முஸ்லிம்கள் இந்த நாட்டின் கொள்ளைக்காரர்கள், குழப்பக் காரர்கள், கோவில்களை இடிக்கக்கூடியவர்கள் என்றெல்லாம் அவர்கள் பாடம் சொல்லித் தந்தார்கள்.

இதையெல்லாம் கேட்ட எனக்கு அவர்களோடு ஒருவிதமான நெருக்கம் ஏற்பட்டது. அவர்களது சாகாவிலும் நான் கலந்து கொண்டேன். ஒரு நாளைக்கு ஒரு மணிநேரம் சாகாவில் கலந்து கொள்வேன்.

அந்த ஒரு மணிநேரத்தில் இரண்டு விதமான பயிற்சிகள் தருவார்கள். மனதைக் கட்டுப்படுத்துவதற்கான பயிற்சியும், உடல் பயிற்சியும் தருவார்கள். சவர்ணர் என்ற இனத்தைச் சார்ந்தவர், தாழ்த்தப்பட்ட என்னைப் போன்றவர்களுக்குத்தான் பயிற்சிகள் தருவார். இவர்களின் இயக்கத்திற்கு தாழ்த்தப்பட்ட நாங்கள் நன்றாகப் பயன்பட்டோம்.

இந்தப் பயிற்சிகளைப் பெறும்பொழுது ஆர்.எஸ்.எஸ். மீது எங்களுக்கு ஆழமான அழுத்தமான பிடிப்பு ஏற்படும்.

இந்தப் பயிற்சியைப் பெறுபவர்கள் தங்களை முழுமையாக ஆர்.எஸ்.எஸ்.–ல் இணைத்துக் கொள்வார்கள்.

இந்த அமைப்பில் சேர்ந்த உடனேயே கிறிஸ்தவர்கள் மீதும், முஸ்லிம்கள் மீதும் வெறுப்பு உண்டாயிற்று. முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் இவர்களின் ஒவ்வொரு நடவடிக்கையும் இந்தியாவிற்கெதிரானதென்று எங்களை நம்ப வைத்தார்கள். அதுமுதல் முஸ்லிம்களையும், கிறிஸ்தவர்களையும் எதிரிகளாகவே பார்த்தேன்.

ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் முதலில் முஸ்லிம்களுக்கெதிராக எடுத்து வைக்கும் குற்றச்சாட்டு என்னவென்றால் :

"நாமெல்லாம் கிழக்குப் பக்கம் நின்று கடவுளை வணங்கும்போது, முஸ்லிம்கள் மேற்குப் பக்கம் நோக்கித் தொழுகிறார்கள்."

"நாம் கோமாதாவை (பசுவை) சாப்பிடக் கூடாது என்றால் அவர்கள் சாப்பிடுகிறார்கள்."

"நாம் வலது பக்கம் வேட்டி கட்டினால் அவர்கள் இடது பக்கம் வேட்டியைக் கட்டுகிறார்கள்."

மொத்தத்தில் முஸ்லிம்கள் இந்து ஆச்சாரங்களுக்கு எதிராகவே தங்களது வாழ்க்கையை

ஒட்டுகிறார்கள். "இந்துக் களாகிய நாம்தான் இந்த நாட்டுக்குச் சொந்தக்காரர்கள்."

ஆனால் "இந்து" என்ற மதத்தில் தாழ்த்தப் பட்ட நான் ஒரு பகுதியல்ல என்ற விவரம் எனக்குத் தெரியாது. இந்து என்ற மதத்தில் தாழ்த்தப்பட்ட எனக்கு எந்த மதிப்பும் எந்த உரிமையும் இல்லை. ஓரிரு சாதியினரும், பிராம ணர்களும்தான் இந்து மதத்திற்குச் சொந்தக் காரர்கள் என்ற விவரம் அப்போது எனக்குத் தெரியாது.

இந்து மதத்திற்காக உயிரை அர்ப்பணிக்க இவர்கள் மூளைச் சலவைச் செய்து தாழ்த்தப் பட்ட எங்களை பயன்படுத்திக் கொள் வார்கள். இதையெல்லாம் தெரியாமல் அப்போது நான் முழுநேர ஊழியனாக ஆர்.எஸ்.எஸ்.–ஸில் பணியாற்றி வந்தேன்.

இவர்கள் திப்பு சுல்தானைப் பற்றி ஒரு அபாண்டமான பொய் வரலாற்றைக் கூறுவார்கள்:

"திப்பு போர் செய்யும்போது நமது மதத்தின் ஆண்களை யெல்லாம் வெட்டி வீழ்த்திவிட்டு நம் சகோதரிகளான இந்துப் பெண்களைச் சிறை வைத்து ஆசை தீர கற்பழிப்பான். ஆலுவா மணிப் புரத்தைச் சேர்ந்த சிவனின் அனுகிரகத்தால் நமக்கு அப்போது அதிக நஷ்டம் ஏற்பட வில்லை.'' என்றெல்லாம் வெறுப்பூட்டும் பொய்களை எங்களுக்குச் சொல்லித் தருவார்கள்.

இதையெல்லாம் இதயத்தில் சுமந்த என்னைப் போன்றவர்கள் முஸ்லிம்களை கடுமையாக வெறுத்தோம்! எதிர்த்தோம்!! அழிக்க ஆசை கொண்டோம்!!!

முஸ்லிம்களின் தாடியைக் கண்டால் வெறுப்பு, அவர்களின் தோற்றத்தைக் கண்டால் வெறுப்பு, அவர்களை முழு உருவத்தில் காணும் போது கடித்துக் குதறிவிடலாம் என்ற எண்ணம். அதிலிருந்து முஸ்லிம்களை எதிர்ப்பதும் அவர் களுக்கெதிராகப் பிரச்சாரம் செய்வதும்தான் எனது முழுநேர தொழிலாக மாறியது.

அப்போது (Contract Workers Sangh) ஒப்பந்த ஊழியர்களின் சங்கம் என்ற அமைப்பு, ஆர்.எஸ். எஸ்.–ஸின் கீழ் உருவானது.

இந்த ஒப்பந்த ஊழியர்களின் சங்கத்தின் செயலாளராக நான் வேலை பார்த்து வந்தேன். மேடைப் பேச்சுக்கு தகுதியானவன் என்ற தால்தான் எனக்கு அந்தப் பதவி கிடைத்தது. அந்த சமயத்தில் எங்களது எதிரியாக CITU என்ற தொழிற் சங்கம் இருந்தது. அதற்கெதிராக போராடிட நாங்கள் தீர்மானித்தோம். CITU என்ற தொழிற் சங்கத்தின் தலைவர் 'குடிலில் பாஸ்கர் மேனோன்' என்பவர்.

இந்த இரண்டு அமைப்பைச் சேர்ந்தவர்களும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர்கள். சவர்ணர் என்ற மேல் ஜாதிக்காரர் (அதாவது ஆர்.எஸ்.எஸ்.காரர்கள்) இந்தச் சண்டைகளில் கலந்துகொள்ள மாட்டார்கள். எங்களை தூண்டி விட்டு விட்டு இவர்கள் அமர்ந்திருப்பார்கள். சொகுசாக வாழ வேண்டும் என்ற சுயநலவாதி களாக இருந்தார்கள். அந்த ஆர்.எஸ்.எஸ்.காரர் களான, சவர்ணர், என்ற மேல் ஜாதிக்காரர்கள். இவற்றையெல்லாம் அறியாமல் 'ஏதோ இந்து விடுதலைப் போராட்டம்' என்ற நினைப்பில் மூடத்தனமாக நான் இயக்கத்துக்காக என்னை முழுமையாகத் தந்து கொண்டிருந்தேன்.

ஒருநாள்...

வேணுகோபாலன் நம்பியார் என்ற எங்களது B.M.S. தொழிற் சங்கத் தலைவன் (இது ஆர்.எஸ். எஸ்.–ஸின் தொழிலாளர் பிரிவு) என்னிடம் ஒரு பொறுப்பை ஒப்படைத்தார். CITU வைச் சார்ந்த தங்கப்பன் என்ற நபரை கொலை செய்ய வேண்டும் என்பதுதான் அந்தப் பொறுப்பு.

'பெரும்படம்' என்ற இடத்தைச் சேர்ந்த பிகாசன், சித்திரப் புழயில் உள்ள ப்ரதீப்குமார், தலைவர் வேணுகோபாலன் நம்பியார் இவர்கள் எல்லாம் சேர்ந்து (தங்கப்பனை கொல்வதற்கு) ஓர் இரவு இரகசியத் திட்டம் தீட்டினோம். அடுத்த நாள் காலையில் தங்கப்பனின் எல்லா அசைவுகளையும் நாங்கள் கண்காணித்தோம். இரவில் தங்கப்பனை கொலை செய்ய வேண்டும் என்றுதான் தலைவரது கட்டளை.

சூரியன் மறையும் நேரத்தில்தான் தங்கப்பன் வீட்டிற்குச் செல்வான். இரவு நேரத்தில் தங்கப்பன் ஸ்கூட்டரில் வருவதைப் பார்த்தோம். அம்பலமேட்டில் உள்ள ரிபனரி வழியாக H.O.C.க்கு சமீபமுள்ள சித்திரப்புழை பாலத்தில் ஸ்கூட்டர் வந்து கொண்டிருந்தது. அருகில்

வந்துதும் தங்கப்பனை உருட்டுக் கட்டை கொண்டு தலையில் அடித்தேன். பிரகாசன் கத்தியை உருவி ஒரு குத்து குத்திய அதேமாத் திரத்தில் திடீரென ஒரு பஸ் எங்களது முன்ன ால் வந்து நின்றது. உடனே அங்கிருந்து நாங்கள் ஓடினோம். திரும்பி B.M.S. ஆபிசுக்கு செல்ல முடியாமல் கலகலப்பானதும் சிறிது நாள் நாங்கள் தலைமறைவாக வாழ்ந்தோம். சில நாட்கள் கழித்து திரும்பவும் B.M.S.-க்கும் CITU-க்கும் சண்டைகள் உருவானது. நான் BMS. R.S.S. தொழிற்சங்கத்திற்காக CITU பார்டியோடு போராட வேண்டி வந்தது.

இரு பார்ட்டிகளுக்கும் சண்டைகள் தொடங் கிற்று. இந்தச் சண்டைகளுக்கும், துன்பங்களுக் கும் இரையானோம். இந்தப் போரில், மோதலில் எனது ஒரு கால் முறிந்து தொங்கியது. இரத்தம் மடமடவென கொட்டிக் கொண்டிருந்தது. போலீஸ் சம்பவ இடத்திற்கு வந்ததும் நாங்கள் ஓடி தலைமறைவாக முற்பட்டோம். ஆனால் கொஞ்சம் கூட ஈவு இரக்கமில்லாமல் முறிந்து தொங்கும் எனது ஒரு காலையும், வடிகின்ற இரத்தத்தையும் பொருட்படுத்தாமல் போலீஸ் என்னைக் கடுமையாகத் தாக்கியது.

இவ்வளவு துன்பங்களையும் அனுபவித்த பிறகு நான் தொங்குகின்ற காலோடு மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டேன். சிறிது காலம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தேன். இத்தனை துன்பங்களுக்குப் பிறகும் மருத்துவ மனையில் நான் இருக்கும் பொழுது ஒரு ஆர்.எஸ்.எஸ்.காரர் கூட என்னை வந்து சந்திக்கவே இல்லை.

ஆர்.எஸ்.எஸ்.ஸின் திட்டத்தின் கீழ் நடந்த சண்டையில் மீன் விற்று தனது வாழ்க்கையை ஓட்டுகின்ற தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த உன்னி கிருஷ்ணன் ஆர்.எஸ்.எஸ்.ஸிற்காக தனது உயிரை இழந்தான். அவனது இறுதி சடங்குகளில் பங்கெடுப்பதற்குக் கூட முடியாமல் போயிற்று.

எங்களை வெறியூட்டி களத்தில் இறக்கிய நம்பியாரின் கூட்டத்திற்கோ எந்த ஒரு பாதிப்பும் ஏற்படவில்லை. எங்களுக்கு ஊக்கம் கொடுத்து விட்டு அவர்கள் தப்பித்துக் கொண்டார்கள்.

40 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். இந்த மருத்துவமனை வாழ்க்கையில் எனக்கு உற்ற துணையாக ஒருத்தி இருந்தாள். அவள் வேறு யாருமில்லை நான் ஆர்.எஸ்.எஸ். ஸில் சாகா பயிற்சி எடுக்கும்பொழுது பக்கத்தில் ‘சாந்தா’ என்ற ஒரு பெண்ணுடன் பழகிவந்தேன். அந்தப்பழக்கம் காதலாக உருவானது. அவள் ஒரு தேவர் இனத்தைச் சார்ந்த ஒரு ஆர்.எஸ்.எஸ். குடும்பத்தில் பிறந்த பெண்.

மருத்துவமனையில் எனது காலின் நிலைமை மிக மோசமாக இருந்தது. காலைத் துண்டித்து மாற்ற வேண்டும் என்று டாக்டர் சொல்லி விட்டார். தனிமையான வாழ்க்கை அப்போது தான் எனது மனதில் துக்கத்தை ஏற்படுத்தியது. இந்த நிலையில் கால் முறிந்ததால் பிழைப்பிற்கு வழியில்லாமல் கஷ்டப்படுவேன் என்ற எண்ணத்தில் காலை துண்டித்து எடுக்க நான் சம்மதிக்கவில்லை.

உடனே நான் ஆஸ்பத்திரியை விட்டு வெளியே வந்து ஒரு ஆர்.எஸ்.எஸ்.காரரான எனது தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவனி டம் உதவி தேடினேன். அவன் என்னை ஒரு நாட்டு வைத்தியரிடம் அழைத்துச் சென்றான். கடுமையான முயற்சிக்குப் பின் சிறிது நாளில் எனது காலும் சரியானது. உடனே நான் எனது வீட்டிற்கு திரும்பினேன். அப்போது ஆர்.எஸ். எஸ்.காரர்கள் என்னை அமைப்பிலிருந்து வெளி யேற்றி விட்டார்கள்.

சாந்தா என்ற அந்த ஆர்.எஸ்.எஸ். உயர் குடும்பத்தைச் சார்ந்த பெண்ணுக்கும் எனக்கும் தொடர்புகள் அதிகமாயின.

நான் தாழ்த்தப்பட்ட இனத்தை சார்ந்தவ னாக இருப்பதால் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் இதை கடுமையாக எதிர்த்தார்கள். அப்போதுதான் எனக்கு தெரிந்தது.

“இந்துக்கள் எல்லோரும் சமமானவர், இந்து மதத்தை நாம் நன்றாக பேணிக் காப்போம்” என்ற இவர்களது கோஷம் பொய்யனாது என்று.

இதிலிருந்து ஆர்.எஸ்.எஸ்.–ஸிற்காக வேலை செய்வதை நான் தவிர்க்கலானேன். ஆர்.எஸ். எஸ்.–ஸில் உயர் ஜாதி இனத்தைச் சார்ந்தவர்கள் சொகுசாக வாழ, தாழ்த்தப்பட்ட மக்களான நாங்கள் பல இன்னல்களுக்கும், துன்பங்களுக்கும் ஆட்பட்டு எங்களது சொந்த வாழ்க்கையைப் பற்றியே சிந்திக்காமல் ஏமாந்தவர்களானோம்.

*1991*–ல் திரும்பவும் எனக்கு ஆர்.எஸ்.எஸ்.–ஸின் அரசியல் கட்சியான பி.ஜே.பி.–யில் ஒரு பதவி கிடைத்தது. எர்ணாகுளம் மாவட்ட கவுன்சிலர் தேர்தலில் போட்டியிட்டு பதவி கிடைத்தது. இதிலிருந்து கொண்டு தாழ்த்தப் பட்ட மக்களுக்காக குரல் கொடுக்கலாம் என்று நினைத்தேன். இதிலும் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் தலையிட்டு அதையும் கலைத்தார்கள். பி.ஜே.பி.யும் ஆர்.எஸ்.எஸ்.ஸும் எனக்கெதிராக மாறின.

நான் அங்கிருந்து சாந்தாவையும் அழைத்துக் கொண்டு இரவோடு இரவாக சொந்த ஊருக்குச் சென்று விடலாம் என்று எண்ணினேன். ஓர் இரவு நேரத்தில் நான் சாந்தாவை யாரும் பார்க்காமல் வீட்டில் இருந்து அழைத்து வந்தேன். இரவு முழுவதும் ஒரு முஸ்லிம் பெண்ணின் வீட்டில் தங்க வைத்தேன். நாங்கள் இருவரும் ஆர்.எஸ்.எஸ். காரர்கள் என்று தெரிந்தும் அந்த முஸ்லிம் பெண் எங்களுக்கு அடைக்கலம் கொடுத்தாள்.

இப்படி ஒருவிதமாக நான் ஊரை வந்தடைந்தேன். திருமணம் முடிந்த சில மணிக் குள்ளாகவே காவல் துறையினர் எனது வீட்டிற்கு வந்தார்கள். ஸ்டேஷன் வருமாறு அவர்கள் என்னிடம் கூறினார்கள். இன்று என்னால் வர இயலாது, நாளைக்கு வருகிறேன் என்று சொல்லி அவர்களை அனுப்பி வைத்தேன்.

மறுநாள் காலை ஸ்டேஷன் செல்லும்போது சாந்தாவின் அப்பாவும், அம்மாவும் அங்கே இருக்கிறார்கள். இருபத்தி ஐந்தாயிரம் ரூபாயை யும், பத்து பவுன் நகையையும் இவன் திருடிக் கொண்டு போய்விட்டான் என்று சாந்தாவின் அப்பா சப்–இன்ஸ் பெக்டர் கோவிந்தனிடம் புகார் கொடுக்கிறார்.

இவர் இப்படி பேசமாட்டார் என்று எனக்கு நன்றாகத் தெரியும். இதற்குப் பின்னாலும் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் செயல்படுகிறார்கள் என்று எனக்குத் தோன்றியது. அது நிஜமாகவும் இருந்தது.

இதிலிருந்து எனது வீட்டில் பல பிரச்னைகள் உருவாகத் தொடங்கின. நாங்கள் இருப்பது இரண்டாவது அம்மாவின் வீடானதால் அவர்களுக்கு இத்திருமணத்தில் கொஞ்சம் கூட விருப்பமே இல்லை.

உடனே நான் தனியாக இவர்களை விட்டு பிரிந்து செல்வோம் என முடிவெடுத்து இரண்டு பேருமாக ஒரு சின்ன குடிசையில் எங்களது வாழ்க்கையைத் தொடங்கினோம். அப்போது நான் ஆட்டோ ஓட்டிக் கொண்டிருந்தேன். அதனால் கொஞ்சம் வருமானம் இருந்தது.

வேலை செய்து, கொஞ்சம் பணம் சேர்த்து எனது ஊரில் அம்பேத்கர் காலணியில் ஒரு மூன்று சென்ட்டு இடம் வாங்கினேன். அங்கே ஒரு சின்ன செட் கட்டினோம். அங்கே வைத்து எனக்கு ஒரு குழந்தை பிறந்தது. மீரா என்று அதற்குப் பெயர் சூட்டினேன். இப்போது ஜாஸ்மின் என்பது அவளது பெயர்.

குழந்தை பிறந்ததும், திரும்பவும் பொருளா தாரச் சிக்கல் ஏற்பட்டு மிகவும் கஷ்டப்பட வேண்டியதாயிற்று. வேறு வழியில்லாமல் எனது ஆட்டோவைவிற்றுபழையதொழிலானகருங்கல் உடைப்பதற்கும், மரம் சுமக்கவும் சென்றேன்.

சில நாட்கள் சென்றபோது தலித் விகஸன் கார்ப்பரேஷன், தலித் மக்களுக்காக வீடும், இடமும் வாங்குவதற்கு அரசு பணம் கொடுக் கின்றது என்று கேள்விப்பட்டேன். எனது இப்போதையஷெட்டைமாற்றிவிட்டுவீடுகட்டு வதற்கு மனு கொடுத்தேன். அன்றும் நான் பி.ஜே.பி.யின் ஒரு உறுப்பினராகத்தான் இருந்தேன். கருத்து வேறுபாடுகள் இருந்ததால் கட்சிக்காக வேலை ஒன்றும் செய்ய முற்படவில்லை.

இப்படி இருக்க பி.ஜே.பி.யும் ஆர்.எஸ்.எஸ்.ஸும் சேர்ந்து எனக்கு கிடைக்கப் போகின்ற அந்த உதவியைத் தடுப்பதற்கு பல வழிகளையும் கையாண்டார்கள். எல்லா வழியிலும் என்னை ஒதுக்க வேண்டும் என்ற ஒரே இலட்சியத்தில் அவர்கள் செயல்பட்டார்கள். ஆனால் அரசு எனக்கு சாதகமானதால் அவர்களது திட்டம் நடைபெறாமலும் எனக்கு வீடு கட்டுவதற்கு உதவியும் கிடைத்தது. உடனே வீடு கட்டவும் செய்தேன்.

ஆர்.எஸ்.எஸ்.ஸிற்காக உயிரைக் கொடுத்து தனது சொந்த வாழ்க்கையைக் கூட பொருட் படுத்தாமல் பல இன்னல்களுக்கும், துன்பங் களுக்கும் ஆளான நான் அவர்களின் உயர் குலத்துப் பெண்ணை திருமணம் முடித்ததற்காக எல்லாவற்றையும் மறந்து கொஞ்சம் கூட நன்றி யில்லாமல் எனக்குத் துரோகம் செய்வதற்கு முன்

வந்தார்கள் அந்த ஆர்.எஸ்.எஸ்.காரர்கள்.

## திருப்பு முனை

பி.ஜே.பி.யும் ஆர்.எஸ்.எஸ்.ஸும் எனக்கு ஒரு பிரச்சனையாக மாறியவுடன் அவர்களுக் கெதிராக நான் போராட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன்.

தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த சில இளைஞர்குழுவை நியமித்து, பி.ஜே.பி., ஆர்.எஸ். எஸ். ஆகியவற்றின் சதி வேலைகளை இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வெளிச்சம் போட்டு காட்ட வேண்டும் என்று தீர்மானித்தேன். இதனை அம்பேத்கர் கல்வி மையம் மூலம் வெளிப்படுத்திக் காட்டினேன். சிறிது நாட்களில் நியமித்த அந்த இளைஞர்கள் ஆர்.எஸ்.எஸ்.–ஸின் பயத்தால் என்னை தனிமைப்படுத்தி னார்கள். சில சதி வேலைகளில் என்னை சிக்க வைக்க முயற்சி செய்தார்கள். அம்பேத்கர் கல்வி மையத்தை ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள்.

இந்த நேரத்தில் அப்துல் நாசர் மஹ்தனி யின் பாபரி மஸ்ஜித் பற்றிய தீப்பொறி பிரசங்கம் நடந்து கொண்டிருந்தது. ஆர்.எஸ்.எஸ். உள்ளிட்ட அமைப்புக்களுக்கெதிராக கடுமை யான முடிவுகளை எடுக்கக்கூடிய ஒரு நபர்தான் நாஸர் மஹ்தனி என்ற எண்ணம் தான் எனக்கு மிருந்தது. அம்பேத்கர் கல்வி மையத்தை சங்கப் பரிவாரத்திடமிருந்து மீட்க எனக்கு நாஸர் மஹ்தனியின் உதவி தேவைப்பட்டது. அவரைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை என்னை தொற்றிக் கொண்டது.

நான் ஆர்.எஸ்.எஸ்.ஸை விட்டு ஊரில் தனிமையாக நிற்கும் போது ஒரு சில முஸ்லிம் இளைஞர்கள் எனது நண்பர்களானார்கள். எனது வாழ்க்கையில் முதல் முதலாக பழகிய இரண்டு முஸ்லிம் நண்பர்கள்தாம் ரபீக்கும், அஃப்சலும்.

ஒருநாள் இவர்கள் என்னிடம் சொன்னார்கள் :

“வேலாயுதா நீ மஹ்தனியோடு சேர்ந்து நின்று பணியாற்று. ஆர்.எஸ்.எஸ்.ஸுக்கும் பி.ஜே.பி.க் கும் பதிலடி கொடுப்பவர் அவர்தான்” என்று சொன்னார்கள்.

ஓர் இரவில் அவர்கள் என்னை மஹ்தனியைப் பார்ப்பதற்கு அழைத்துச் சென்றார்கள். அன்று தான் முதன்முதலாக முஸ்லிம் நண்பர்களுடன் பயணம் செய்யும் வாய்ப்புக் கிடைத்தது.

மஹ்தனியின் அந்த வீரமான தோற்றத்தை பார்ப்பதற்கு எனக்கு ஒருவித அச்சமாகத்தான் இருந்தது. தலித் இனத்தை, தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த என்னை அவர் ஏற்றுக் கொள் வாரா? என்னிடம் பேசுவதற்கு விருப்பப்படு வாரா? என்றெல்லாம் எனது மனம் கலங்கியது.

இவ்வாறாக ஒரு விதத்தில் எர்ணாகுளம் ஃபீரிடம் சாலையில் இருக்கின்ற என்.எம். மெஹ்பூபின் வீட்டிற்கு தான் என்னை அழைத்துச் சென்றார்கள். வீட்டின் மேல் மாடிக்கு என்னை அழைத்துச் சென்று தனிமையாக ஓர் இடத்தில் உட்கார வைத்தார்கள். நாஸர் மஹ்தனியை பார்ப்பதற்கு ஒருவித அச்சமாகத்தான் இருந்தது.

ஏனென்றால் நானும் ஓர் ஆர்.எஸ்.எஸ். காரனாகத்தானே இருந்தேன். மஹ்தனி மீது வெடிகுண்டு எறிந்து அவரது காலை முறித்தது ஆர்.எஸ்.எஸ். காரர்கள் அல்லவா? என்னை ஏதாவது செய்யப்போகிறாரா? தனிமையில் சிக்கிக்கொண்டேனோ? என்றெல்லாம் எனது மனம் அச்சத்தால் அல்லாடிக் கொண்டி ருந்தது.

சிறிது நேரம் கடந்ததும் அலாதியானத் தோற்றத்தில் பிரகாசமான முகத்தோடு நாஸர் மஹ்தனி படியேறி வந்தார். ஒருகால் ஊனமான தால் வேறொரு நபரின் தாங்கலோடு ஏணிப்படி ஏறி வந்து என் முன்னே உட்கார்ந்தார்.

பத்து நிமிடம் நாங்கள் இருவரும் பேசிக் கொண்டோம். என்னைப் பற்றியும் வீட்டு நிலவரம் பற்றியும் ரொம்ப அக்கறை யோடும் ஆவலோடும் விசாரித்தார்.

எர்ணாகுளத்தில் மஹ்தனி கட்சியின் மாநாடு நடக்கிறது. கட்சியில் முழுமையாகச் செயல்பட வேண்டும் என்று கூறி பி.டி.பி.யை எனக்கு அறிமுகப்படுத்தினார்கள். நாஸர் மஹ்தனியின் கட்சியின் பெயர் மக்கள் ஜனநாயக கட்சி (Peoples Democratic Party) PDP என சுருக்கமாகக் கூறுவார்கள்.

எர்ணாகுளத்தில் கட்சியின் மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டி ருந்தது. அதில் நானும் கலந்து கொண்டேன். மஹ்தனியின் தீப்பொறி பறந்த பேருரையை நான் கேட்டேன்.

ஆர்.எஸ்.எஸ்., பி.ஜே.பி.–க்குஎதிராகஅவரது பேச்சும், ஆவேசமும் தாழ்த்தப்பட்ட மக்களின் பக்கமுள்ள அவரது மன ஈர்ப்பும் என்னை நன்றாக கவர்ந்தன. மேடையில் வேலாயுதன் என்று என்னையும் அறிமுகப்படுத்தினார்கள். (பி.ஜே.பி.யையும் ஆர்.எஸ்எஸ்.ஸையும் எதிர்த்து வரும்போது உன்னை ஒரு மேடையிலும் சேர்க்க மாட்டங்கடா, பறைய இனத்தைச் சார்ந்த உனக்கு யாரும் அடைக்கலம் தரமாட்டார்கள் என்றெல்லாம் பி.ஜே.பி. மற்றும் ஆர்.எஸ்.எஸ். தொண்டர்கள் என்னிடம் அன்று கூறினார்கள்)

பல மேடைகளில் எனக்கு பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்தது. ஆர்.எஸ்.எஸ்.–ஸின் சதி வேலைகளை சொல்வதற்கு, தலித்துகளுக்காக மேடையில் பேசுவதற்கும் எனக்கு கிடைத்த வாய்ப்பை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டேன்.

இப்படி நாசர் மஹ்தனியின் கட்சியான ஜனநாயக மக்கள் கட்சியின் ஒரு முக்கியப் பங்காளியாக நான் மாறினேன். முஸ்லிம் மக்களின் அரவணைப்பும் அவர்களுக்கு என்னிடமிருந்த பாச குணமும் என் மனதை பெரிய அளவில் மாற்றியது.

இருந்தாலும் கட்சியின் ஒரு கமிட்டிக் கூட்டம் எர்ணாகுளத்தில் நடக்கும் போது நாசர் மஹ்தனியின் மாவட்ட செயலாளர் சித்திரபானு என்ற நபர் என்னிடம் இப்படிக் கூறினார்.

“வேலாயுதா நீ உஷாராக இரு, மஹ்தனி உன்னை கொலை செய்துவிட்டு ஆர்.எஸ்.எஸ். காரன் கொன்றதாகக் கூறிவிடுவார்.”

கட்சிக்காக ஒரு இரத்த சாட்சி என்ற முறையில் இந்த விஷயம் எனது மனதை உறுத்திக் கொண்டிருந்தது. இதை நான் நேரடியாக மஹ்தனியிடம் கூறினேன். மஹ்தனி கோபப்பட்டார்.

கட்சியின் பொதுச் செயலாளர் இருக்கும் போதுதான் இதை நான் மஹ்தனியிடம் கூறினேன். அப்போதுதான் வெடித்தது கலகம். சித்திரபானுவின் மகன் ஒரு ஆர்.எஸ்.எஸ்.காரன். சித்திரபானுவும் இரகசியமாக ஆர்.எஸ்.எஸ்.ஸில் பணி புரிந்து வந்தார். என்னை மக்கள் ஜனநாயக கட்சியிலிருந்து மாற்றுவதற்கு ஆர்.எஸ்.எஸ். கைகொண்ட தந்திரம் இது.

நாசர் மஹ்தனியின் மக்கள் ஜனநாயக கட்சியில் வந்து சேர்கின்ற தலித் இனத்தவரை அகற்றுவதற்காக சங்கப்பரிவாரத்தினர் செய்த தந்திரம்தான் இது. இந்த தந்திரத்திற்கு பயன் படுத்திய சித்திரபானு ஏற்கெனவே ஆர்.எஸ்.எஸ்.ஸில் இருந்ததால் எனக்கு இந்த சூழ்ச்சி எளிதில் புரிந்துவிட்டது. உடனேயே சித்திரபானுவை பி.டி.பி.யிலிருந்து வெளியேற்றினார்கள்.

தலித் இனத்தவர்களை எப்படியேனும் அழிக்க வேண்டும் என்ற கூட்டு ஆலோசனை தான் ஆர்.எஸ்.எஸ். நடத்திக் கொண்டிருந்தது. அன்றைய நாட்களில் சவர்ணர்கள், தலித்களை வீதியில் போட்டுக் கொன்றார்கள். இன்றோ இந்த சவர்ணர்கள்தான் உயர் ஜாதியினர் ஆர்.எஸ்.எஸ். ரூபத்தில் அவர்களை சதி செய்து கொலை செய்கிறார்கள்.

ஒரு காலத்தில் நாசர் மஹ்தனி பாபரி மஸ்ஜித் இடிக்கப்பட்டதை முன்னிறுத்தி மேடைப் பேச்சுக்களை தீவிரமாக பேசும் போது அது கேட்க கேட்க கோபம்தான் வந்து கொண்டிருந்தது எனக்கு. ஏனென்றால் சிறு வயதில் அம்மா சொல்லிக்கொடுக்கின்ற ஒரு ராம சவனம் நினைவுக்கு வரும்


“ராம ராம ராம ராம் பாஹிமாம்” (ராமபாதம் சேரணே முகுந்தராம பாவரிமாம்)

இப்படி ராமபாதம் சேருவதுதான் மிகவும் உயர்ந்தது என்று அம்மா சிறு வயதில் எனக்குச் சொல்லிக் கொடுப்பார்கள்.

அந்த ராமன் பிறந்த இடத்தில்தான் திரும்பவும் பாபரி மஸ்ஜிதை நாங்கள் கட்டுவோம் என்று மேடையில் பேசுகின்ற மஹ்தனியை பார்க்கும்போதெல்லாம் எனக்கு வெறுப்பும், கோபமும் பொத்துக் கொண்டு வரும்.

மாலை நேரம் சுமார் 4 மணிக்குத்தான் பாபரி மஸ்ஜித் தகர்க்கப் பட்ட செய்தியை நான் அறிகிறேன். அன்று முழுவதும் நானும் ஆர்.எஸ்.எஸ். நண்பர்களும் மிகுந்த சந்தோஷத்தில் இருந்தோம். எனது சாகாவின் எதிரொலி கேரளத்தில் நடக்க வில்லையென்றாலும், பைசாபாத்தில் நடந்தேறியது எனக்கு மிகுந்த சந்தோஷத்தையும், சாகாவின் மீது அதிக ஈர்ப்பும் ஏற்பட்டது.

இதற்கெல்லாம் மறுப்பாகவும், எதிர்ப்பாகவும் பாபரி மஸ்ஜித் திரும்பவும் கட்டப்பட வேண்டும் என்ற ஒரே எண்ணத்தோடுதான்



பி.டி.பி.யின் பின் துணையோடு அயோத்தி சென்றேன். 1996–ல்.

## அயோத்தி பயணம்

1996 டிசம்பர் 30 தேதி எர்ணாகுளத்திலிருந்து ரயில் ஏறினேன். அந்த இரண்டு நாட்களிலும் கடந்த கால நிகழ்வுகளைப் பற்றி சிந்தித்துக் கொண்டே சென்றேன்.

லக்னோவில் சென்றிறங்கினால் ஒரு பெரும் முஸ்லிம் சமூகம் எங்களை வரவேற்கும் என்ற எண்ணம் எனது மனதில் இருந்தது. அங்கு சென்று இறங்கும்போதுதான் தெரிகிறது, போலீஸ் பட்டாளம் தெரு முழுவதும் நிறைந்து நின்றது.

பாபரி மஸ்ஜித் தகர்க்கப்பட்ட டிசம்பர்–6 முதல் அங்குள்ள முஸ்லிம்கள் பயத்தால் செத்துப் பிழைத்துக் கொண்டிருந்தார்கள்.

பாபரி மஸ்ஜித் என்று பேசுவதற்குக்கூட அவர்கள் அஞ்சி நடுங்கினார்கள்.

கேரளத்தின் மக்கள் தொகைக்கு சமமான உத்திரப் பிரதேச முஸ்லிம் மக்களின், இந்த உள்ளத்தைப் பார்த்து எனக்கு மிகவும் வேதனையாக இருந்தது.

கேரளத்தில் தாழ்த்தப்பட்ட தலித் இனத்தாரும் உ.பி.–ல் முஸ்லிம்களும் சங்கப்பரிவாரின் தந்திரங்களுக்கு இறையாகி தரைமட்டமாக ஆகிவிடுகிறார்களே என்ற எண்ணம் தான் எனது உள்ளத்தில் வேதனையில் ஆழ்ந்து கொண்டிருந்தது.

இத்துணை எளிமையாகவும், இனிமையாகவும் பாசமும் காட்டுகின்ற முஸ்லிம் சமூகத்தையா, மிகவும் கீழான இட்டுக் கட்டப்பட்ட அவதூறுகளைச் சொல்லி, அழிக்கத் துடிக்கின்றார்கள். அவர்களின் சின்னங்களையும் பள்ளிகளையும் அவதூறு பேசுகிறார்கள் என்று எனது மனம் கவலையில் வாடிற்று.

அயோத்தி நோக்கி நாங்கள் மேற்கொண்ட பயணத்தில் நான் கலந்துகொள்ள வில்லையென்றால் இதையெல்லாம் நான் தெரிந்திருக்க முடியாது.

அயோத்தி அணிவகுப்பிற்காக சென்ற பிறகு தான் தெரிகிறது இந்த ஆர்.எஸ்.எஸ். வெறியர்கள் இல்லாத ஒரு பழியை முஸ்லிம்கள் மீது வேண்டுமென்றே போட்டு குற்றம் சுமத்தி அவர்களை அழிப்பதற்கு ஆயத்தமாகின்றார்கள் என்ற உண்மை. உத்திரப்பிரதேச மாநிலத்தில் இதனை நடத்திக் காட்டிவிட்டார்கள். இதனை நான் கண்கூடாகக் கண்டேன்.

அயோத்திக்கு மேற்கொண்ட பயணத்தில் நான் கலந்துகொள்ள வில்லையென்றால் முஸ்லிம்களைப் பற்றி இன்னும் மிக கேவலமான கருத்துக்களைக் கொண்டவனாகவே வாழ்ந்திருப்பேன்.

இந்தியாவில் முக்கியமான இஸ்லாமிய கேந்திரங்கள் நிறைந்த உத்திரப் பிரதேசத்தில் முஸ்லிம்கள் இவ்வளவு பிற்போக்குவாதிகளா கவும் கிஞ்சிற்றும் விழிப்புணர்வு இல்லாதவர் களகாவும் போனது ஏன்? என்ற கேள்வி இப்போதும் எனது மனதை உறுத்திக் கொண்டே இருக்கின்றன.

அது மட்டுமல்லாமல் இவ்வளவு சுலபமாக முஸ்லிம்களுக்கு இந்த கசப்பான சம்பவங்கள் நடந்த பிறகும் இன்னொரு முஸ்லிம் சமூகம் அதற்காக கொஞ்சம் கூட வருத்தப்பட வில்லையே ஏன்? அதற்கெதிராக பேசுவதற்கு முயற்சி செய்யாமல் இருப்பதும் என்னுள் வியப்பை ஏற்படுத்தியது.

இப்படியாக முதன் முதலில் கொல்லம் மாவட்டத்தில் குன்னத்தூர் சட்ட மன்ற தொகுதி யில் மக்கள் ஜனநாயக கட்சியின் சார்பில் போட்டியிட்டேன்.

இப்படித்தான் எனக்கு மஹ்தனியின் அன்வா ருஷ்ஷேரியுமாக (ஸ்தாபனம்) பந்தம் ஏற்பட்டது. இந்த ஸ்தாபனம் நாசர் மஹ்தானி யால் ஆர்.எஸ். எஸ்.ஸிற்கு எதிராக நிறுவப்பட்டது.

இந்த நிறுவனத்தைப் பற்றித்தான் நான் எனது ஆர்.எஸ்.எஸ். வாழ்க்கையில் மிகவும் கோபமாக உரையாற்றினேன். ''இந்துக்களை கொன்றொ ழிப்பதற்காக நாசர் மஹ்தனியால் ஸ்தாபிக்கப் பட்ட ஒரு நிறுவனம்தான் அன்வாருஷ்ஷேரி என்றும், அது தீவிரவாதத்தை வளர்க்கின்ற ஒரு முக்கிய நிறுவனம் என்றும் சிறுவர்களுக்கு ஆயுதப்பயிற்சி கொடுக்கின்ற ஒரு நிறுவனம் என்றும் பொய்யைப் பேருரையாக ஆற்றியது எனது நினைவுக்கு வந்தது.

ஓர் இஸ்லாமிய நிறுவனத்தில் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த நான் தங்குவதும், அது மட்டுமல்லாமல் முஸ்லிம்களுக்கு என் மேலுள்ள பாசமும் பரிவும் என் மனதை நன்றாக கவர்ந்தது. எங்களை இவர்கள் தாழ்வாக பார்ப்பார்கள் என்றெல்லாம் நான் முன்னால் நினைத்ததுண்டு. இதெற்கெல்லாம் நேர் மாறாகத்தான் அவர்களது (முஸ்லிம்களது) பழக்க வழக்கங்கள் இருந்தன.

சொல்லித் தீர்க்க முடியாத அரவணைப்பு. அவர்களுடன் ஒன்றாக இருந்து சாப்பிடுவது அவர்களோடு ஒன்றாக ஒரே இடத்தில் தூங்குவது இதெல்லாம் என் மனதில் வேலாயுதன் என்ற நான் ஓர் பிலாலாக மாறுவதற்கு பாதை போட்டுத் தந்தன.

அன்வாருஷ்ஷேரி என்ற நிறுவனம் குறிப்பாக சொல்லப்போனால் ஒரு அநாதைகள் விடுதி – யத்தீம் கானாவாகும். அங்குள்ள அநாதைப் பிள்ளைகள் என்னோடு கொண்டிருந்த மரியாதை இதெல்லாம் தாழ்ந்த இனத்தைச் சார்ந்த எனக்கு ஆச்சர்யத்தை ஏற்படுத்தியது. ஆர்.எஸ்.எஸ்.ஸின் ஒரு தலைவரிடம் கூட இப்படிப்பட்ட எளிமையான, அன்பான குணங் களை நான் வாழ்க்கையில் பார்த்ததே இல்லை.

யத்தீம் கானாவில் அநாதைகள் விடுதியில் நான் கொஞ்சம் நாள் பி.டி.பி.யின் ஒரு அனுதாபி யாக (வேலாயுதனாக) தங்கினேன்.

எல்லா வியாழக்கிழமையிலும்
அந்த அநாதைகள் :

''இறைவா! எங்களுக்கு உணவளித்தவர் களுக்கு நீ உணவளிப்பாயாகா! எங்களுக்கு உதவி செய்கிறவர்களுக்கு நீ உதவி செய்வாயாகா!''

– என்றெல்லாம் பிரார்த்தனை செய்வதை நான் பார்த்தேன். அப்போது, எனது மனதில் ஆர்.எஸ்.எஸ்.ஸின் வாழ்க்கை தென்பட்டது. இந்த பிள்ளைகளைப் பற்றியா, தீவிரவாதிகளென் றும், தீவிரவாதத்தை ஊட்டுகின்ற நிறுவனம் என்றும் இந்நிறுவனத்தில் தீவிரவாதத்தை பிஞ்சு உள்ளங்களில் ஊட்டுகிறார்கள் என்றும் பொய்யைப் புனைந்துரைத்தோம்.

இந்த ஆர்.எஸ்.எஸ். வெறியர்கள் அபாண்ட மான பொய்யைச் சொன்னார்கள் என்ற எண்ணம் எனது மனதில் தெரிந்தது. மேலும் நாசர் மஹ்தனி யையும் இவ்வாறுதான் தீவிரவாதி என்று முத்திரை குத்தினார்கள் என்ற உண்மையும் எனக்குத் தெரிந்தது.

அன்வாருஷ்ஷேரியின் வாழ்க்கை எனக்கு இஸ்லாத்தை தெரிந்து கொள்வதற்கு முதலில் ஒரு வாய்ப்பாக அமைந்தது. ஒவ்வொரு நாளும் ஓர் புது அனுபவம் கிடைத்தது. என்னை இஸ்லாத் தின் பக்கம் கொண்டு சென்று கொண்டிருந்தது.

இதிலிருந்துதான் இஸ்லாத்தைப் பற்றி மேலும் தெரிய வேண்டும் என்ற ஆர்வம் என்னுள் எழுந்தது. பல இஸ்லாமிய அறிஞர்களையும் நான்

நாசர் மஹ்தனி மூலம் அறிந்து கொண்டேன். இந்தப் பழக்க வழக்கம்தான் வேலாயுதன் என்ற எனக்கு இஸ்லாத்தை தெரிந்திட வாய்ப்புகளை ஏற்படுத்தித் தந்தன.

உயர்ந்த அந்த ஆலிம்கள் சாதாரண மக்களோடு காட்டுகின்ற அன்பு, பாசம் இவற்றைப் பார்த்து இஸ்லாம் அன்பினாலும் பாசத்தாலும் மக்களை அரவணைத்துச் செல்லக்கூடிய ஒரு நல்ல மார்க்கம் என்பதை நான் மேலும் புரிந்து கொண்டேன்.

முஹம்மது (ஸல்) அவர்களின் யதார்த்த அடியார்கள் இவர்கள் தான் என்பதை நான் உணர்ந்தேன். மேன்மையான நல்ல அன்பும், பாசமும் மிகுந்த அந்த முஹம்மத் (ஸல்) அவர்களின் முன் மாதிரியைப் பின்பற்றும் அந்த நல்ல உள்ளத்தையா ஆர்.எஸ்.எஸ். வெறியர்கள் தீவிரவாதிகள் என்றும் இஸ்லாம் தீவிரவாதத்தின் மதம் என்றும் கூறினார்கள் என்று எனது மனதில் தோன்றியது. நான் மிகவும் கஷ்டங்களுக்கு உள்ளானேன்.

அவ்வூரில் பிரார்த்தனை நடக்கும்போது நான் வெளியில் நின்று பார்த்தேன், பிறருக்காக பிரார்த்தனை செய்கின்ற அந்த அநாதை குழந்தைகளை பார்த்தபொழுது, எந்த ஆர்.எஸ்.எஸ். காரர்களும் பிறருக்காக பிரார்த்தனை செய்வதை நான் பார்த்ததுமில்லை. அவர்களின் கீழ் இயங்குகின்ற எந்த அனாதை இல்லத்திலும் பிள்ளைகளுக்கு பிரார்த்தனைகளைச் சொல்லிக் கொடுப்பதில்லை. அவர்களின் மத்தியில் நல்ல கலாச்சாரம் இருந்தால்தானே நல்ல குணங்கள் இருக்கும்.

நான் பி.டி.பி.யின் ஓர் அங்கமானதால் அதன் கீழுள்ள நாசர் மஹ்தனியின் தொண்டர்கள் அநியாயத்திற்காக எந்த ஒரு இன வேறுபாடுமில்லாமல் ஒன்றாய் நின்று போராடுவது எனது உள்ளத்தை மேலும் கவர்ந்தது.

இவ்வாறாக குன்னத்தூரில் தங்கிவிட்டு கிளம்பும் போதுதான் எனது மனது முழுவதும் அந்த அநாதை விடுதியின் நினைவுகளும் அங்குள்ள ஆலிம்களின் நல்ல பணிவான தோற்றமும் இந்த தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த எனக்கு இஸ்லாத்தை நன்றாகப் புரிய ஒரு வாய்ப்பைத் தந்தது.

முஸ்லிம்களைப் பற்றி அந்த சங்கப்பரிவார கும்பல்கள் கூறுவது :

“நமது இனத்தைச் சார்ந்த ஒரு இந்து பெண்ணையும் இந்த முஸ்லிம்கள் விட்டு வைப்பதில்லை. இவர்களுக்கு ஆசைவரும் போதெல்லாம் நமது இன பெண்களைத்தான் இவர்கள் போகப் பொருளாக பயன்படுத்துவார்கள்” என்றெல்லாம் மிக மோசமாக முஸ்லிம்களைப் பற்றி பேசுவார்கள்.

ஆனால் இப்போதுதான் எனக்குத் தெரிகிறது முஸ்லிம்கள் இத்துனை கண்ணியத்தோடும் ஒழுக்கத்தோடும் வாழக் கூடியவர்கள் என்று.

அன்னியப் பெண்களைப் பார்ப்பதுகூட ஹராம் (தடுக்கப் பட்டது) என்று இஸ்லாம் போதிக்கின்றது. எனது வீட்டில் முஸ்லிம்கள் வந்தால், எனது மனைவியை பற்றியும், குழந்தையைப் பற்றியும் விசாரிப்பது மட்டும்தான் அவர்கள் செய்திருக்கின்றார்கள். எனது மனைவியின் முகத்தைக்கூட அவர்கள் ஏறெடுத்துப் பார்ப்பதே இல்லை. நான் வீட்டில் இல்லாத நேரத்தில் எனது மனைவி உட்காரச் சொன்னால் கூட தலையை குனிந்தவண்ணமாக சலாம் கூறிவிட்டு கண்ணியத்தோடு திரும்புவார்கள்.

இப்படி நல்லுள்ளம் கொண்ட அந்த சமுதாயத்தையா இந்த ஆர்.எஸ்.எஸ். காரர்கள் தவறாக சித்தரிக்கிறார்கள் என்று நான் பல நாளும் நினைத்து வருந்தியதுண்டு.

முஸ்லிம் பெண்களை பாதுகாப்பான முறையிலும் தங்களது பார்வையை தாழ்த்திக்கொண்டு பணிவோடு நடக்கவும் வலியுறுத்தி பர்தா முறையை இஸ்லாம் பெண்களுக்கு கற்றுக் கொடுக்கிறது.

பண்டைய ஆர்.எஸ்.எஸ்.-ஸின் கோரப்பிடியில் சிக்கிக்கொண்ட அவர்களோடு சேர்ந்து நின்று, முஸ்லிம் பெண்மணிகளைப் பற்றியும் அவர்களது பர்தாவைப் பற்றியும் கிண்டல் செய்த காலம்தான் எனக்கு நினைவுக்கு வருகிறது.

ஆனால், இந்த சங்கப்பரிவாரங்களோ தங்களது இந்து பெண்கள் ஆடை அணிவதையும் அதிலும் குறிப்பாக அவர்கள் மார்பை மறைப்பதையும் கண்டிக்கும் நிலை உடையவர்கள்.

தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த பெண்களைக் கண்டால் அவர்களை தேவைக்கேற்ப

பயன்படுத்திவிட்டு விட்டுவிடுவதான் இந்த இந்து சமுதாயத்தின் பழக்கமாக இருந்து வந்தது.

ஆனால் இஸ்லாத்திலோ அதுபோன்று காணவே முடியாது. பெண்களை மிகவும் கண்ணியமாக நடத்துகிறார்கள்.

மோசமான கலாச்சாரத்தை உடைய ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் (தம்புராக்கள்) கண்ணியத்திற்குரிய முஹம்மது நபியை குறை கூறிக்கொண்டு இருக்கிறார்கள்.

## எனது பிலால்

கடைசியாக நாசர் மஹ்தனியின் ஒரு பேருரை ஒன்றை கேட்க வாய்ப்புக் கிடைத்தது. அந்தப் பேருரையில் மஹ்தனி எடுத்துக் கொண்ட தலைப்புதான் பல இன்னல்களுக்கும், துன்பங்களுக்கும் ஆட்பட்டு நின்ற கறுப்பு நிற முஸ்லிம் பிலால் (ரழி) பற்றியது. இந்த பேருரை நான் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள ஒரு முக்கியக் காரணமாக இருந்தது.

இவ்வாறாக மஹ்தனி தியாகி பிலாலின் வாழ்வை ஒவ்வொன்றாக எடுத்துச் சொன்னார். அரங்கம் நிசப்தமாக காதை கொடுத்து கேட்டுக் கொண்டிருந்தது.

புனிதமான அந்த இஸ்லாத்தை தழுவிய ஒரே காரணத்திற்காக பிலால் (ரழி) அவர்களைச் சுடு மணலில் கிடத்தி பாரமான பளுவை அவரின் நெஞ்சின் மீது வைத்துக் கொடுமைப்படுத்தினார்கள் அந்த முஷ்ரிக்குகள். மேலும் பிலால் (ரழி) அவர்களின் உணர்வுகளைப் பற்றி மஹ்தனியின் உருக்கமான உரை என் உள்ளத்தை உருக்கிற்று. மஹ்தனியின் அந்தப் பிலாலைப் பற்றிய உரை எனது கண்ணில் கண்ணீரை வர வழைத்தது. மேடையில் இருந்து கொண்டே நான் தேம்பித் தேம்பி அழத் தொடங்கினேன்.

மக்காவை வெற்றிகொண்ட பின் ரசூல் (ஸல்) அவர்கள் அந்த நீக்ரோ இன அடிமையைக் கட்டி அணைத்தது மட்டுமல்லாமல், அபூபக்ர் (ரழி), உமர் (ரழி), அலீ (ரழி) இவர்கள் எல்லாம் இருந்த பொழுதும் பிலால் (ரழி) எங்கே என்று அவர்கள் கேட்டது என்னை நெகிழச் செய்தது. அத்தோடு நில்லாமல் கஃபா ஆலயத்தின் மேல் ஏறி பாங்கு சொல்லவும், இங்கே நிற்பவர்களில் நீ தான் அதற்கு தகுதியானவன் என்று சொல்ல அந்த கறுப்பு இன மாமனிதனின் மூலம் சகோதரத்துவத்தையும், சமத்துவத்தையும் பிரகடனப்படுத்தினார்கள்.

லட்சக்கணக்கான முஸ்லிம்கள் நின்று தொழுகின்ற அந்த கஃபா ஆலயத்தில் ‘அல்லாஹு அக்பர்’ என்ற பாங்கைச் சொல் வதற்கு முதலில் பாக்கியமடைந்தவர் அந்த அடிமை பிலால். (அல்லாஹ்வின் ஆசியும் அருளும் அவர்கள் மீது உண்டாகட்டும்)

எப்படிப்பட்ட பாக்கியம் அது. மட்டுமல்லாமல் கஃபாவின் மேல் ஏறுவதற்கு முடியாமல் தவிக்கின்ற அந்த அடிமை பிலால் (ரழி) அவர்களிடம் நாயகம் திருமேனி முஹம்மது (ஸல்) அவர்கள் தன் கரம் மிதித்து ஏறுவதற்கு பிலாலிடம் சொன்னதும், அந்த வெண்ணிற மேனியின் கையில் கறுப்பு நிற பாதங்கள் மிதித்து ஏறுவதும் அடிமை தனத்தை முற்றிலுமாக அடித்து நொறுக்கியது.

இப்படிப்பட்ட அந்த மஹ்தனியின் பிரசங்கத்தை கேட்டதும் எனது பூர்வீகன் பிலாலை ஒரு நிமிடம் மனதில் பதித்தேன்.

இவ்வாறாக நான் சிந்திக்க ஆரம்பித்தேன்.

ஆர்.எஸ்.எஸ். காரர்களுடன் பழகியதால் எனக்கு என்ன கிடைத்தது? கேவலம் தாழ்ந்த இன மக்களுக்குக்கூட தன்னுடைய மதத்தை பகிர்ந்துகொள்ளாத ஒரு வெறிபிடித்த இனம்.

அதுமட்டுமல்லாமல் நாசர் மஹ்தனி மலபாரிலே கோட்டக்கல் ஜும்ஆ மஸ்ஜிதில் ஒரு இரவு தொழுவதற்காக காரைவிட்டு இறங்கினார். நானும் அவரோடு இருந்தேன். மஹ்தனி பள்ளியின் உள்ளே செல்லும்போது நான் வெளியில் நின்று பார்த்துக் கொண்டிருந்தேன். முன் வரிசையில் நிற்கின்ற ஒரு கூலிப்பணிக்காரனது காலின் கீழ் மஹ்தனியின் தலை. அது மட்டுமல்லாமல் பல பணக்காரர்களும், ஏழை மக்களும் ஒரே அணியில் நின்று தோளோடு தோள் சேர்ந்து தொழுவதும் என்னை நன்றாக கவர்ந்தன. ஆகா என்ன சமத்துவம் இது! என, எனது மனம் மகிழ்ந்தது.

முன்பெல்லாம் கோவில்களுக்குச் செல்லும்போது தாழ்ந்த இனத்தைச் சார்ந்த என்னை கோவிலுக்குள் நுழைய விடமாட்டார்கள். வெளியே நின்று கும்பிட வேண்டியதுதான்.

அதுமட்டுமல்லாமல் ஏதாவது நாட்டின் முக்கிய மான நபர் கோவிலுக்கு வந்தால் பிறமக்கள் அன்று முழுவதும்சாமிக்குலீவு போட வேண்டியதுதான்.

அப்போதுதான் எனக்கு ஞாபகம் வந்தது. முன் ஒருநாள் சபரிமலை ஐய்யப்பனை தரிசிப்ப தற்காகச் சென்றேன். அப்போது அங்கு எதிர் பாராத விதமாக ஒரு மலையாள சினிமா நடிகர் சாமி தரிசனத்திற்காக வந்திருந்தார். அவர் வந்தி றங்கியதுதான் தாமதம் ஐய்யப்பனை தரிசிப் பதற்கு வந்த அந்த இந்து இளைஞர்கள் எல்லாம் ஐயப்பனை மறந்துவிட்டு அந்த சினிமா நடிகரை தரிசிக்க முன் வந்தார்கள். அது மட்டுமல்லாமல் முதலில் சென்ற எங்களை நிறுத்திவிட்டு நடிகரை உள்ளே விட்டார்கள்.

இப்படிப்பட்ட வேறுபாடு
இந்து கலாச்சாரத்தில்,

அது தவிர சமீபத்தில்கூட தமிழ்நாட்டைச் சார்ந்த ஒரு முதல் – அமைச்சர் சாமி தரிசிக்க குருவாயூர் சென்றார். சென்றிறங்கியது தான் தாமதம் அங்கு நின்று கொண்டிருந்த பக்தர் களுக்கு அடி, உதை.


இப்படிப்பட்ட வேறுபாடு ''இந்து'' கலாச் சாரத்தில் இதே சமயம் நான் முஸ்லிம்களின் நிலைமையை சிந்தித்தேன். முஸ்லிம் மந்திரி தொழுவதற்காக பள்ளியில் ஏறும்பொழுது மற்ற முஸ்லிம்கள் எல்லாம் வெளியே நிற்க வேண்டும் என்று சொன்னால் என்னவாகும் நிலைமை? மந்திரியும் அதை எதிர்பார்ப்பதில்லை. மக்களும் அதை செய்வதில்லை.

இப்படிப்பட்ட சகோதரத்துவத்தை நான் அந்த பள்ளி வாயிலின் வெளியே நின்று பார்த்துக் கொண்டிருந்தேன்.

அது மட்டுமல்லாமல் அங்கிருந்து நானும் மஹ்தனியும்மலப்புரம்மாவட்டம், திருவங்காடி, என்ற இடத்தில் பானு காக்கா என்ற முஸ்லிம் நண்பனின் வீட்டிற்குச் சென்றோம்.

தாழ்த்தப்பட்ட என்னை மிகவும் கண்ணிய மாகவும் பாசத் தோடும் அரவணைத்து நல்ல சாப்பாடும் தந்து அங்கேயே தங்க வைத்தார்கள்.

இப்படிப்பட்ட தன்மைகளை வலியுறுத்து கின்ற இஸ்லாம் மார்க்கத்தில் நானும் இணைந்து கொண்டால் என்ன? என்ற கேள்வி என்னை



ஆட்கொண்டது.

## இஸ்லாம்

நான், இதை, ஒருநாள் என் மனைவி சாந்தா விடம் கூறினேன். அவள் இதற்கு சற்று தயக்கம் தெரிவித்தாள். உடனே நான் முஸ்லிம் களாலும், ஆர்.எஸ்.எஸ்.காரர்களாலும் நமது வாழ்க்கையில் ஏற்பட்ட வித்தியாசங்களையும் இஸ்லாத்தின் தன்மைகளையும் எடுத்து விவரித்தேன்.

இருந்தாலும் அவளது மனம் அதற்கு இடம் கொடுக்கவில்லை.

ஏனென்றால் முஸ்லிம்கள் என்னை ஏற்றுக் கொள்வார்களா? நான் ஒரு ஆர்.எஸ்.எஸ். காரி அல்லவா? என்ற எண்ணங்கள் அவளுக்குள் உதித்தன.

நான் விடவில்லை.

முஸ்லிம்கள் என் மீது காட்டின அந்த பணி வையும், பாசத்தையும் அவர்களது உபசரிப்பை யும் பற்றி விவரமாக அவளிடம் சொன்னேன். கடைசியில் அவளது மனம் எனது ஆசைகளை ஏற்றுக் கொள்வதற்குத் தயாரானது. நான் மனைவியையும் அழைத்துக் கொண்டு நாசர் மஹ்தனியின் வீட்டிற்குச் சென்றேன்.

அவர் இஸ்லாத்தின் அடிப்படைத் தகுதி களையெல்லாம் எனக்கு சொல்லித் தந்துவிட்டு புனிதமான எங்களது பூர்வீகன் பிலால் (ரழி) அவர்கள் உச்சரித்த அந்த கலிமாவை மொழிந்து தந்தார்கள். நாங்கள் சந்தோஷமாக மனதில் அந்த புனித கலிமாவை மொழிந்தோம்! ஏற்றோம் இஸ்லாத்தை!!

"அஷ்ஹது அன்லா இலாஹா இல்லல்லாஹ், வஅஷ்அது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ்"

என்று சொல்லிவிட்டு மஹ்தனி அந்த தியாகி பிலாலின் பெயரைத்தான் எனக்கும் சூட்டினார்.

தாழ்ந்த இனத்தவனாக இருந்த நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதற்காக எனது முந்தைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு விடும்.

பிலால் நீ கலிமா சொன்ன இந்த நிமிடத்தில் இன்று பிறந்த பாலகனைப் போலாவாய் என்று மஹ்தனி சொல்லி தந்தார். இதைக் கேட்டபோது மனம் திரும்பவும் ஆச்சர்யத்தில் ஆழ்ந்தது.

எனது முந்தைய பாவங்களையெல்லாம் மன்னிக்கக்கூடிய இறைவனையா நான் ஏற்றுக் கொண்டேன் என்று எனது மனம் திருப்தியடைந்தது.

## பழையன அழிதலும் புதியன புகுதலும்

அன்று இரவு முழுவதும் நான் தூங்கவேயில்லை.

36 வருடம் வாழ்ந்த வாழ்க்கையில், அன்றிலிருந்து ஒரு புது வாழ்க்கையை துவங்குகின்ற அந்த ஆனந்தத்தில் எனது மனம் குதூகலித்தது.

இப்படியாக நாங்கள் இருவரும் இஸ்லாத்தைத் தழுவினோம். மனைவிக்கு பாங்கோடு ரபீக் மௌலவி கலிமா சொல்லிக் கொடுத்து ஃபாத்திமா என்று பெயரைச் சூட்டவும் செய்தார்.

இப்போது இருக்கின்ற இடத்தைவிட்டு மாறி வேறு இடத்தில் வாடகை வீட்டில் தங்கினோம். முஸ்லிமான பிறகு எனக்கொரு இப்னு பிலால் என்ற மகனும் பிறந்தான்.

தாழ்த்தப்பட்ட தலித் இனத்தைச் சார்ந்த பழைய வேலாயுதனாக நான் மரணம் அடைந்தால், எனது மனைவியும் மக்களும் பிச்சை எடுக்கக் கூடியவர்களாக மாறியிருப்பார்கள். ஆனால் பிலாலான எனக்கு இப்போது அல்லாஹ்வின் கருணையால் தனது உயிரைக்கூட கொடுக்கக் கூடிய முஸ்லிம் சமூகம் இருக்கின்றது. அந்த இஸ்லாமிய சகோதர சமூகம் இருக்கும் காலம் வரை நான் அஞ்சத் தேவையில்லை.

இப்போது அல்லாஹ்வின் கருணையினால் நானும், எனது மனைவி மக்கள் அனைவரும் மிகவும் சந்தோஷமாக குர்ஆனுடைய நிழலின் கீழ் பாதுகாப்பாக சந்தோஷமாக வாழ்க்கையை நடத்து கின்றோம்.

கேரளத்தின் மாதவிக்குட்டி என்ற கமலாதாஸ் இஸ்லாத்தை தழுவியபோது நாங்கள் குடும்பத்தோடு சென்று அவர்களைச் சந்தித்தோம். ஈமானின் பிரகாசம் அவர்களது முகத்தில் தெளிந்து நின்றது. அவர் அப்போது கமலா சுரைய்யா!

கேரளத்தில் கறுப்பு இனத்தைச் சார்ந்த நான், உயர் குலத்து மாதவி குட்டியை (பறையனான இந்த வேலாயுதன்) ஒருபோதும் சந்திக்கவே முடியாது. வாய்ப்பே இருந்திருக்காது.

ஆனால் இஸ்லாம் என்ற கோட்பாட்டின் கீழ் (பிலாலும், சுரையாவும்) நாங்கள் இருவரும் இணைந்ததால் எங்களுக்குள்ளே அக விவரங்கள் பேச வாய்ப்பு கிடைத்தது.

## ஆதலால் எனது சமூகமான தாழ்த்தப்பட்ட தலித் இனத்திற்கு ஒரு வேண்டுகோள் வைக்கின்றேன்.

நீங்கள் எதற்கும் அஞ்சத் தேவையில்லை.

நீங்கள் அடிமைத் தனத்திலிருந்து உங்களை விடுவித்துக் கொள்ள இஸ்லாமே நன்மருந்து.

தைரியமாக அல்லாஹ்வின் இந்த அழகிய மார்க்கத்தில் பிரவேசியுங்கள். எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் குர்ஆன் உங்களுக்கு மிகுந்த பாதுகாப்பை அளிக்கும் வாருங்கள்....

அல்லாஹ்வின் மார்க்கத்தில் எனக்கும் என் மனைவி பிள்ளை களுக்கும் நேர்வழியைத் தந்த வல்ல இறைவன் அல்லாஹ்விற்கே புகழனைத்தும் உரித்தாகுக.

எனது பாங்கின் ஒலி என்றும் தொடரும்... அல்லாஹ் அக்பர்! அல்லாஹ் அக்பர்!

## இஸ்லாத்தில் இறை வணக்கங்கள்

நான் ஆர்.எஸ்.ஸில் இருக்கும் பொழுது முஸ்லிம்கள் தங்களுக்குள் கூறிக்கொள்ளும் சலாத்தைப் பற்றி ஒரு தவறான வாதத்தை எனக்கு போதித்தார்கள்.

அதாவது, "இவர்கள் எங்கு சென்றாலும் தங்களுக்கு மத்தியில் 'அஸ்ஸலாமு அலைக்கும்' என்று கூறிக்கொள்வார்கள். தன் இனத்தைச் சார்ந்த யாரை சந்தித்தாலும் சரியே, இது எதற்

கென்றால் பிற மதங்களை தனிமைப்படுத்து வதற்கும் முஸ்லிம்களை ஒன்றுபட வைப்பதற் கும்" என்று இந்த ஆர்.எஸ்.எஸ்.ஸின் பிரச்சாரத் தால் தவறான எண்ணத்தில் இருந்து வந்தேன்.

இங்கு வந்த பிறகுதான் தெரிகிறது. இந்த ஸலாத்தின் பொருள் எவ்வளவு மகிமையான தென்று. (இறைவனின் சாந்தியும் சமாதானமும் என்றென்றும் உங்கள் மீது உரித்தாகுக!) என்பதே அதன் பொருள்.

ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமுக்காக இறைவனிடம் பிரார்த்தனை செய்வது. அதைக் கேட்ட முஸ்லிமும் தனக்காக துஆ செய்த முஸ்லிமுக்கு உன் மீதும் இறைவனின் சாந்தியும், சமாதானமும் உரித்தாகட்டும். (வஅலைக்கும் ஸலாம்) என திருப்பிக்கூறும் மிக அருமையான முறையை, எந்த மதம் நமக்குத் சொல்லித் தருகிறது.?

இந்து மதத்தை எடுத்துக் கொண்டால் வணக்கம் (நமஸ்தே) என்று கூறுவார்கள்.

என்ன பொருள் இதற்கு, உன்னை நான் வணங்குகிறேன் என்றல்லவா இதன் பொருள். என்ன கீழ்த்தரமான வார்த்தை இது. இறைவனால் படைக்கப்பட்ட மனிதனை வணங்குவது, நன்றி செலுத்துவது.

வணக்கத்திற்கு தகுதியானவன் இறைவனைத் தவிர வேறு யாரும் இல்லை என்று இஸ்லாம் மிக அருமையாக நமக்கு போதிக்கிறது.

இதையும் நான் இஸ்லாத்தில் வந்த பிற குதான் தெரிந்து கொண்டேன். தனக்கு மத்தியில் சகோதரத்துவத்தை வெளிப்படுத்துகின்ற இந்த அருமையான வாசகத்தை குறித்து இந்த ஃபாசிஸ்ட்டுகள் எனக்கு தவறாகப் போதித்தார்கள்.

முஸ்லிம்கள் சம்பந்தமான எந்த ஒரு விஷய மாக இருந்தாலும் அதன் பொருளை முழுமை யாக விளங்காமல் தப்பான நச்சுக் கருத்துக்களால் போதிப்பது ஃபாசிஸ்ட்டுகளின் தந்திரமாக இருந்து வருகிறது.

இந்த ஃபாசிஸ்ட்டுகளின் சமூகத்திலிருந்து என்னை மட்டும் தேர்ந்தெடுத்து புனித இஸ்லாத்தின் உண்மைகளை எனக்கு போதித்த வல்லான் அல்லாஹ்வுக்கு எவ்வளவு நன்றி சொன் னாலும் மிகையாகாது.

இதைப்போல் சாப்பிடக்கூடிய விஷயமாக இருந்தாலும் சரி! இஸ்லாம் மிக அருமையாக போதிக்கிறது.

சாப்பிடும்போது உட்காரும் நிலை, விரல் களைக் கொண்டு சாப்பிடுவது, சாப்பிட்ட பிறகு விரலை நன்றாக உறுஞ்சுவது, சாப்பாட்டிற்கு நாம் கொடுக்கும் மரியாதை இது.

இதைப்போலத்தான் இறந்தாலும்! பறையன் இறந்தாலும் அவனை அடக்கம் பண்ணுவது ஒருமுறை. புலயன் இறந்தால் அவனை அடக்கம் செய்வது இன்னொரு முறை. இரண்டு வழி முறையும் அதனுடைய சடங்குகளும் மிக வித்தியாசமாகத்தான் இருக்கும்.

ஆனால், ஒரு முஸ்லிம் இறந்துவிட்டாலோ அவனுக்காக அந்த ஊர் ஜமாஅத்தார்கள், ஊர் மக்கள், பக்கத்து வீட்டார்கள் இவர்களெல்லாம் நின்று அந்த மய்யித்தை குளிப்பாட்டிவிட்டு கண்ணியமான முறையில் நல்லடக்கம் செய்வார்கள். இறப்பு விஷயத்திலும் இஸ்லாம் சகோதரத்துவத்தையும் சமத்துவத்தையும் போதிக்கிறது.

நான் இஸ்லாத்தை அடைவதற்கு முன்னால் ஒரு கம்யூனிஸ்ட்வாதியின் மகளின் இறப்பு சடங்கில் பங்கு கொண்டேன். அந்த வீட்டில் ஒரே அலறல் சத்தம் கேட்கிறது. தனது மகளின் பிரேதத்திற்கு முன் அமர்ந்து அலறி சத்தமிட்டு அழுகிறார் கம்யூனிஸ்ட் வாதியான அந்த முஸ்லிம் நபர்.

இதேபோல் அதன்பிறகு வேறொரு முஸ்லிம் மரண வீட்டிற்கும் நான் சென்றேன். தெரிந்த ஒரு முஸ்லிம் நபரின் மகன் ஸ்கூட்டர் விபத்தில் இற ந்து விட்டார். இறந்த மகனின் தந்தை அழாமல் வருத்தத்தோடு இருப்பதை நான் கவனித்தேன்.

இதை பார்த்த பிறகு எனக்கு ஒரு சந்தேகம் எழுந்தது. இதை நான் மார்க்க அறிஞரிடம் விசாரித்தேன்.

அப்போது அவர் கூறினார் :

முதலில் இறந்த மய்யித்தின் தந்தை ஒரு பெயர் தாங்கிய முஸ்லிமாக மட்டும் இருக்கிறார். அவருக்கு இஸ்லாத்தின் கோட்பாடே தெரியாது. அதனால்தான் தனது மகளின் மய்யித் முன் நின்று சத்தம் போட்டு அழுது கொண்டிருந்தார்.



எனது மனைவி, பிள்ளைகளுடன்

இரண்டாவது பார்த்த அந்த நபரோ இஸ்லாத்தின் கோட்பாட்டை நன்றாக தெரிந்தவர். இஸ்லாம் மய்யித்திற்கு முன்நின்று கதறி அழுவதை போதிக்கவில்லை. தனது கவலைகளையெல்லாம் மனதில் மூடி மறைத்துக் கொண்டு தனது மகனுக்காக இறைவனிடம் பிரார்த்தனை செய்த வண்ணம் மிக கண்ணியமாக மகனை அடக்கம் செய்கிறார்.

மகனை எனக்குத் தந்தவனும் இறைவன்தான். அவனை எடுப்பதும் இறைவன் தான், என்ற நம்பிக்கையும், நாளை நானும் இறந்து விட்டால் மகனை நிச்சயம், அல்லாஹ் நாடினால், மறுமையில் சந்திப்போம் என்ற நம்பிக்கையும் தான் அந்த நபரின் உள்ளத்தில் இருந்தது. இது இஸ்லாமியக் கோட்பாடு.

இஸ்லாத்தின் இந்த கோட்பாடும் என்னை நன்றாக அதன் பக்கம் ஈர்த்தது.

நான் இஸ்லாத்தை தழுவுவதற்கு முன்னால் எனது அப்பாவும் தண்ணி அடித்துவிட்டு தற்கொலை செய்து கொண்டார். அப்போது நான் இஸ்லாத்தை தழுவியிருந்தால் எனது அப்பாவிற்காக என்னுடைய இறைவனிடம் நான் பிரார்த்தித்திருப்பேன். இஸ்லாம் தற்கொலையை போதிக்கவில்லை தடுக்கிறது என்று அப்பாவிற்கு எடுத்துச் சொல்லியிருப்பேன். இப்போது நான் அதைப்பற்றி மிகவும் வருந்துகிறேன்.

அதேபோல் முஸ்லிம்களின் வியாபார விஷயத்திலும் நல்ல ஒரு கோட்பாட்டை நான் கண்டேன். ஒரு முஸ்லிம் வியாபாரம் செய்தால் அவனுக்கு இலாபம் வந்துவிட்டால் அல்லாஹ்வை துதிக்கின்றான். அவனுக்கு நஷ்டம் ஏற்பட்டுவிட்டாலோ கடவுள் மீது பாரத்தைப் போட்டுவிட்டு திருப்திபடுகிறான். ஏனென்றால் அவனுக்குத் தெரியும் இந்த வியாபாரத்தை தந்தது இறைவன்தான் என்று. எல்லாம் இறைவனின் நாட்டப்படிதான் நடக்கிறது என்று நினைத்து திருப்திப்படவும் செய்கின்றான்.

இன்று இந்த ஆர்.எஸ்.எஸ்.காரரர்கள் என்னைப் போன்று தாழ்ந்த இனத்தைச் சேர்ந்த புலயன், குறவன், பறையன், வேலன் இவர்களையெல்லாம் தனது காரியத்தை சாதிப்பதற்காகவும் தனது ஆதிக்கத்தை நிலை நாட்டிடவும் பயன்படுத்தி வருகிறார்கள்.

நான் கேட்கிறேன்!

இந்த ஆர்.எஸ்.எஸ்.காரரர்களைப் பார்த்து எங்களது முன்னோர்களெல்லாம் எந்த ஒரு ஜாதி வேறுபாடுமில்லாமல், இந்து மதத்தை ஒன்றாக பகிர்ந்துதானே வாழ்ந்து வந்தார்கள்.

அப்படியிருக்க அவர்களது மத்தியிலே ஒரு பிளவை ஏற்படுத்தி பள்ளன் என்றும், பறையனென்றும் ஏற்படுத்தி தீண்டத்தகாதவர்கள் என்ற பட்டத்தையும் பெற்று தந்ததெல்லாம் நீங்கள்தானே!

அதோ எதிரி, என்று நீங்கள் சொல்கின்ற முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களுமா இந்த பாகுபாட்டிற்குச் சொந்தக்காரர்கள்.

“இந்து ஒற்றுமை.... இந்து ஒற்றுமை...” என்று சொல்லிக்கொண்டு எங்களது காதில் பூவைச் சுற்றுகிறீர்கள். இந்த கேடுகெட்ட இயக்கத்தில் தான் நான் பன்னிரண்டு வருடமாக பணியாற்றினேன்.

படிப்பறிவு இல்லாத ஒரே காரணம் தான் இந்த பாவப்பட்ட தலித் இனத்தை மிக மோசமான ஒரு கட்டத்திற்கு அன்றிலிருந்தே கொண்டு

சென்றிருக்கிறது. இவர்கள் வரலாற்றை ஆராய்ந் திருந்தால் இந்த ஆர்.எஸ்.எஸ்.ஸின் பார்ப்பன சுயநலத்தின் தெளிவான தோற்றம் இவர்களுக்கு அன்றே தெரிந்திருக்கும். அது தெரியாததால் இன்றும் இந்த பார்ப்பன வெறியர்களின் அடியாட்களாகவும், அடிமைகளாகவும் வாழ்ந்து வருகிறார்கள்.

இந்து மதம் காப்போம்... என்று சொல்லிக் கொண்டு உரிமை கொண்டாடிக் கொண்டு வருகிறார்களே? இவர்கள் எப்போது இந்து நடைமுறைப்படி வாழ்ந்தார்கள். டாக்டர் அம்பேத்கர், ஸ்ரீநாராயண குரு, அய்யங்காளி, ஐயப்பன், எம்.எல்.சி., வள்ளுவர் இவர்களது வாழ்க்கை முறையெல்லாம் (இவர்களுக்கு) தேவையில்லை. இவர்களெல்லாம் இந்து மதத்தில் இருந்துகொண்டு இப்படியா வாழ்ந் தார்கள்?. முஸ்லிம்களையும் கிறிஸ்தவர்களையும் எதிர்க்க வேண்டும் என்று இவர்கள் சொல்லிக் கொடுத்தார்களா? இவர்களுக்கெல்லாம் வராத இந்து பற்றுதான் உங்களுக்கு தோன்றியிருக்கிறது.

சாகாவில் இந்து தியாகிகளின் வாழ்க்கை முறைகளைப் பற்றி போதிக்காமல் இவர்கள் போதிப்பதெல்லாம் இந்து வெறிபிடித்த சுயநலம் கொண்ட பார்ப்பன இனத்தைச் சேர்ந்த ஹெட்கேவர், வீர சாவர்கர், ராணாபிரதாப், அரவிந்தன் இவர்களது வாழ்க்கை முறை யைத்தான் போதிப்பார்கள்.

தியாகி அம்பேத்கர் தலித் இனத்தை ஒருங்கிணைப்பதற்காக இந்து மதத்தில் தலித் இனத்தவர்களுக்கும் தனி உரிமை உண்டு என்று போதிப்பதற்காக **1956**–ல் இந்து கோட் பில் இந்து (Hindu Code Bill) இந்து நெறிமுறைச் சட்டம் என்ற ஓர் நியாயத்தை சட்ட அவையில் சமர்ப்பித்தார். இதை அன்று இந்த ஆர்.எஸ். எஸ். காரர்கள் கடுமையாக எதிர்த்தார்கள்.

நாம் இந்துவல்ல, தலித் இனத்தவர்கள் எவரும், ஒருபோதும் இந்துவாக முடியாது. இந்து மதத்திற்கே சொந்தக்காரர் அந்த பார்ப்பன வெறியர்கள்தான் என்றுதான் அம்பேத்கர் மொழிந் தார்கள்.

இதையெல்லாம் சாகாவில் நமக்குச் சொல்லிக் கொடுப்ப தில்லை. அம்பேத்கர் ஒரு மகான் என்று கூறுகிறார்களே இவர்கள். ஏன் அம்பேத்கரின் கூற்றை இவர்கள் மறைக்கின்றார்கள்.

எனது தலித் இன மக்களுக்கு நான் சொல்லி க்கொள்வதெல்லாம் ஒன்றே ஒன்றுதான்.

ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்களின் சூழ்ச்சி தெரியாமல் நீங்கள் செயல்படுகிறீர்கள். உங்களை படிப்பற்றவர்களாக்கி, பிற மக்களை கொன்று குவிப்பதற்கு உங்களை ஓர் ஆயுதமாகத்தான் இந்த ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் பயன்படுத்து கிறார்கள்.

இந்த பார்ப்பன ஆதிக்கத்திலிருந்து விடை பெற வேண்டுமென்றால் நீங்களும் என்னைப் போன்று இஸ்லாம் என்ற கண்ணியத்தைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். அதில் ஒன்றில்தான் உங்களுக்கு (விடுதலை) மோட்சம் இருக்கிறது. குர்ஆனின் நிழலில் தான் உங்களுக்கு விடுதலை.

அன்று இந்து மதத்தை எதிர்த்த டாக்டர் அம்பேத்கருக்கு என்னைப் போன்று இஸ்லாமிய சிந்தனை ஏற்பட்டிருந்தால் முதல் கனமே அந்த தலித் மக்களை, அடிமை இன மக்களை இந்த சத்திய மார்க்கத்திற்கு செல்ல வழி வகுத்துத் தந்திருப்பார். அவர் அதற்கு வலியுறுத்தியும் இருப்பார்.

இந்த சத்திய மார்க்கத்தின் நிழல் ஆழமாகத் தெரியாததால் தான் அன்று அந்த மக்களை புத்த மதத்திற்கு அனுப்பினார். புத்தனை கடவுளாக ஏற்றுக்கொண்டதைத் தவிர விடுதலை என்ற கோட்பாட்டிற்கு அவர்கள் தள்ளப்படவில்லை.

## முஸ்லிம்கள் செய்த பேருதவிகள்

முஸ்லிம்களுக்கு நேசக்கரம் நீட்டி பொது எதிரியை நேருக்கு நேர் எதிர்கொள்வதில் தலித் மக்களுக்கு மிகவும் முக்கியமானதோர் பொறுப்பும் பணியும் இருக்கின்றது.

முதன்முதலாக அவர்கள் (தலித் மக்கள்) தங்களை முறையாக ஒருங்கிணைத்துக் கொள்ள வேண்டும். இதற்கான எல்லா வாய்ப்புகளும் அவர்களுக்கிருக்கின்றன.

அவர்கள் (தலித் மக்கள்) உயர் ஜாதிக்காரரர் களின் பாட நூல்கள் வழியாகத் தங்கள் குழந் தைகளுக்குப் பாடங்களைக் கற்றுத்தரக் கூடாது. அவர்கள் அம்பேத்கர் அவர்களின் இலக்கியங்கள், சிந்தனைகள் இவற்றின் வழியாகத்தான் தங்கள் குழந்தைகளைக் கற்பித்து வளர்த்திட வேண்டும்.

இன்று அரசு வேலைகளிலும் பொதுப் பணிகளிலும் அவர்களுக்குத் தரப்பட்டிருக்கும் பாதுகாப்பும், உத்திரவாதமும். ஏதோ உயர் ஜாதிக்காரர்கள் தங்கள் கடந்த கால பாவங்களைக் கழுவுவதற்காக விட்டுக் கொடுத்தவை அல்ல.

இன்று தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தரப்பட்டுள்ள பாதுகாப்பும், உத்திரவாதமும், வீரமும், விவேகமும் நிறைந்த அம்பேத்கரின் போராட்டம்.



அந்தப் போராட்டத்திற்கு உதவியாய் நின்ற முஸ்லிம்களின் உறுதி. இவற்றால் பெற்றவையே!

இந்த வெற்றிதான் புகழ்பெற்ற ''பூனா ஒப்பந்தம்'' (1932) அம்பேத்கர் தொடுத்த பெரும் போரில் முஸ்லிம்கள் அம்பேத்கர் அவர்களுக்குத் துணையாக நின்று ஆற்றிய பெருந்தொண்டினை வரலாறு ஒரு போதும் மறந்திடாது.

அந்த வரலாற்றை நிச்சயமாக தலித் மக்கள் ஒருபோதும் தங்கள் நினைவை விட்டு நீக்கிவிட மாட்டார்கள். முஸ்லிம்களின் இந்தப் பெருந் துணை 1931இல் நடைபெற்ற வட்டமேஜை மாநாட்டில் சுடர்விட்டு உலகெங்கும் பிரகாசித்தது.

1931இல் நடைபெற்ற இந்த வட்டமேஜை மாநாட்டில் இந்துக்களின் பிரதிநிதிகள், முஸ்லிம்களின் பிரதிநிதிகள், சீக்கியர்களின் பிரதிநிதிகள், கிறிஸ்தவர்களின் பிரதிநிதிகள், ஆங்கிலோ இந்தியர்களின் பிரதிநிதிகள், ஐரோப்பியர்களின் பிரதிநிதிகள், தலித் மக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இந்த வட்டமேஜை மாநாட்டில் இந்துக் களின் பிரதிநிதியாகக் கலந்துகொண்ட காந்தி யடிகள் தலித் மக்களின் பிரதிநிதிகள் இதில் கலந்துகொள்வதைத் தடுப்பதில் அயராது உழைத்தார்கள்.

ஆனால் காந்திஜியின் எதிர்பார்ப்பிற்கு எதிராக இந்துக்கள் அல்லாத (அதாவது) சிறு பான்மையினர் அனைவரும் ஒன்று சேர்ந்து ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். இதனை Minority Pact சிறுபான்மையினரின் ஒப்பந்தம் என அழைத்தார்கள்.

இதில் தலித் மக்களும் இணைந்து கொண் டார்கள். இந்த இந்துக்கள் அல்லாதவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரு பொது விண்ணப்பத்தைச் சமர்பித்தார்கள்.

நான் ஆர்.எஸ்.எஸ்.ஸில் ஆரம்பத் தொண்டனாக இருந்தபோது, கேரளாவைச் சார்ந்த இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கத்தைச் சார்ந்தவர்கள் ஒரு மாநாட்டை நடத்தினார்கள். இந்த மாநாட்டின் தலைப்பு "இந்தியாவின் விடுதலை இஸ்லாத்தின் மூலம்" இந்தத் தலைப்பைக் கண்ட நான் பீறிட்டு எழுந்தேன். அடக்கவியலாத ஆத்திரம் என்னுள். நாங்கள் எதிர்ப்பைக் காட்டினோம். "அரசே! இபுறாஹீம் சுலைமான் சேட்டையம், இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கத்தைச் சார்ந்தவர்களையும் உடனேயே கைது செய்" என்று சுவரொட்டிகளை அச்சிட்டு ஒட்டினோம். நான் வேகந்தாழாமல் இந்தச் சுவரொட்டிகளை காவல் நிலையங்களிலேயே ஒட்டினேன்.

அப்போதும் என் வேகம் அடங்கவில்லை. காவல் நிலையங்களுக்கு உள்ளே சென்று இன்ஸ்பெக்டரின் அறையில் அவருடைய தலைக்கு மேலேயே ஒட்டினேன்.

ஆனால் இப்போது இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட பின்னர்தான் எனக்கு நன்றாகப் புரிகின்றது. அன்று இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கத்தவர்கள் முன் வைத்த முழக்கம் எத்துணை அர்த்தம் நிறைந்தது என்பது.

உண்மையில் இஸ்லாம் மட்டுமே இந்தியாவைக் காப்பாற்றிடும் வழி காட்டுதலை வழங்கிடும் மார்க்கம். அதை புறக்கணித்தால் அழிவும் அட்டூழியங்களுமே விஞ்சும்.

*இதில் தலித் மக்களின் கோரிக்கைகளுக்கும் அவர்களின் செயல் திட்டங்களுக்கும் முஸ்லிம்கள் ஆதரவு தரக்கூடாது என்று கோரிக்கை வைத்தார் காந்திஜி. தன்னால் இயன்ற வரை முஸ்லிம்கள் தலித் மக்களை ஆதரிப்பதைத் தடுத்திட முயன்றார் மகாத்மா காந்தி. ஆனால் அது அவரால் முடியவில்லை.*

*முஸ்லிம்கள் நாங்கள், தலித் மக்களை ஆதரிப்பதிலிருந்து பின் வாங்கவே மாட்டோம் என்று அறிவித்துவிட்டார்கள். தனது ஏனைய முயற்சிகள் தோற்றுப்போகவே பேரம் பேச ஆரம்பித்தார் காந்தி ஜி. முஸ்லிம்கள் வட்ட மேஜை மாநாட்டில் வைக்க இருக்கும் 14 கோரிக்கைகளையும் ஆதரிக்கின்றேன். அதற்கு கை மாறாக தலித் மக்களை அதாவது தீண்டத்தகாத மக்களை முஸ்லிம்கள் ஆதரிக்கக் கூடாது. அதற்கான உத்திர வாதத்தைத் தர வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.*

**இந்தப் பெரும் பேரத்திற்கு முஸ்லிம்கள் வீழ்ந்திடவில்லை. தாழ்த்தப்பட்டு அமுக்கப்பட்டு தீண்டத்தகாதவர்கள் என முத்திரை குத்தப்பட்டு அவமானப்படுத்தப்படும் அந்த மக்களின் இழிவு நீங்க, நாங்கள் அவர்களை ஆதரித்தே தீருவோம். அவர்களுக்கு துணை நிற்பதில் பின் வாங்கவே மாட்டோம். இதில் நாங்கள் வைக்கும் 14 கோரிக்கைகளும் ஒட்டு மொத்தமாக நிராகரிக்கப்பட்டாலும் சரியேயென ஒரே குரலில் உறுதியாகக் கூறிவிட்டார்கள்.**

**முஸ்லிம்கள் தலித் மக்களுக்கு காட்டிய ஆதரவுக்கு முன் காந்தியாரின் முயற்சி பொடிந்து போயிற்று. தாழ்த்தப்பட்ட மக்கள் சமூகப் பாதுகாப்பைப் பெற்றார்கள். இந்தப் பாதுகாப்பை உடைக்க இன்றும் இயலவில்லை.**

**முஸ்லிம்கள் செய்த இந்த மகத்தான உதவியை அம்பேத்கர் அவர்கள் இப்படி எழுதுகின்றார் :**

**“அவர் (காந்திஜி) முஸ்லிம்களைச் சந்தித்துப் பேசி அவர்களைத் தீண்டத் தகாத மக்களுக்கு எதிராக திருப்பிவிடுவதற்குக் கொஞ்சமும் தயங்கவில்லை. இதற்காக அவர் இந்திய தேசிய காங்கிரஸ், இந்து மகாசபை, சைமன் கமிஷன், ஆகியவற்றால் நிராகரிக்கப்பட்ட முஸ்லிம்களின் 14 கோரிக்கைகளையும் நிறைவேற்றி வைக்க ஒத்துக் கொண்டார். இதற்காக திரு. காந்தி பொது மக்களின் கருத்துக்களையே ஒன்று திரட்டி அதை முஸ்லிம்களுக்கு எதிராகத் திருப்பத் தயாராக இருந்தாலும் கூட முஸ்லிம்கள் தீண்டத் தகாத மக்களை ஆதரிப்பதிலிருந்து பின்வாங்க மறுத்துவிட்டார்கள்.**

(*ஆதாரம் :* DR. B.R.AMBEDKAR : POONA PACT : BHEEM PATRICA PUBLICATIONS : JALANDAR : PUNJAB. 1973, PAGE - 39-41)

*பிறிதோர் இடத்தில், பாபா சாஹேப் அம்பேத்கர் அவர்கள் முஸ்லிம்கள் தலித் மக்கள் எதிர்கொண்ட இக்கட்டான ஓர் சூழலில் தந்த தெளிவான ஆதரவைப் பின்வரும் சொற்களால் ஏற்றுக்கொண்டு நன்றி செலுத்துகின்றார்.*

*காந்தி அவர்கள் மேற்கொண்ட* Epic Fast *என்ற எழுச்சிமிக்க உண்ணாவிரதம் குறித்து அம்பேத்கர் அவர்கள் செப்டம்பர்* ***19, 1932*** *அன்று விடுத்த அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள்.*

*“முஸ்லிம்களின் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்டவர்கள் இதுபோன்ற கறுப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துக்கொள்ள மறுத்துவிட்டார்கள். இப்படி மறுத்துவிட்டதன் மூலம் அமுக்கப்பட்ட மக்களை மிகப் பெரியதோர் அழிவிலிருந்து காப்பாற்றி இருக்கின்றார்கள். காந்தியுடன் முஹம்மதியர்களும் சேர்ந்து அமுக்கப்பட்ட மக்களின் கோரிக்கைகளை எதிர்த்திருந்தால் அது அமுக்கப்பட்ட மக்களுக்கு ஒரு பெரும் அழிவையே ஏற்படுத்தி இருக்கும்.*

(*ஆதாரம் :* WHAT CONGRESS AND GANDHI HAVE DONE TO UNTOUCHABLES THACKER & CO : BOMBAY : 1945 : P-295, APPREDIX NO.-4)

*இந்த அறிவிப்பின் மூலம் அம்பேத்கர் அவர்கள் தலித் மக்களின் உரிமைப் போர் வரலாற்றின் ஒரு முக்கியக் கட்டத்தில் முஸ்லிம்கள் செய்த பேருதவியை வெளிப்படையாகவே ஒத்துக்கொண்டார்.*

*இதேபோல் இன்னொன்றையும் தலித் மக்கள் நினைவில் நிறுத்த வேண்டும். பாபா சாஹேப் அம்பேத்கர் அவர்களை மக்கள் மாமன்றத்திற்கு தேர்ந்தெடுத்து அனுப்பியவர்கள் முஸ்லிம்கள் தாம். வங்காளத்திலிருந்து அவர்கள் அம்பேத்கர் அவர்களை மக்கள் பேரவைக்கு தேர்ந்தெடுத்து*

அனுப்பினார்கள்.

தலித் மக்களின் மங்காத நினைவாக இன்னொன்றும் இருந்திட வேண்டும். அது, ஔரங்காபாத்தில் அம்பேத்கர் அவர்கள் நிறுவிட நினைத்த கல்வி நிறுவனத்திற்குத் தேவையான நிதியை அள்ளித் தந்ததும், அந்த நிறுவனங்களை நிறுவிட தேவையான நிலத்தை இலவசமாகத் தந்ததும் ஹைதராபாத் நிஜாம் அவர்கள்தாம்.

வட்டமேஜை மாநாட்டின் போதும், அதற்கு முன்னும், பின்னும் தலித் மக்களுக்கு முஸ்லிம்கள் செய்த உதவியும், அரவணைப்பும் தலித் மக்களுக்கு அளவில்லாத பலத்தைத் தந்தது. அதனால்தான் காந்தி பூனா ஒப்பந்தத்திற்கு ஒத்துக்கொண்டார்.

இன்றைக்கு எழுந்துள்ள சிக்கல் நிறைந்த சூழ்நிலையில் முஸ்லிம்களோடு கை கோர்த்து நின்று அவர்களுக்கு முழு ஆதரவையும் (தலித் மக்கள்) தந்து, அன்று முஸ்லிம்கள் செய்த பேருதவிக்குக் கை மாறு செய்திட வேண்டியது தலித் மக்களின் தலையாயக் கடமையாகும்.

முஸ்லிம்களுக்கு ஆதரவாக இருப்பதின் மூலம் தலித் மக்கள் தங்களுக்குத் தாங்களே ஆதரவு தேடிக் கொள்கின்றார்கள் என்றே பொருள்.

இக்கட்டான சூழ்நிலையில் துணை நிற்பதில் முஸ்லிம்கள் நேர்மையானவர்கள், விலை போகாதவர்கள், உரிமைகளை விட்டுக் கொடுக்காமல் போராடுபவர்கள். இந்தப் போராட்டத்தில் பொது எதிரிக்கு எதிராக நிலையாக நெஞ்சுரத்தோடு நிற்பவர்கள்.

தலித் மக்களிடமும் இதே தன்மைகள் உண்டு. ஆகவே இருவரும் இணைந்து நின்றால் பொது எதிரி பொசுங்கிப் போவான்.

இது ஜனநாயகம் – குடியாட்சி முறையின் யுகம்! இங்கே எண்ணிக்கைகள் தாம் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

முஸ்லிம்கள், தலித் மக்கள், ஏனைய பிற்படுத்தப்பட்ட மக்கள் (OBCS) இன்னுமுள்ள சிறுபான்மையினரான கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரே அணியில் நின்றால் நிச்சயமாக அவர்கள்தாம் பெரும்பான்மை நாம் அனைவரும் ஒரே அணியில் நின்றால் பொது எதிரியை, அதாவது ஏதேச்சதிகாரம் செலுத்த வருபவர்களை ஒரே நொடியில் வீழ்த்திவிடலாம்.

இந்த ஒற்றுமையும் ஒன்று திரண்ட சக்தியும் கிராமப் புறங்களில் நிறைய பலன் பயக்கும். இந்தக் கிராமப்புறங்களில்தான் தலித் மக்களும் முஸ்லிம்களும் இந்து வெறியர்களால் விரட்டப் படுகின்றார்கள், வெட்டப்படுகின்றார்கள்.

தலித் மக்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். எந்த இடத்திலும் முஸ்லிம்களால் தலித் மக்களுக்கு எந்தத் தொல்லையு மில்லை.

அதேபோல் இரு சமுதாயத்திற்கிடையேயும் எந்த முரண்பாடும் இல்லை. தலித் மக்கள் இந்துக்களல்ல. அவர்களும் முஸ்லிம் களைப் போல் புலால் உண்பவர்களே!

வேறு எந்தச் சமுதாயத்தையும் விட நமக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே நெருங்கிய பல உறவுகள் உண்டு. முஸ்லிம்களின் 80% பேர் தலித் மக்களாக இருந்து இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு முஸ்லிம்களாக மாறியவர்கள்தாம்.

## இஸ்லாம் ஓர் சமூக விடுதலை இயக்கம்

இந்த இந்தியா இந்துக்கள் – இந்துக்கள் அல்லாதவர்கள் என்ற அடிப்படையில் பிரியுமேயானால் தலித் மக்கள் இந்துக்கள் அல்ல. ஆகவே அவர்கள் இந்துக்கள் அல்லாதவர்கள் அணியில் தவறாமல் இடம் பெறுவாரக்ள்.

இந்தப் பிரிவும் – இந்தப் பிரிவின் அடிப்படையிலான போராட்டமும் ஆரம்பமாகிவிட்டன. இது நீண்ட நெடியதொரு காலம் நீடிக்கப் போகின்றது.

தொன்மைமிக்க பாபரி மஸ்ஜிதை கோயிலாக மாற்றி விட்டதையும் இன்னும் பல பள்ளிவாசல்களைக் கோயிலாக மாற்றத் திட்டம் போட்டிருப்பதையும் பாருங்கள். இவை மேலே சொன்ன போராட்டத்தின் பகிரங்கமான அறிவிப்பு.

இந்தியாவின் உள்புறச் சூழல் இப்படி இருக்க, உலக அரங்கில் என்ன நடக்கின்றது என்பதை நாம் சற்று ஏறெடுத்துப் பார்ப்போம். இஸ்லாத்தை அடிப்படையாகக் கொண்டு ஈரானில் ஏற்பட்ட புரட்சி அதை அடுத்து அங்கு

அமைந்த இஸ்லாமியக் குடியரசு.

இவை அனைத்தும், இஸ்லாம் உலக அரங்கில் ஓர் அரசியல் கொள்கையாக மீண்டும் தலையெடுத்து விட்டது என்பதைப் பறையறிவித்தது.

இது கண்டு அஞ்சி, இஸ்லாம் மீண்டும்ஓர்அரசியல்கொள்கையாக தழைத்துவிடாமல் தடுக்கத் திட்டம் தீட்டியுள்ளார்கள். இந்த உலகில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றார்கள்.



வி.டி.ராஜசேகர்

தாங்கிக் கொள்ளவே இயலவில்லை.

ஏனெனில் ரஷ்யா ஏராளமான முஸ்லிம்களைத்தான் தன் அடிவயிற்றில்கட்டிக்கொண்டு வாழ்கின்றது. அந்தமுஸ்லிம்கள் நிமிர்ந்தால் அது நிமிடத்தில் இஸ்லாத்தின் பிடியில் வந்து விடும்.

இப்படிஇஸ்லாத்தைகண்டு வல்லரசுகளேஅஞ்சி நடுங்கிக் கொண்டிருக்கும்போது, இங்குள்ள இந்து வெறியர்களுக்கும் அது குளிரைக் கொடுத்து நடுங்க வைத்ததில் ஆச்சர்யமில்லை.

இஸ்லாம் வட்டியைத் தடுக்கின்றது – எதிர்க்கின்றது. அதுபோலவே மனிதன் மீது மனிதன் ஆதிக்கம் செலுத்துவதையும் அடிமைப் படுத்துவதையும் எதிர்க்கின்றது.

ஒரு மனிதனை இன்னொரு மனிதன் சுரண்டுவதையும், ஒரு நாட்டை இன்னொரு நாடு சுரண்டுவதையும் இஸ்லாம் தடுக்கின்றது. மறுக்கின்றது, எதிர்க்கின்றது. வட்டி, சுரண்டல் இன்னொரன்ன அநீதிகளை எதிர்க்க என்ன விலை தந்திடவும் இஸ்லாம் தயங்குவதில்லை.

வட்டி, அடுத்த நாடுகளைச்சுரண்டி வாழ்வது ஆகியவற்றையே (அடிப்படை) ஜீவாதாரமாகக் கொண்டு வாழும் முதலாளித்துவ நாடுகளால் இஸ்லாம் ஓர் அரசியல் சக்தியாய் உருவாவதைப் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. ஆகவே ஈரானில் ஏற்பட்ட இஸ்லாமிய அரசு கண்டு வெதும்புகின்றார்கள். அன்று அரேபியாவில் இறைவனின் திருத்தூதர் அவர்கள் வட்டி, சுரண்டல், ஆதிக்க ஆணவம் இவற்றிற்கெதிராகத்தான் போராடினார்கள். இவை கிஞ்சிற்றும் இல்லாத ஓர் சமுதாயத்தை அமைத்தார்கள்.

இஸ்லாம், மக்கா வாழ் மக்களிடம் குடிகொண்டிருந்த பணத்திமிர், இனத்திமிர், ஆதிக்க திமிர் அனைத்தையும் நொறுக்கி அவர்களைப் பண்புமிக்க மனிதர்களாக மாற்றிற்று.

ஈரானில் ஆட்சியில் அமர்ந்த இஸ்லாமிய அரசையும், அதன்மூலம் இஸ்லாம் உலகில் ஓர் அரசியல் கொள்கையாக மீண்டும் வளருவதையும் முதலாளித்துவ நாடுகளால்தான் பொறுத்துக் கொள்ள இயலவில்லை என்றால், கம்யூனிஸ நாடுகளாலும் அதைப் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. குறிப்பாக ரஷ்யாவால் இதைத்

இந்த இந்தியாவில் வாழும் இந்து வெறியர்கள், இஸ்லாம், தலித் மக்களின் விடுதலைக்கான ஒரே மார்க்கமாகவும் ஏனைய பிற்படுத் தப்பட்ட மக்களின் இரட்சகனாகவும் இந்தியாவுக்குள் தலை நிமிர்ந்து நின்றுவிடும் என்று அஞ்சுகின்றார்கள்.

குறிப்பாக இஸ்லாத்தின் சமூகநீதி, அது, ஆட்சியில் ஏறி அமுலுக்கு வரும்போது இந்தியாவில் தாண்டவமாடும் ஜாதி வேற்றுமையை உடைத்தெறிந்து அனைவரையும் சமமாக்கி விடும்.

இந்த சமத்துவத்தால் கவரப்படும், தலித் மக்களும் பிற்படுத்தப்பட்ட மக்களும் இஸ்லாத்தில் இணைந்திடுவார்கள். இங்குள்ள இந்துக்களால் ஜாதி அமைப்பில்லாத ஒரு சமுதாயத்தை நினைத்துக்கூட பார்க்க முடியாது.

இந்தியாவுக்குள் வந்த கம்யூனிஸத்தின் மேலும்ஜாதிஅமைப்புஏறிஅமர்ந்துகொண்டது. ஆகவே இந்தியாவில் இஸ்லாம் முதலாளித்துவ வாதிகளாலும், கம்யூனிஸவாதிகளாலும், வகுப்பு வாதிகளாலும் நிச்சயமாகத் தாக்கப்படும்.

இஸ்லாம் ஓர் அரசியல் கொள்கையாகத் தலையெடுப்பதை முளையிலேயே கிள்ளி எறிந்திட ஒரு பெரும் முயற்சி செய்யப்பட்டு வருகின்றது.

ஆதலால்தான் இன்று இந்தியாவில் முஸ்லிம்களைக் கண்டால் வெட்டுவோம், விரட்டுவோம் என்றெல்லாம் கோஷமிடுகின்றனர். திருடர்கள் தங்கள் நிழலைக்கண்டு நிலை நடுங்குகின்றார்கள்.



# UAPA

## உபா

# நீதிக்காக போராடுபவர்களின் மீது பாயும் சட்டங்களும் உருவாக்கப்படும் ஆதாரங்களும்

இந்தியாவில் தற்போது முஸ்லிம்கள், தலித்கள், கம்யூனிஸ்ட்கள் என மத்திய பாஜக அரசின் கொடூரமான முகங்களை கேள்வி கேட்பவர்கள் UAPA சட்டத்தின் கீழ் சிறைப்படுத் தப்படுகிறார்கள். பெரும்பாலும் இந்த UAPA சட்டம் இதற்காகவே பயன்படுத்தப்படுகிறது.

இந்தியாவில் UAPA சட்டத்திற்கு முன் தடா மற்றும் பொடா என்ற இரண்டு கொடூரமான சட்டங்கள் மக்களின் உண்மைக்கான குரலை முடக்குவதற்காக பயன்படுத்தப்பட்டது. அப்படி பொடா சட்டம் பின்வாங்கப்பட்டு அதற்கு மாற்றமாக கொண்டு வரப்பட்ட சட்டம் தான் UAPA.

UAPAன் கீழ் ஒருவர் கைது செய்யப்பட்டல் எந்த விதமான ஆதாரங்களும் தேவை இல்லை. வழக்கு பதிவு செய்யப்பட்டால் 6 மாதங்கள் சிறையில் இருக்க வேண்டும். பிணைகூட கிடைக்காது.

பொடா சட்டத்தின் கீழ் காவலர்கள் 60 முதல் 90 நாட்களுக்குள் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று இருந்தது. ஆனால் அதுவே UAPA சட்டத்தின் கீழ் 180 நாட்கள் முதல் 6 மாதத்திற்குள் என காலநிலை நீட்டிக்கப்பட்டது.

அதாவது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்த பிறகு அந்த குற்றச்சாட்டின் அடிப்படை யில் பிணை கிடைப்பதற்கு வாய்ப்பிருக்கிறது, பொடாவின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் 90 நாட்களுக்கு பிறகு பிணையில் வர வாய்ப் பிருக்கிறதென்றால் UAPA சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டவர் களுக்கு பிணை கிடைக்கவே 6 மாதங்கள் ஆகும். அதுவரை எந்த குற்றமும் செய்யாத நிலையிலும் சிறையில் இருக்க வேண்டும்.

அதிலும் ஆறு மாதங்களுக்கு பிறகு குற்றப் பத்திரிக்கையின் படி முகாந்திரம் இருக்குமானால் 10 ஆண்டு வரைக்கும் கூட பிணை கொடுக்காமல் UAPA சட்டத்தின் கீழ் தடுக்க முடியும். (National Herald 22.01.2021)

சிவில் உரிமைகளுக்கான மக்கள் ஒன்றியம் (PUCL) மற்றும் இந்தியாவின் 100 மனித உரிமை அமைப்புகள் இணைந்து UAPA சட்டம் கொடூர மானது இது மக்களின் குரலை நசுக்குகிறது. அதனை உடனடியாக அரசு நீக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்து கூட்டங்களை நடத்தி வருகிறார்கள்.

## இந்தியாவின் கொடூர சட்டங்கள்

இந்தியாவில் கடந்த காலங்களில் கொண்டு வரப்பட்ட மோசமான சட்டங்களில் அதிகம் பாதிக்கப்படுவர்கள் முஸ்லிம்களும், தலித் களுமாகவே இருந்திருக்கிறார்கள்.

அதன்படி முதலில் 1967ல் Unlawful Preventive Detention Act (UAPA) எனும் சட்ட விரோத தடுப்பு சட்டம் காங்கிரஸ் அரசால் இந்தியா முழுக்க கொண்டு வரப்பட்டது. இச் சட்டம் அரசாங்கத்தால் தவறாக பயன்படுத்தப் பட்டதால் அதன் பிறகு திரும்ப பெறப்பட்டது.

அதன்பிறகு 1980ல் தேசிய பாதுகாப்பு சட்டம் (NSA) கொண்டு வரப்பட்டது. அதன் பிறகு 1985க்கு முன்பு வரை இத்தகைய தவறாக பயன்படுத்தக்கூடிய சட்டங்கள் இந்தியாவில் இல்லை.

1984ல் சீக்கியர்கள் மீது நிகழ்த்தப்பட்ட வன்முறைக்கு பிறகு பயங்கரவாத தடுப்பு சட்டம் என தடா (TADA – Terrorist and Disruptive Activities (Prevention) Act) சட்டம் கொண்டு வரப்பட்டது. இந்த சட்டம் அரசால் தவறாக பயன்படுத்தப்பட்டது. 1994ல் மொத்தம் 70000 வழக்குகள் தடாவின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந் தது. ஆனால் குற்றம் நிரூபிக்கப்பட்ட வழக்குகள் 1%க்கும் குறைவாக இருந்தது.

இறுதியாக 1995ல் தடா சட்டம் முடிவுக்கு வந்தது.

அதன்பிறகு 2001ல் நாடாளுமன்ற தாக்குதல் நடந்தது அதை பயன்படுத்தி தீவிரவாத தடுப்பு சட்டம் என்ற பொடா (POTA – Prevention of Terrorism Act) சட்டம் கொண்டு வரப்பட்டது. இந்த சட்டத்தின் கீழ் பல அரசியல் தலைவர்கள் கைது செய்யப்பட்டார்கள், சமூக செயல்பாட் டாளர்கள் கைது செய்யபட்டார்கள். அதனால் 2004ல் இச்சட்டம் முடிவுக்கு கொண்டுவரப் பட்டது. அப்போதே UAPA சட்டமும் அமுலுக்கு கொண்டு வரப்பட்டது.

அதைத்தொடர்ந்து பிப்ரவரி 2019ல் புல்வாமா தாக்குதல் நடந்தது. இதற்கு பிறகு UAPA சட்டத்தில் கடுமையான திருத்தங்கள் கொண்டு வரப்படுகிறது. இது இதற்கு முந்தைய தடா மற்றும் பொடா சட்டத்தை விடவும் UAPA சட்டத்தை ஆபத்து மிகுந்ததாக மாற்றி அமைத்தது. (28.11.2020 wire)

## தனி மனிதர்களையும் தீவிரவாதியாக சித்தரிக்கலாம்

இந்த UAPA சட்டத்தில் ஜூலை 2019ல் மத்திய பாஜக அரசு ஒரு திருத்தம் கொண்டு வந்தது. (திமுக கூட ஆதரித்து வாக்களித்தது). இந்த திருத்தத்தின்படி தீவிரவாத குழுவில் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை தனி மனிதர்களையும் தீவிரவாதிகள் என்று கூறி இச்சட்டத்தின் கீழ் கைது செய்யலாம் என்று கொண்டு வரப்பட்டது.

இந்த சட்டம் கொண்டு வரப்பட்ட பிறகு கடந்த இரண்டு வருட செய்திகளை கவனிப் போருக்கு புரிந்து கொள்ள முடியும். இப்போ தெல்லாம் புதிய புதிய தீவிரவாத குழுக்கள் உருவாக்கப்படுவதில்லை. முதலில் புதிய பெயர் களில் தீவிரவாத குழுக்களின் பெயருடன் தீவிர வாதிகள் கைது என்ற செய்திகள் இடம்பெறும். ஆனால் இப்போது அதற்கு அவசியமில்லாத தால் தனிப்பட்ட நபர்களை கைது செய்து அவர் தீவிரவாத செயலுக்கு துணை போனார் என்று சொல்கிறார்கள்.

ஆனால், இதில் இருக்கும் பெரிய ஆபத்து என்னவென்றால் UAPAவின் கைது செய்யப்படு பவர்கள் மக்களின் மீது நிகழ்த்தப்படும் கொடு மைக்கு எதிராக குரல் கொடுக்கும் பேராசியர்கள், கல்லூரி மாணவர்கள், சமூக ஆர்வலர்கள், எழுத் தாளர்கள் போன்றோர்களாக இருக்கிறார்கள்.

RTI செயல்பாட்டாளரான அகீல் கோகாய், இந்தியாவின் மிக மோசமான நிலையில் இருக் கும் பழங்குடி மக்களுக்காக போராடும் ஆனந்த் டெம்புல்டே மற்றும் கைதம் நவ்லாகா, பத்திரி கையாளரான மஸ்ரத் ஜஹ்ரா, சிஏஏ எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்ட உமர் காலித், காஷ்மீர் பத்திரிக்கையாளர் கௌஹார் ஜீலானி என இன்னும் பல சமூக செயல்பாட்டாளர்கள் UAPA வழக்கின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டி ருக்கிறார்கள்.

குறிப்பாக பீமா கொரீயகான் வழக்கில் uapau கைது செய்யப்பட்டவர்கள் பேராசியர் களும், சமூக செயல்பாட்டாளர்களும் ஆவர். பல வருடங்களுக்கு கடந்தும் இன்னும் பிணை கூட வழங்கப்படாமல் சிறையில் இருக்கிறார்கள்.

டெல்லி கலவரத்தை காரணமாக வைத்து




பெற்றோரின் போராட்டங்களின்போது ஊடகங்களை சந்தித்த காஷ்மீரின் IG விஜய் குமார் எங்களிடம் அவர்கள் 60% தீவிரவாதிகள் என்பதற்கான ஆதாரங்கள் இருக்கிறதென்று பேசினார்.

60% ஆதாரமென்றால் முழு விசாரணைக்கு முன்பே 16வயது சிறுவன் சுட்டுக்கொல்லப்பட்டாரா என பல சமூக ஆர்வலர்களும் குரல் எழுப்பினார்கள்.

சிஏஏ எதிர்ப்பு போராட்டத்தில் பங்கெடுத்த செயல்பாட்டாளர்கள் பலர் UAPA பிரிவில் கைது செய்யப்பட்டனர்.

2007ல் ஆந்திர பிரதேசில் காவலர்களால் 11 ஆதிவாசி பழங்குடி பெண்கள் கற்பழிக்கப் பட்டனர். அந்த பெண்களின் உரிமைக்காகவும் பல்வேறு பழங்குடியினர் உரிமைக்காகவும் போராடிய கிருஷ்ணா என்ற செயற்பாட்டாளர் UAPA பிரிவின்கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் இருக்கிறார்.

இப்படி இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம்.

(Hindustan Times 30.06.2020)
(The wire 27.11.2020)

## மகனின் சடலத்தை கேட்ட தந்தை மீது UAPA

காஷ்மீரில் கடந்த வருடம் (2020) டிசம்பரில் எண்கவுண்டர் என்று கொல்லப்பட்ட 16 வயது சிறுவனின் தந்தை முஸ்தாக் வானி UAPA பிரிவு தீவிரவாத சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

16 வயது முஸ்தாக் வானி உட்பட இருவர் இந்த எண்கவுண்டரில் சுட்டுக்கொல்லப் பட்டனர். இது போலி எண்கவுண்டர் என்று பெற்றோர்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

கொல்லப்பட்டவர்களின் மீதும் இதற்கு முந்தைய காலங்களில் எந்த சட்டவிரோத செயல்களும் பதிவு செய்யப்படவில்லை.

இந்நிலையில் தன்னிடம் மகனின் சடலத்தையாவது கொடுக்க வேண்டும் என சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞனின் தந்தை முஸ்தாக் வானி போராட்டம் நடத்தினார். இதற்காக இவர் மீது தீவிரவாத பிரிவில் UAPA சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டி ருக்கிறது.

## பத்திரிக்கையாளர்கள் மீது போடப்படும் UAPA

காஷ்மீரை சேர்ந்த பத்திரிக்கையாளர் மசூத் ஜஹ்ரா தான் பதிவிட்ட 19 மாத பழமை யான சமூக வலைத்தள பதிவுக்காக அவர் மீது UAPA வழக்கு பாய்ந்தது, அதேபோல் தி இந்து ஆங்கில பத்திரிக்கையின் காஷ்மீர் பத்திரிகை யாளர் ஆசிக்கின் மீதும் UAPA வழக்கு போடப் பட்டிருக்கிறது.

பத்திரிகையாளர் மற்றும் எழுத்தாளர் கௌகார் ஜீலானியின் மீது அவரது சமூக வலைத்தளத்தில் பதிவிட்ட கருத்துக்காக UAPA பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

உபியில் ஹாத்ராஸ் பகுதியில் தலித் பெண் கொடூரமாக கொல்லப்பட்ட நிகழ்வை செய்தி எடுக்க சென்ற ஆசிக் காப்பான் என்ற கேரள பத்திரிக்கையாளர் UAPA வழக்கின் கீழ் கைது செய்யப்பட்டுசிறையில்இருக்கிறார். இப்படிபல பத்திரிகையாளர்களும் பாதிக்கப்பட்டிருக் கிறார்கள். (26.04.2020 The wire)

## UAPA சட்டம் மிக கொடுமையானது – ஏன்..?

UAPA சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் போது அப்பாவியாக இருந்தாலும் அந்த தனிப் பட்ட நபரின் மொத்த வாழ்க்கையும் சீரழித்து விடும் வாய்ப்பு அதிகம் இருக்கிறது.

அப்பாவி ஒருவர் uapaன் கைது செய்யப்படும் போது அவரை சிறைக்குள் வைக்க சில வழிகள் பின்பற்றப்படுகின்றன

கைது செய்து சிறையில் தள்ளிய பிறகு அவருக்கு எதிராக பொய் சாட்சியங்கள் உருவாக் கப்படும். அந்த சாட்சியங்களை நீதிபதிக்கு முன்பாக குற்றவியல் சட்டம் பிரிவு 164க்கு கீழ் பதிவு செய்யப்படும். தனக்கு எதிராக சாட்சியம் அளிக்கப்பட்டவரின் விவரங்கள் கைது செய்யப் பட்டவருக்கு வழங்கப்படாது.

கைது செய்யப்பட்ட ஆறு மாதத்திற்கு பிறகு குற்றப்பத்திரிக்கை கைது செய்த நபருக்கு தரப் படும். அப்போது தான் தன் மீது என்னென்ன குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருக்கிறது என்பது கைது செய்யப்பட்டவருக்கு தெரியும். இந்த ஆறு மாத காலத்தில் பிணை வழங்கப்படாது.

ஆறு மாதத்திற்கு பிறகு பிணை வழங்கும் வாய்ப்புகள் இருப்பதால் குற்றப்பத்திரிக்கையில் மற்றொரு பிரிவில் வழக்கு பதிந்து மீண்டும் ஒரு ஆறு மாத காலம் சிறையிலேயே பிணை கிடைக்காமல் வைக்கப்படுவார்.

பிறகு விசாரணைக் காலம் தொடங்கப்படும். இப்போதும் கைது செய்யப்பட்டவருக்கு பிணை கொடுத்தால் சாட்சிகள் கலைத்துவிடுவார் என பிணை கிடைக்காமல் செய்து விடுவதற்கான சட்ட வழிகள் இருக்கிறது.

விசாரணைக் காலம் முடிய ஐந்து வருடங் களாவது ஆகும். இந்த ஐந்து வருடங்களும் கைது செய்யப்பட்ட நபர் சிறையில் கழிக்க வேண்டி யிருக்கும். இப்படி கைது செய்யப்பட்டு சிறைக் காலத்திற்கு பின் நிரபராதி என விடுதலை செய்யப்பட்டாலும் அவருக்கு எந்த வித நிவாரணமும் வழங்கப்படாது.

கேரளாவில் ISIS தீவிரவாதி என கைது செய்யப்பட்டவரின் வழக்கில் இப்படித்தான் நடந்தது. இறுதியில் அவர் குற்றமற்றவர் என விடுதலை செய்யப்பட்டார். ஆனால், அதற்குள் நான்கு வருடங்களுக்கு மேல் அவர் சிறையில் இருக்க வேண்டியதாயிற்று.

இப்போது நடந்து கொண்டிருக்கும் பீமா கொரிகியன் (Bhima Koregaon) வழக்கும் இதை போன்று தான். நான்கு வருடங்களுக்கு மேல் கல்வியாளர்கள் சிறையில் இருக்கிறார்கள். அவர் களுக்கு பிணையும் இல்லை. அவர்களுக்கெதி ரான சாட்சியங்கள் நீதிமன்றங்களின் முன்னால் நிரூபிக்கப்படவுமில்லை.

இதுவரை UAPA வழக்குகள் பதிவு செய்த வழக்குகளில் 67% வழக்குகளில் அந்த வழக்கில் சம்பந்தப்பட்டவர் குற்றமற்றவர் என்று நிரூபிக் கப்பட்டிருக்கிறார் அல்லது அந்த வழக்கு நிரா கரிக்கப்பட்டிருக்கிறது. மீதி 33% வழக்குகளிலும் குற்றவாளிகள் என நிரூபிக்கப்படவில்லை. விசா ரணைக்காலத்தில் இருக்கிறது.

UAPA பிரிவு 43(ஈ) கீழ் கைது செய்யப்பட்ட நபரின் மீது எந்த சாட்சியங்கள் இல்லாத போதும் விசாரணை அதிகாரிகள் அவர் மீது குற்றச்சாட்டை சுமத்தினால் பிணை வழங்காமல் மறுக்க நீதிபதிக்கு அதிகாரம் இருக்கிறது.

காவல்துறை உள்நோக்கத்தோடு யாரை வேண்டுமானாலும் பல ஆண்டுகள் சிறைப் படுத்த முடியும் என்பது தான் UAPA சட்டத்தின் சாராம்சம்.

## உயிர் போகும் நிலையிலும் பிணை கிடையாது

2014ல் புனேவை சேர்ந்த தலித் மாணவ செயல்பாட்டாளரான கன்ச்சன் நனவாரே மாவோயிஸ்ட் தொடர்பு என்று கூறி கைது செய்யப்பட்டார். அதன் பிறகு உடல்நிலை மிக மோசமாக மாறியது.

விசாரணைக்காலத்தில் ஒவ்வொரு முறையும் தன் உடல்நிலையை எடுத்து கூறியும் நீதிமன்றம் பிணை மறுத்துவிட்டது. இறுதியில் 2021 ஜனவரி, 16 ல் அவரது மூளையில் ரத்தக்கசிவு ஏற்பட்டு இறந்து விட்டார்.

கன்ச்சன் மீது 9 வழக்குகள் இருக்கிறது. அதில் 6 வழக்குகளில் நிரபராதி என்று விடுவிக் கப்பட்டிருக்கிறார். இதில் UAPA சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கின் கீழ் தான் சிறைத்

தண்டனை அனுபவித்து வந்தார். உடல் மிக மோசமான சூழலிலும் UAPA சட்டத்தின் காரணமாக பிணை மறுக்கப்பட்டது, அதன் காரணமாக இறந்தும் விட்டார். இதுதான் UAPA சட்டத்தின் கொடூரத்திற்கான சாட்சி. (The Wire 28.01.2021 )

## 10 வருடம் கடந்தும் சிறையில் இருக்கும் ஜக்கரியா

2008ல் நடந்த பெங்களூரு குண்டு வெடிப்பில் தொடர்பிருக்கிறது என்று ஜக்கரியா தன்னுடைய 19வது வயதில் UAPA பிரிவின் கீழ் கைது செய்யப்பட்டார். 10 வருடங்கள் கடந்தும் விசாரணைக் காலத்திலேயே தான் வழக்கு இருக்கிறது.

இவருக்கு எதிரான சாட்சியங்களாக இணைக்கப்பட்டிருக்கும் இருவரும் எங்களை காவலர்கள் கட்டாயப்படுத்தி கையெழுத்து வாங்கினார்கள் என்று வெளிப்படையாக ஊடகங்களுக்கு தெரிவித்து விட்டனர். ஆனாலும் விசாரணையும் தொடங்கப்படவில்லை, பிணையும் வழங்கப்படவுமில்லை. 10 வருடத்திற்கும் மேலாக சிறையில் இருக்கிறார்.

(27.07.2020 Makdoob media)


## குற்றம் நிரூபிக்கப்படும் விகிதம் மிக மிக குறைவு

மத்திய அமைச்சராக இருக்கும் பாஜகவை சேர்ந்த கிருஷ்ண ரெட்டி நாடாளுமன்றத்தில் UAPA தொடர்பாக கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த போது, “2016 முதல் 2019 வரை UAPA சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களில் நீதிமன்றத்தால் 2.2% வழக்குகளுக்கு மட்டுமே குற்றம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. 2019ல் மட்டும் 1948 பேர் மஅடஅ வழக்குகளின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்” என்றார்.

அதாவது வெறும் 2.2% வழக்குகளில் தான் குற்றவாளிகள் நிரூபிக்கப்பட்டிருக்கிறார்கள். (Newsclick 13.02.2021) இதனை வைத்தே எப்படி UAPA சட்டம் மக்களுக்கு விரோதமாக செயல்படுத்தப்படுகிறது என்று உணரலாம்.

UAPA விற்கு அடுத்தப்படியாக மக்களின் குரலை ஒடுக்குவதற்கு பயன்படுத்தப்படும் சட்டம் தேசத் துரோகம் (Sediton) சட்டம். இதனை அடுத்தடுத்து நாம் பார்க்கலாம்.

– அபூ சித்திக்.






# பாயும் சட்டங்களும் உருவாக்கப்படும் ஆதாரங்களும்

இந்திய அரசுக்கு எதிராக நாசகர வேலையில் ஈடுபடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டை முன் வைத்து சமூக செயற்பாட்டாளர்கள் சிலரை ஜூன் 2018 இல் கைது செய்தது புனே காவல்துறை.

## கைது செய்யப்பட்டவர்களில் ரோனா வில்சனும் ஒருவர்

2018 ஜனவரி 1– இல் நடந்த எல்கார் பரிஷத் மாநாட்டில் கலவரம் நடந்தது. அதனைத் தொடர்ந்து வழக்குகள் பதியப்பட்டன. இவ் வழக்குகளில் தான் ராணா வில்சனும் மற்ற சமூக செயற்பாட்டாளர்களும் கைது செய்யப்பட்டனர். ரோனா வில்சன் கைது செய்யப்படுவதற்கு முன் அவருடைய கணினியில் இருந்து 10 கடிதங்களை கைப்பற்றியது காவல்துறை. கடிதங்களில் நாசவேலைகளில் ஈடுபட்டதற்கான ஆதாரங்கள் உள்ளன என்று கூறப்பட்டது. மிகப்பெரும் சதி வெளியே வந்துள்ளது எனவும் பரபரப்பு ஊட்டினர்.

அவருடைய கணினியில் அவருக்குத் தெரியாமல் ஊடுருவிய அட்டாக்கர் ஒருவர் இந்த பத்து கடிதங்களையும் திணித்து உள்ளார் என்று அறிக்கை அளித்துள்ளது டிஜிட்டல் தடய அறிவியலை மேற்கொள்ளும் ஆர்சனல் கன்சல்டிங் நிறுவனம். இந்நிறுவனம் அமெரிக்காவின் மாசச்சூசெட்ஸ் (Massachusetts) மாநிலத்தில் இயங்கி வருகிறது.

வில்சனின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க லேப்டாப்பின் எலக்ட்ரானிக் நகலை பெற்றுக் கொண்டு இந்த அறிக்கையை அளித்துள்ளது. யார் இந்த சைபர் தாக்குதலை நடத்தியது என்ற விவரத்தை ஆர்சனல் நிறுவனம் குறிப்பிடவில்லை. மூன்று வல்லுனர்களை கொண்டு அறிக்கையை சரி பார்த்துள்ளது வாஷிங்டன் போஸ்ட்.

அவர்களின் கூற்றுப்படி அறிக்கையில் கூறப்பட்டிருப்பது சரியானதே.

தீவிரவாத தடுப்பு சட்டத்தின் கோரப் பிடியை பயன்படுத்தி இரண்டு வருடங்களாக விசாரணை கூட நடத்தப்படாமல் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளனர் சமூக செயற்பாட்டாளர்கள். இந்த வழக்கின் மூலம் அரசுக்கு எதிராக மாற்றுக் கருத்து உடையவர்களை கைது செய்து, மிரட்டி பணிய வைத்திட மோடி அரசு முயல்கின்றது என்கின்றனர் சமூக உரிமை ஆர்வலர்களும் சட்ட வல்லுனர்களும்.

ஆர்சனலின் அறிக்கை தன்னுடைய கட்சிக்காரர் அப்பாவி என்பதை நிரூபணம் செய்கிறது. மேலும் அவர் மீது போடப்பட்டுள்ள வழக்கை அது நிலைகுலைய செய்துவிடும் என்கிறார் வில்சனுக்காக வாதிடும் வழக்கறிஞர் சுதீப் பஸ்போலா. வில்சனுக்கு எதிராக போடப்பட்ட வழக்கை தள்ளுபடி செய்ய கோரி இந்த அறிக்கையுடன் கூடிய ஒரு மனுவை பம்பாய் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் அவரின் வழக்கறிஞர்.

ஆனால் வில்சனுடைய கணினியில் மால்வேர் இருந்ததற்கான ஆதாரம் எதுவும் சட்ட அமலாக்கத் துறையால் மேற்கொள்ளப்பட்ட தடய அறிவியல் சோதனையில் கண்டுபிடிக்கப்படவில்லை என்கிறது தேசிய புலனாய்வு முகமை.

சமூகத்தின் அடித்தட்டில் வாழும் பெரும்பாலான பழங்குடி இன மக்களுக்காகவும் தலித்துகளுக்காகவும் குரல் எழுப்பும் செயற்பாட்டாளர்கள் இந்த வழக்கின் மூலம் குறி வைக்கப்பட்டனர். மேலும் அவர்கள் மோடி அரசுக்கு எதிராக வெளிப்படையாக பேசும் தன்மை கொண்டவர்கள். இந்திய அரசுக்கு எதிராக கிளர்ச்சி செய்வதற்காகதடைசெய்யப்பட்ட மாவோயிஸ்ட் இயக்கத்துடன் இணைந்து சதி செய்தனர் என்ற குற்றச்சாட்டை அவர்கள் மறுக்கின்றனர்.

வில்சனுடைய லேப்டாப்பில் இருந்து கைப்பற்றப்பட்ட சதி வேலைகளை அம்பலப்படுத்தும் கடிதங்களே சமூக செயற்பாட்டாளர்களுக்கு



எதிராக வைக்கப்பட்ட குற்றச்சாட்டில் தலையாயது.

தனக்கு துப்பாக்கிகளும் வெடி பொருட்களும் வேண்டும். உடனடியாக நரேந்திர மோடியை கொல்லுங்கள் என்று மாவோயிஸ்ட் உறுப்பினர் ஒருவருக்கு கடிதத்தை வில்சன் எழுதியுள்ளார் என்று போலீஸ் தரப்பு கூறிய குற்றச்சாட்டுதான் பூதகரமாக வெடித்தது. இந்தக் கடிதம் உட்பட மேலும் ஒன்பது கடிதங்களும் வில்சன் உடைய கணினியில் மறைமுக போல்டர் (Hidden folder) ஒன்றில் அடையாளம் தெரியாத அட்டாக்கர் ஒருவரால் திணிக்கப்பட்டுள்ளன. மால்வேர் என்கிற வைரஸை அவருடைய கணினியில் செலுத்தி, கணினியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து அவர் உளவும் பார்க்கப்பட்டு உள்ளார் என்று கண்டுபிடித்துள்ளது ஆர்சனல் நிறுவனம்.

சைபர் அட்டாக் பற்றி விரிவான அறிக்கையை பகிர்ந்துள்ளது ஆர்சனல் நிறுவனம். 2016 ஜூனில் வில்சனின் நண்பரும் மற்றொரு சமூக செயல்பாட்டாளருமான ஒருவரின் பெயரிலிருந்து வந்ததை போன்ற சில இமெயில்கள் வில்சனுக்கு வந்துள்ளன.

சிவில் உரிமை கழகத்தினுடைய அறிக்கையைப் படிக்க அதில் வந்துள்ள இணைப்பை கிளிக் செய்து டவுன்லோட் செய்யுங்கள் என்று அவருடைய நண்பர் அவரைக் கேட்டுக் கொண்டுள்ளார். ஆனால், தீங்கை விளைவிக்கும் நெட்வயர் (Netwire) எனப்படும் மென்பொருள் பதிவிறக்கம் ஆகி, அவருடைய கணினியை ஹேக்கரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டது. மேலும், வில்சன் எந்தெந்த Keyகளையெல்லாம் பயன்படுத்துகிறார் என்பதையும், அவருடைய கடவுச்சொற்கள், பிரவுசிங் நடவடிக்கைகள் அனைத்தையும் அந்த மால்வேர் திருடியுள்ளது என கண்டுபிடித்துள்ளது ஆர்சனல் நிறுவனம்.

திணிக்கப்பட்ட பத்து கடிதங்களும் மைக்ரோசாப்ட் வேர்டின் (Microsoft Word) லேட்டஸ்ட் பதிப்புகளை கொண்டு உருவாக்கப்பட்டவை. ஆனால் மைக்ரோசாப்ட் வேர்டின் புதிய பதிப்பு வில்சனின் கணினியில் கிடையவே கிடையாது. மேலும் அந்த கடிதங் களையோ அல்லது மறைமுக போல்டர் களையோ ஓபன் செய்ததற்கான எந்த ஆதாரமும் இல்லை என்கிறது ஆர்சனல் நிறுவனம்.

ரொம்ப பக்குவமாக இந்த அட்டாக் நடத்தப்பட்டுள்ளது என்கிறார் ஆர்சனல் நிறுவனத்தின் தலைவர் ஸ்பென்சர். 300 மணி நேரங்களுக்கும் அதிகமான மணி நேரங்கள் லேப்டாப்பை ஆய்வு செய்ய செலவிட்டுள்ளது ஆர்சனல். வில்சன்மட்டும் இந்த சைபர் தாக்குதலுக்கு ஆளாகிடவில்லை. அவருடன் தொடர்பில் இருந்தவர்களின் மீதும் சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வழக்கு எப்படி ஆரம்பித்தது? பீமா கோரை கான் யுத்தம் எப்பொழுது ஆரம்பித்தது? அதன் பிறகு என்னென்ன சம்பவங்கள் நடந்தன என்பதை வரிசையாக காண்போம்:

## 1 ஜனவரி 1818

17–ம் நூற்றாண்டின் இறுதியில் மராட்டியத்தை ஆண்ட பேஷ்வா மன்னர்களின் கீழ் 'மஹர்' சமூகத்தினர் பல்வேறு சாதிக் கொடுமைகளைச் சந்தித்தனர்.

1818–ம் ஆண்டு பேஷ்வா ராணுவத்திற்கு எதிரான சண்டையில் இறந்த தலித்துக்களுக்கு அஞ்சலி செலுத்த ஒவ்வொரு ஆண்டும் பெரும் எண்ணிக்கையிலான தலித்துக்கள் பீமா கோரேகானுக்கு செல்வர்கள்.

பிரிட்டிஷ் ராணுவத்தில் படை வீரர்களாக இருந்த தலித்துக்கள் (மஹர்), பிராமணிய பேஷ்வாக்களுக்கு எதிராக சண்டையிட்டனர்.

## 1 ஜனவரி 1927

1927–ம் ஆண்டு இந்த நினைவிடத்திற்குச் சென்ற டாக்டர் அம்பேத்கர், இந்த படை வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்.

## 13 ஜூன் 2016

ஆர்சனல் நிறுவனம் அளித்த அறிக்கையின் படி, மேற்குறிப்பிட்ட தேதியில் தான், வில்சனின் கணினியில் நெட் வயர் மால்வேரை பயன்படுத்தி முதல் தாக்குதல் நடைபெற்றுள்ளது. அத்தேதியில் இருந்து 17 ஏப்ரல் 2018 வரை பலமுறை சைபர் தாக்குதல்கள் நடந்துள்ளன.

## 2017 இலிருந்து

தலித் மற்றும் பழங்குடியின மக்களுக்காக போராடும் சமூக செயற்பாட்டாளர்களும் வழக்கறிஞர்களும் இஸ்ரேலிய நிறுவனமான NSO இன் பெகாசஸ் மென்பொருளை பயன்படுத்தி உளவு பார்க்கப்பட்டனர். நிகல் சிங் ரத்தோட், பெலா பாட்டியா, சாலினி கெரா, ஆனந்த் டெல்டும்டே ஆகியோர்கள் இந்தப் பட்டியலில் உண்டு.

சந்தேகப்படும்படியான எண்களில் இருந்து வாட்ஸ்அப் அழைப்புகள் வருகின்றன ( வைரஸ் தாக்குதல் நடத்துவதற்காக செய்யப்படும் ஒரு அணுகுமுறை) என்று ரத்தோட் தெரிவித்தார். அவரும், மற்றவர்களும் மறைமுகமாக கண்காணிக்கப்படுகிறார் கள் என்று சிட்டிசன் ஆய்வு கூடம் தெரிவித்தது.

## 31 டிசம்பர் 2017

250 தலித் அமைப்புகளுடன் இணைந்து ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி PB சாவந்த் அவர்களும் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி BG கோல்சே பாட்டில் அவர்களும் எல்கார் பரிசத் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தனர். வரலாற்று சிறப்புமிக்க பீமா கோரேகான் யுத்தத்தை பற்றி சிறப்புரையாற்றினார்கள் தலித் தலைவர்கள்.

அரசியலமைப்பை பாதுகாக்க வேண்டும் என்றும் ஆர்எஸ்எஸ், பிஜேபி யின் பிரித்தாளும் சூழ்ச்சியை எதிர் கொள்ள வேண்டும் என்றும் நிகழ்ச்சியில் உறுதிமொழி எடுக்கப்பட்டது.

## 1 ஜனவரி 2018

பீமா கோரேகான் சம்பவத்தின் 200வது ஆண்டு நிறைவு விழாவை நினைவு கூறும் விதமாக தலித் அமைப்புகளால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சிகளுக்கு பல்வேறு இந்து அமைப்புகளும் மராத்தி அமைப்புகளும் எதிர்ப்புகளை தெரிவித்தன.

சம்பவத்தன்று நடந்த பேரணியில் தலித் அமைப்புகள் தாக்கப்பட்டன. கலவரம் மூண்டது. 28 வயதுடைய தலித் ராகுல் கொல்லப்பட்டார். அதிகமானோர் காயமுற்றனர்.

பதற்றம் அடுத்த நாளும் தொடர்ந்தது. தொடர்ந்து நடந்த கலவரத்தில் 16 வயது உடைய தலித் யோகேஷ் பிரகலாத் ஜாதவ் கொல்லப்பட்டார்.

## சதி செய்தது யார்?
## 2 ஜனவரி 2018

பகுஜன் ரிபப்ளிகன் சோசியலிஸ்ட் கட்சியை சேர்ந்த அனிதா ரவிந்திர சால்வே என்பவர் புகாரொன்றை தொடுத்தார். அதில் பிதேவும், எக்போதேவும் மேலும் அவர்களின் ஆதரவாளர்களுமே தலித் பேரணியில் தாக்குதலை நடத்தினர். கொடிகளை பிடுங்கி அதை எரித்தனர் என்று குற்றம் சாட்டினார்.

சம்பஜி பிதே – முன்னாள் ஆர் எஸ் எஸ் ஊழியர். மிலிந்த் எக்போத்தே – முன்னாள் பிஜேபி, சிவசேனா உறுப்பினர். இவர்கள் இருவர் மீதும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப் பட்டது.

## 8 ஜனவரி 2018

அதன் பின்பு, புனேவை சேர்ந்தே வணிகர் துஷார் தம்குடே ஒரு புகாரை தொடுத்தார். பீமா கோரைகானில் நடந்த கலவரத்தை தூண்டியது இடதுசாரி செயற்பாட்டர்களே என்று குற்றம் சாட்டினார். இந்த புகார் பின்னர் முதல் தகவல் அறிக்கையாக புனே காவல்துறையால் மாற்ற ப்பட்டது. இதுவே பீமா கோரைகான் வழக்கு என்று அறியப்படுகிறது.

## 14 மார்ச் 2018

உச்ச நீதிமன்றம் முன் ஜாமீனை மறுத்ததால், மிலிந்த் எக்போதே கைது செய்யப்பட்டார். 19 ஏப்ரல் 2018 அன்று அவருக்கு ஜாமீன் வழங்கப் பட்டது. சம்பாஜி பிதே கைது செய்யப்பட வில்லை.

## 17 ஏப்ரல் 2018

ரோனா வில்சன், சுரேந்திர கட்லிங், சுதிர் தவாலே, ஹர்ஷலி போதார், ஜோதி ஜக்டப், ரமேஷ் கைச்சர், தீபக் தெங்லே ஆகியோர்களின் வீடுகளில் ரைடு நடத்தப்பட்டது. வில்சன் மற்றும் கட்லிங்கின் கணினி உட்பட எலக்ட்ரா னிக் பொருள்கள் அதில் கைப்பற்றப்பட்டன.

ரைடுகளுக்கும் பீம கோரைகான் வன்முறை சம்பவத்திற்கும் தொடர்பில்லை. நக்சல் அமைப் பினரோடு தொடர்பில் இருப்பவர்களின் மீது எடுக்கப்படும் நடவடிக்கையின் ஒரு பகுதியே ரைடுகள் என்றார் மஹாராஷ்டிரா அப்போதைய முதல்வர் பட்னாவிஸ்.

## கைதுகளின் ஆரம்பம், அர்பன் நக்சல் என்கிற பிரச்சாரம்

## 6 ஜனவரி 2018

## இவ்வழக்கில் புனே காவல்துறையின் முதல் கைதுகள்:

சுதிர் தவாலே – தலித் உரிமை போராளி

சுரேந்திர கட்லிங் – மனித உரிமை வழக்கறிஞர்

மகேஷ் ராவத் – நில உரிமை போராளி

சோமா சென் – தலித் மற்றும் பெண்கள் உரிமை போராளி

ரோனா வில்சன் – கல்வியாளர், சமூக செயற்பாட்டாளர், அரசியல் சிறை கைதிகளுக் காக போராடும் குழுவின் உறுப்பினர்

## 4 ஜுலை 2018

இவ்வளவு பெரிய விஷயம் நாட்டில் நடந் துள்ளது. எப்படி சும்மா இருப்பார் இந்திய இராணுவ வீரர்களின் இறப்பில் சுகம் கண்ட அர்னாப் கோஸ்வாமி. வழக்கறிஞர் சுதா பரத் வாஜ் உடன் நிகழ்ச்சி ஒன்றை நடத்தினர். அவரை மாவோயிஸ்ட் என்றும் மோடியின் அரசை கவிழ்க்க கஷ்மீரை போன்ற நிலைமையை இந்தியா முழுவதும் உண்டாக்க சுதா கடிதம் எழுதியதாக காட்டு கூச்சல் போட்டார். குற்ற சாட்டை மறுத்த சுதா ரீபப்ளிக் டீவியின் மீது வழக்கு தொடுத்தார்.

இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை பல செய்தி சேனல்கள் நடத்தின. மாவோயிஸ்ட் சதி, அர்பன் நக்சல் என்ற கதைகள் பல அந்நேரங்களில் கட்டவிழ்த்து விடப்பட்டன. இதற்கு சமூக ஊடகங்களும் விதிவிலக்கல்ல.

## 28 ஆகஸ்ட் 2018

மற்ற காவல்துறையின் துணையோடு புனே காவல்துறை ஒன்பது செயற்பாட்டாளர்களின் வீடுகளில் ரைடு நடத்தியது. ஐந்து பேரை கைது செய்தது.

சுதா பர்தவாஜ் – மனித உரிமை போராளி

அருண் பெரீரா – தலித் மற்றும் பழங்குடி இன மக்களுக்காக போராடும் வழக்கறிஞர்

வெர்நோன் கோன்சல்வே – தலித், பழங்குடி இன சிறைக் கைதிகளின் உரிமைகளுக்காக போராடுபவர்

வரவர ராவ் – தெலுகு கவிஞர், கம்யூனிச சித்தாந்தவாதி

கவ்தம் நவ்லகா – எழுத்தாளர், மனித உரிமை போராளி ( குறிப்பாக காஷ்மீர், சட்டிஸ்கர்)

உயர்நீதிமன்ற, உச்சநீதிமன்ற தலையீட்டி னால் ஆரம்பத்தில்அவர்கள் வீட்டு சிறையில்




வைக்கப்பட்டனர்.

## அக்டோபர்– நவம்பர் 2018

இரண்டாவதாக ரைடு நடத்தப்பட்ட ஐந்து பேரில் கவ்தம் நவ்லகா தவிர மற்றவர்கள் கைது செய்யப்பட்டு புனேவிற்கு கொண்டு செல்லப் பட்டனர். முதல் தகவல் அறிக்கையில் பெயர்கள் சேர்க்கப்பட்டு கொண்டே இருந்தன. ஆனந்த் டெல்டும்டே, பாதிரி ஸ்டான் சுவாமியின் பெயரும் இணைக்கப்பட்டது.

## 15 நவம்பர் 2018

ஜூன் 2018 இல் கைது செய்யப்பட்ட ஐந்து பேர் மீது முதல் குற்றப்பத்திரிகை சிறப்பு நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. மோடியை கொல்ல சதி, வெடிப் பொருள்களை பெறுவதற் காக முறையிடுதல் இவையே குற்றபத்திரிகை யின் முக்கிய சாரம்சம். இதை நிரூபணம் செய்ய கைப்பற்றபட்ட கடிதங்கள்.

கைது செயப்பட்டவர்கள் தடை செய்யப் பட்ட மாவோயிஸ்ட் இயக்கத்துடன் இணைந்து செயல்பட்டதால் UAPA (Unlawful activities Prevention Act) பயன்படுத்தியது சரி என்று காரணம் கூறப்பட்டது. அனைவருக்கும் ஜாமீன் மறுக்கப்பட்டது.

## 21 பெப்ரவரி 2019

ஆகஸ்ட் 2018 இல் கைது செய்யப்பட்டவர் களுக்கு எதிராக கூடுதல் குற்றபத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

## 24 ஜனவரி 2020

புனே காவல்துறையிடமிருந்து தேசிய புல னாய்வு முகமைக்கு வழக்கை மாற்றியது மத்திய அரசு. எதற்காக மாற்றப்பட்டது என்பதற்கு காரணம் கூறப்படவில்லை.

## 14 ஏப்ரல் 2020

கைது செய்யப்படுவதில் இருந்து இடைக்கால தடையை உச்சநீதிமன்றம் வழங்காததால், ஆனந்த் டெல்டும்டேவும், கவ்தம் நவ்லக்காவும் NIA விடம் சரண் அடைந்தனர்.

## 28 ஜுலை 2020

டெல்லி பல்கலைகழகத்தின் துணை பேரா சிரியர் ஹனி பாபுவை NIA கைது செய்தது. அவருடைய வீடு இருமுறை சோதனைக்கு உள்ளாக்கப்பட்டது. குற்றத்தோடு சம்பந்தப் படுத்தும் ஆதாரங்கள் சிக்கியுள்ளன என்றது NIA.

## 8 செப்டம்பர் 2020

சகர் கோர்கே, ரமேஷ் கைசோர், ஜோதி ஜக்டப் ஆகியோரை கைது செய்தது சஜஅ. 31 டிசம்பர் 2017 இல் நடந்த எல்கார் பரிசத்தில் வன்முறையை தூண்டும் விதமாக பேசினார்கள் என்று குற்றம் சாட்டியது NIA. மேலும் வன்முறை யை தூண்ட நக்சல்களுடன் சேர்ந்து சதி செய்தார்கள் என்றும் கூறியது.

## 8 அக்டோபர் 2020

83 வயதுடைய பாதிரி ஸ்டான் சுவாமியை கைது செய்தது NIA.

## 10 அக்டோபர் 2020

ஆனந்த் டெல்டும்டே, கவ்தம் நவ்லகா, ஹனி பாபு, சகர் கோர்கே, ரமேஷ் கைச்சோர், ஜோதி ஜக்டப், மிலிந்த் டெல்டும்டே ஆகியோருக்கு எதிராக கூடுதல் குற்றபத்திரிக்கையை NIA தாக்கல் செய்தது.

இவர்கள் எட்டு பெரும் மற்ற குற்றம் சாட்டப்பட்டவர்களுடன் இணைந்து தடை செய்யப்பட்ட மாவோயிஸ்ட் இயக்கத்தின் கொள்கைகளை பரப்ப சதி செய்தனர் என்று குற்றப்பத்திரிகையில் கூறப்பட்டது.

## அக்டோபர் 2020

குற்றம் சாட்டப்பட்டவர்களின் ஜாமீன் கோரிய அனைத்து மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டன.

## 8 பெப்ரவரி 2021

வில்சனின் வழக்கறிஞர் NIA சிறப்பு நீதி மன்றத்தில் ஆர்சனல் அளித்த அறிக்கையை சமர்பித்தார். அவர் கைது செய்யப்படுவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே அவருடைய கணினி சைபர் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது என்றும் குற்றம் சாட்டப்படுவதற்கு ஆதாரமாக அமைந்த கடிதங்கள் அனைத்தும் ஹேக்கரால் திணிக்கப்பட்டவை என்றும் அறிக்கையில் கூறப் பட்டுள்ளது. மேலும் மற்ற குற்றம் சாட்டப்பட் டவர்களின் கணினிகளும் தாக்குதலுக்கு ஆளாகி யுள்ளன என்கிறது அறிக்கை.

## 10 பெப்ரவரி 2021

ஆர்சனல் அளித்த அறிக்கையை செய்தாக வெளியிட்டது வாஷிங்டன் போஸ்ட். கடிதங்கள் திணிக்கப்பட்ட பகுதியை சுதந்திரமான சிறப்பு புலனாய்வு அணியை கொண்டு விசாரணை செய்ய வேண்டும் என்று பம்பாய் உயர்நீதிமன் றத்தில் முறையிட்டுள்ளார் வில்சனின் வழக்கறி ஞர். UAPA வின் கீழ் போடப்பட்ட வழக்குகளை ரத்து செய்ய வேண்டும் அதில் கோரப்பட் டுள்ளது.

## 22 பெப்ரவரி 2021


பம்பாய் உயர்நீதிமன்றம் வரவர ராவுக்கு மெடிக்கல் காரணங்களுக்காக வேண்டி ஆறு மாத காலம் பிணை அளித்துள்ளது.

## CAA போராட்ட வழக்கும் பீம கோரைகான் வழக்கும்

இந்துத்துவாவை இந்த நாட்டில் முழுமை யாக செயல்படுத்த துடிக்கும் பாஜக அரசு முஸ் லிம்களையும் தலித்களையும் தேச விரோதி என்றும் அர்பன் நக்சல் என்றும் பட்டம் கொடுத்து குரல்வளையை நெறிக்கின்றது. வழக்குகளை தொடுத்து பணிய வைத்திடலாம் என்று ஒவ்வொருவராக குறிவைத்து இயங்குகின்றது. வி.டி. இராஜசேகர் கூறியது போல தலித்களும் முஸ்லிம்களும் தனித்தனியாக போராட வேண்டியதில்லை. அவர்கள் இருவரும் இணைந்தே சமூக நீதியை பெற போராட வேண்டும். இந்துத்துவாவை வீழ்த்திட கரம் கோர்க்க வேண்டும்.

*தகவல்கள்:* Washington Post, The Quint

–அபூஹாசின்








## உச்ச நீதிமன்றத்தின் தாழ்ச்சியும் வீழ்ச்சியும் – 5

# பிரதம அமைச்சர் காப்பு நிதியும் (PM - Cares Fund) உச்ச நீதிமன்றமும்

கொரோனா காலத்தில் மார்ச்–23, 2020 ஊரடங்கை அறிவித்தார் மோடி. உடனேயே மார்ச்–27, 2020 பிரதமர் காப்பு நிதி (PM Cares Fund) என்றொன்றை ஏற்படுத்தினார். இதில் மூன்று பிரச்சனைகள் எழுந்தன.

முதலில், பிரதமர் காப்பு நிதி என்றொன்றை ஏற்படுத்தி இருக்க வேண்டுமா? என்பதுதான்.

இரண்டாவதாக, அந்த காப்பு நிதியின் வெளிப்படைத்தன்மை, குவியும் அந்த நிதிக்கு யார், யாரிடம் கணக்குக் காட்டிட வேண்டும்.

மூன்றாவதாக பெரிய வியாபார நிறுவனங்கள், பொது தொண்டுகளுக்காகச் செலவு செய்திடும் பணத்தை பிரதம அமைச்சர் காப்பு நிதிக்கு மட்டுந்தான் தந்திட வேண்டுமா? மாநிலங்களிலிருக்கும் முதல் அமைச்சர் நிவாரண நிதிகளுக்கும் உண்டா? (Chief Ministers, Relief Fund) அல்லது தந்திடலாமா?

### கம்பெனிகள் சட்டம் என்ன சொல்கின்றது?

கம்பெனிகளின் சட்டம் 2013 (Companies Act 2013) பொறுப்பை கம்பெனகளின் மேல் சுமத்துகின்றது. அது 500 கோடி ரூபாய்க்கு மேல் வருவாய் உள்ள கம்பெனிகள், அல்லது 1000 கோடிக்கு மேல் வியாபார பரிவர்த்தனை உள்ள கம்பெனிகள், அல்லது 500 கோடி நிகர வருமானமுள்ள கம்பெனிகள், வருவாயில் 2% இரண்டு சதவிகிதத்தை கட்டாயமாக பொது நலன்களுக்காகச் செலவு செய்திட வேண்டும்.

அந்தப் பொது நலன்கள் எவை? எவை? என்று கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு VII -இன் உட்பிரிவு (i) முதல் (xii) வரை பட்டியலிடுகின்றன.

இதனை கம்பெனிகள் வட்டாரத்தில் (CSR) நிதி எனக் குறிப்பிடுவார்கள். Corporate Social Responsibility Fund. கம்பெனிகளின் சமூக பொறுப்பு நிதி என்பார்கள். இந்த நிதியை கொரோனாவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு செலவு செய்யலாம் என்றொரு சுற்றறிக்கையை மத்திய அரசு 23, மார்ச்சு 2020–இல் வெளியிட்டன. பின்னர் இந்த நிதியை, கம்பெனிகள் பரிவர்த்தனை, பிரதம அமைச்சரின் காப்பு நிதிக்குத் தந்திடலாம் என்றார்கள். அதற்காக ஓர் சிறப்பு சுற்றறிக் கையை மார்ச்சு 28, 2020–இல் கம்பெனிகளுக்கு அனுப்பினார்கள். இந்த இரண்டு சுற்றறிக்கைகளையும் கம்பெனிகள் (கார்ப்பரேட்களின்) விவகார அமைச்சகம் அனுப்பியது. (MCA - Ministry of Corporate Affairs) கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு vii (i) முதல் xi பதினொன்று வரை உள்ள சட்டங்கள் இப்படிக் கூறுகின்றன.

(i) கம்பெனிகள் (கார்ப்பரேட்கள்) தங்கள் சமுதாய பொறுப்பு நிதியை பின் வருவனவற்றிற்குச் செலவு செய்திடலாம்.

*1)* பசியையும், பட்டினியையும் போக்கிட இப்பணத்தைச் செலவிடலாம். சத்துணவுகளை வழங்கிடும் ஊட்டச்சத்து கிடைக்காத மக்களுக்கு அதைக்கொண்டு சேர்த்திட இந்தப் பணத்தை செலவிடலாம்.

*2)* ஆரோக்கியத்தை வலுப்படுத்தும், வகைய றாக்களிலும், நோய்கள் வருமுன் காக்கும் வகை யறாக்களிலும் இந்தப் பணத்தைச் செலவு செய்யலாம்.

*3)* தூய்மைப் பணிகளுக்கும், 'சுவத் பாரத் கோஷ்' என்ற மத்திய அரசின் தெரு துடைக்கும், பணிகளும், நல்ல குடிநீர் மக்களுக்கு கிடைக்கும் பணிகளுக்கும் செலவிடலாம்.

*4)* கம்பெனிகள் சட்டம் பிரிவு (xii) பேரிடர் காலங்களில் நிவாரணங்கள் வழங்கிடவும், அதாவது (கம்பெனிகள் / கார்ப்பரேட்கள் இந்த நிதியை பயன்படுத்தலாம் என்கின்றது.

## மாநில அரசுகளுக்கு இல்லை

ஏப்ரல் *10, 2020* இல் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லிடும் போது, மாநில முதலமைச்சர்களின் நிவாரண நிதி, இந்த கம்பெனிகள் சட்டத்தின் *7*–ஆவது பிரிவில் சேர்க்கப்படவில்லை. ஆகவே முதலமைச்சரின் நிவாரண நிதிக்கு இந்த நிதியிலிருந்து பணம் தந்தால், அது கம்பெனிகள் சமுதாயப் பொறுப்பிற்கு செலவு செய்ததாக ஏற்றுக்கொள்ள முடியாது எனக்கூறிற்று.

ஆனால் நாம் கம்பெனிகள் சட்டம் *2013*–ஐ விரிவாகப்பார்த்தால் மாநிலங்களிலிருக்கும், மாநில நிவாரண நிதிகளுக்கோ, மாநில முதல மைச்சர் நிவாரண நிதிக்கோ கொடுத்தால் அதுவும் கம்பெனிகளின் சமுதாய பொறுப்பு செலவின் கீழ்வரும், என்பது தெளிவு

கொரோனா காலத்தில் இவையெல்லாம் ஆரோக்கிய வளர்ச்சிக்கும், நோய் தடுப்பு செலவிற்கும் செலவு செய்ததாக வரும்.

ஆனால் நமது மத்திய அரசு, மாநில அரசு களுக்குக் கார்ப்பரேட்கள் தங்கள் சமுதாய நல்வாழ்வு (CSR) நிதியைத் தரக்கூடாது எனக் கூறிவிட்டது.

## உச்ச நீதிமன்றம்

மே–*5, 2020* இல் இந்தத் தடைகூடாது எனக் கூறி உச்ச நீதிமன்றத்தின் கதவுகளைத் தட்டி னார்கள், திரினாமுல் காங்கிரஸ், நாடாளுமன்ற உறுப்பினர் மதுமித்ரா. உச்ச நீதிமன்றம் மத்திய அரசுக்கு ஆணையிடுமா? அது – உச்சநீதிமன்றம், இதை நாடாளுமன்றத்தில் விவாதித்துக் கொள் ளுங்கள், எந்தக் கம்பெனியும் இததை எதிர்க்க வில்லை என்று கூறிவிட்டது. இது ஒரு சட்டப் பிரச்சனைதான். இதனை உச்ச நீதிமன்றம் விசாரித்திருக்க வேண்டும். ஆனால் அதை உச்ச நீதிமன்றம் செய்யவில்லை.


இங்கே இன்னொரு வினாவும் எழுந்தது? இது நாடு முழுவதும் விவாதிக்கப்பட்டது. ஏனெனில் ஏற்கெனவே பிரதம அமைச்சரின் தேசிய நிவாரண நிதி என்றொன்று நாட்டில் நடப்பிலிருக்கின்றது. அதில் *2200* கோடி ரூபாய் இருப்புத் தொகையாக இருக்கின்றது. அப்படி இருக்க இன்னொரு நிதி பிரதமரின் பெயரால் ஏன்? எதற்கு? குறிப்பாக இந்த புது நிதி, அதாவது பிரதமரின், காப்பு நிதி தணிக்கைக்கு உள்படுத் தப்படமாட்டாது என்ற பாதுகாப்போடு, ஏன் பாதுகாக்கப்பட வேண்டும்? பின்னர் அது தணிக் கைச் செய்யப்படும். ஆனால் அந்தத் தணிக்கை அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட மாட்டாது எனக் கூறப்பட்டது, மோடி அரசின் சார்பில்

இதனால் ஆத்திரமடைந்தவர்கள் உச்ச நீதி மன்றத்தில் பிரிதோர் மனுவை தாக்கல் செய் தார்கள். ஆனால் ஏப்ரல் *–13, 2020* உச்ச நீதி மன்றம் தள்ளுபடி செய்தது. மனு தவறான எண்ணங்களின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டது என்றது உச்ச நீதிமன்றம்.

சாதாரணமாக இதுபோன்ற நிதிகளை நமது நாட்டின் தலைமை தணிக்கையாளர்கள் தணிக்கை செய்து நமது நாடாளுமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்வார்கள் என உச்ச நீதி மன்றத்திடம் எடுத்துச் சொல்லியபோது அதையும் செவிமடுக்க மறுத்துவிட்டது உச்ச நீதிமன்றம்.

ஆனால் பல உயர் நீதிமன்றங்கள், மிகவும் உன்னதமான தீர்ப்புகளை வழங்கின. மராட்டிய மாநிலத்தின், பம்பாய் உயர்நீதி மன்றத்தின் நாக்பூர் கிளை, மத்திய அரசுக்கு தாக்கீது ஒன்றை அனுப்பியது. அதில் (PM Cares Fund) *(எ)* பிரதம அமைச்சரின் காப்பு நிதிக்கு அரசு தலைமை கணக்குத் தணிக்கையாளரின் தணிக்கை

வேண்டும் எனக் கேட்டுக்கொண்ட மனு ஒன்றுக்கு பதில் தரும்படி கேட்டுக் கொண்டது. அதே மனுவில் மனுதாரர் பிரதம அமைச் சரின் பாதுகாப்பு நிதிக்கு முழு தணிக்கை வேண்டும் என்பதோடு முழுமையாக மக்கள் மன்றத்தில் வைத்திட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார். அதற்கும் சேர்த்தே பதில் சொல்லிட வேண் டும் எனக்கூறி மத்திய அரசுக்கு ஆணை பிறப்பித்து, (மும்பை உயர் நீதிமன்றத்தின் நாக்பூர் கிளை) ஆனால் இதற்கு மத்திய அரசு பதில் தரவில்லை.




முதலமைச்சரின் பாதுகாப்பு நிதி உருவாக்கப்பட்ட நாளிலிருந்து ஓர் அறிவிக்கப்படாத விதியை சில கீழ் நீதிமன்றங்கள் செயலில் கொண்டு வந்திட முயற்சிகளை மேற்கொண்டன. அது பிணைகள் வழங்கிடும் போது ஒரு தொகையை பிரதமர் பாதுகாப்பு நிதியில் செலுத்திட வேண்டும் என்றொரு நிபந்தனையும் விதித்தது.

இத்தகைய ஆணைகளை மத்திய பிரதேச உயர் நீதிமன்றமும், கேரள மாநில உயர் நீதி மன்றமும் ரத்து செய்தன. அதாவது, பிரதமர் காப்பு நிதிக்கு பணம் தருவது வழக்கு பிணை பெறுவதற்கு ஒரு நிபந்தனை ஆக்கிட இயலாது என ஆணைப் பிறப்பித்தன.

இந்த கீழ் நிதிமன்றங்களுக்கு இப்படியொரு ஆணையைப் பிறப்பித்திட ஆணை இட்டது அல்லது அறிவுறுத்தியது யார்?

ஆனால் ஜார்க்கண்ட் உயர் நீதிமன்றமும் பிரதமர் பாதுகாப்பு நிதிக்கு பணம் செலுத்துவதை ஒரு நிபந்தனையாக, (பிணை வழங்குவதற்கு) வைத்திட வேண்டும் எனத் தீர்ப்பு வழங்கியது.

உச்ச நீதிமன்றம் தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்களுக்கு உண்மையான – உயிர் காக்கும் தீர்ப்புகளை வழங்கிட தவறியது. கொரோனா காலத்தில் மட்டுந்தான் நடந்தது என்றில்லை. அண்மைக் காலங்களில் அதன் போக்கு நீதியையும், நீதித்துறையையும் இருட்டறைக்குள் தள்ளிவிட்டன. அது அதிகார வர்க்கத்தின் சட்டங்களையும், செயல்பாடுகளையும், கொள்கைகளையும் அரசியல் அமைப்பு சட்டத்திற்கு உட்பட்டவைதானா? என்பதை சீர் தூக்கிப்பார்த்திட தவறிவிட்டது. இதுபோன்ற மனுக்கள் தன்னிடம் வந்தபோதெல்லாம் அது தன் பொறுப்பை தட்டிக் கழிக்கவே செய்தது.

யாரும் ஊரடங்களை ரத்து செய்யுங்கள் என்று கேட்கவில்லை ; எங்களிடமிருந்து கொரோனாவைக் காரணங்காட்டி பறித்த உரிமையை மீட்டுத் தாருங்கள் எனக் கேட்கவில்லை.

யாரும், உச்ச நீதிமன்ற நிதிபதிகளிடம் நீங்கள் டாக்டர்களாகவும், மருத்துவர்களாகவும் பொருளாதார நிபுணர்களாகவும் மாறுங்கள் எனக் கேட்டிடவில்லை.

உச்ச நீதிமன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்பட்ட மனுக்களெல்லாம், ஏழைகளுக்காக சமர்ப்பிக் கப்பட்டவையே! அவர்கள் தினமும் ஆயிரக்கணக்கில் மடிந்து கொண்டிருக்கிறார்கள். கொரோனாவால் அல்ல. இந்தச்சாவுகள், மாறாக கொரோனாவால் அவர்கள் இழந்த வேலை வாய்ப்புகளால், அவர்களால் உணவுப் பொருட் களை வாங்கிட இயலவில்லை என்பதால் தான். காரணம், ஊரடங்கை அறிவித்த அரசுக்கு ஆங்காங்கே அடைப்பட்டுக் கிடந்த மக்களின்

காய்ந்த வயிற்றுக்கு கஞ்சி வார்த்திடும் திட்டங் களில்லை.

நிச்சயமாக கொரோனா காலம் ஓர் அசாதாரணமான காலந்தான். மறுக்கவில்லை. அதில் அரசு எதை சரியென எண்ணுகின்றதோ அதைச் செய்யலாம். அதற்கான அவகாசம் அதற்கு வேண்டும். ஆனால் ஒட்டுமொத்தமாக பொறுப்பே இல்லாமல் அரசு நடந்திடும்போது அதைத் தட்டிக் கேட்டிடவும், நேர்கொண்ட செயல்களைச் செய்திடச் சொல்லவும் உச்ச நீதிமன்றம் இல்லாமல் போனதுதான் வெந்த புண்ணிலே வேலைப்பார்ச்சியதாகும். அதிர்ச்சி யானதாகும்.

## நெருக்கடி காலத்தில் 1975–77

இந்தக் காலக்கட்டத்தில் இப்படித்தான் உச்ச நீதிமன்றம் அதிகார வர்க்கத்திற்கு அப்படியே அடிபணிந்தது. ஆனால் பல உயர்நீதிமன்றங்கள் நெஞ்சுரத்தோடு மக்களின் அடிப்படை உரிமை களையும், வாழும் உரிமைகளையும் காப்பாற் றின. ஆனாலும் பல உயர் நீதிமன்றங்கள் உச்ச நீதிமன்றத்தையே பின்பற்றின.

கஷ்மீர் பேரழிவின் போதும், மக்களின் குடிஉரிமை திருத்தச் சட்டத்தின்போதும், அண் மையில் நடந்த டெல்லி கலவரத்தின்போதும், உச்சநீதிமன்றம் நடந்துகொண்டது விதம் எதிர் காலத்தில் நமது நீதித்துறை என்னவாகுமோ என்ற பதற்றத்தை ஏற்படுத்துகின்றது. இப்படி சொல்லிவிடுவதால் முந்தைய நாட்களில் உச்ச நீதிமன்றம் சரியாக இருந்தது என்றில்லை. மாறாக அவ்வப்போது தவறியுமிருக்கின்றது. என்றாலும் இன்றைய நாட்களைப்போல் அது இருந்ததில்லை.

இதற்கு முன்னாலும், போபால் விஷவாயு கசிவுகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உச்ச நீதிமன்றம் நீதி வழங்கிடவில்லை. அதேபோல், நர்மதா நதிக்கரை மக்களை அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்த இடங்களிலிருந்து வெளியேற்றிய விவகாரத்திலும் நீதித்துறை தன் கடமையைச் செய்யவில்லை. 1990–களில் உழைப்பாளர்களின் பிரச்சனை பெரிய அளவில் உருவமெடுத்தபோது உச்ச நீதிமன்றம் அந்த உழைப்பாளர்களின் அவலங்களுக்கு தீர்வு தரவில்லை. அதேபோல் தடா, பொடா, கஷ்மீரில் மக்களைக் கொல்லும் இராணுவத்தைப் பாதுகாக்கும் AFSA (எ) அப்சா. இவையெல்லாம் எந்த அளவுக்கு நமது அரசியல் நிர்ணயச் சட்டத்திற்கு உட்பட்டது என்பதை சீர்தூக்கிப் பார்த்திடுவதும் உச்ச நீதிமன்றத்தின் கடமை. இதிலும் நீதித்துறை தன் கடமையைச் செய்யவில்லை.

அதேபோல் அயோத்தியா வழக்கில் (பாபரி மஸ்ஜித் வழக்கில்) வழங்கிய இந்தத் தீர்ப்பு இவற்றிற்கெல்லாம் நமது உச்ச நீதிமன்றம் மிகப் பெரிய கேள்விகளுக்குள்ளாகி உள்ளது.

எது எப்படி இருந்தாலும் கோவிட்–19 என்ற கொரோனா காலக்கட்டம் உச்ச நீதிமன்றத்தின் இருண்ட காலக்கட்டங்களுள் ஒன்று. இந்தக் காலக்கட்டத்தில் அது தன் பொறுப்புகளை நேரடியாக தட்டிக் கழித்தது. அதனால் கோடிக் கணக்கான ஏழை மக்களும், அபலைகளும் நொந்து, நொந்து செத்தார்கள்.

இவையெல்லாம் இனி வரும் காலங்களில் வரலாற்றில் நின்று பேசும். உச்ச நீதிமன்றம் அடக்கு முறைகளால் தனது பழிகளைத் துடைத்திட இயலாது.


## மூத்த வழக்கறிஞர் மிகிர்தேசாய்


முமபை நீதிமன்றம்

இவர் PUCL என்ற மனித உரிமை அமைப்பின் தேசிய துணைத் தலைவர். கோவிட்–19 காலத்தில் ஏழைகளுக்காகப் பலமுறை நீதிமன் றத்தை நாடியவர். வழக்குகளை நடத்தியவர். இப்போது UAPA, NIA ஆகியவற்றிற்கும் எதிராக வும் போராடிக் கொண்டிருக்கின்றார்.

அவர் நடத்தும் விவாதங்களில் நீதி அமைதிக் கான மக்கள் இயக்கம் பங்கெடுத்து வருகின்றது.

தமிழ் வடிவம் – MGM






# வெளியான வாக்கு இயந்திரம் மோசடி... மாட்டிக்கொண்ட தேர்தல் ஆணையம்...

நாம் கடந்த காலங்களில் இருந்து சொல்லிக் கொண்டிருப்பது என்னவென்றால் இந்தியாவில் நடப்பது போலியான ஜனநாயகம் இதில் பெரும்பான்மை பெற்ற அரசு வாக்கு இயந்திரம் மோசடியில் ஈடுபட்டதற்கான பல தெளிவான சந்தேகங்கள் இருக்கின்றன. அதனை மேலும் வலுப்படுத்தும் வகையில் சில தினங் களுக்கு முன்பு கண்ணன் கோபிநாத் அவர்களின் பேட்டி தேசிய அளவில் மீண்டும் இது பேசு பொருள் ஆனது.

## யார் இந்த கண்ணன் கோபிநாத்

இவர் கேரளாவை சேர்ந்தவர் மேலும் தனது ஐஏஎஸ் பதவியை உதறித் தள்ளியவர் மேலும் தொடர்ந்து பாசிச அரசை எதிர்த்து போராடும் ஒரு போராளி. இந்தியாவிலேயே முதல் மாண வராகத் தேர்ச்சி பெற்ற காஷ்மீர் இளைஞர் பைசல் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டது பற்றி எவரும் பேசாததை கண்டு இந்தியாவில் சுதந்திரம் பறிக்கப்பட்டு விட்டது என்று வெளிப்படையாக அறிவித்தார். தொடர்ச்சியாகவே அவரது பதவி யையும் ராஜினாமா செய்தார்.

Thewire.in என்ற இணையதளத்தில் அவரது பேட்டி வெளியாகி உள்ளது அதில் தேர்தல் ஆணையம் வாக்கு இயந்திரம் பற்றி கூறிய ஒவ்வொன்றையும் கேள்வி எழுப்பியுள்ளார்.

1) ஆரம்ப நாட்களில் இருந்தே தேர்தல் ஆணையம் வாக்கு இயந்திரத்தை எதனோடும் இணைக்க முடியாது அது தன்னிச்சையாக மட்டுமே இயங்கக் கூடியது என்று கூறிவந்தது. பின்னாளில் விவிபாட் கருவி சேர்க்கப்பட்டது. இதனை அவர் கேள்வியாக எழுப்பினார். வாக் இயந்திரங்களை எந்த கருவியை உடனும் இணைக்க முடியாது என்றால் எப்படி விவிபாட் கருவி பொருத்தப்பட்டது இதற்கு தேர்தல் ஆணையம் என்ன பதில் சொல்லப் போகிறது.

2) விவிபாட் கருவி இணைக்கப்பட்டால் தேர்தல் ஆணையத்தின் மீது மக்கள் மேலும் நம்பிக்கை பெறுவர் என்று எண்ணிய தேர்தல் ஆணையம் விவிபாட் கருவி எப்படி இணைக் கப்பட்டது என்று கேட்ட கேள்விக்கு இன்னும் பதில் கூற இயலவில்லை. பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் என்ற இந்திய நிறுவனம் விவிபாட் கருவியை எப்படி வாக்கு இயந்திரத்துடன் இணைக்க முடியும் என்று தனது இணைய தளத்தில் வெளியிட்டுள்ளது.

தேர்தல் ஆணையம் இதுநாள்வரை கூறி வந்த தேர்தல் நடைமுறையில் சந்தேகங்கள் எழுந் துள்ளன. நாம் வாக்களிக்கும் போது இரண்டு கருவிகளை பார்க்கலாம். பேலட் யூனிட் (ballet unit) மற்றும் கண்ட்ரோல் யூனிட் (control unit). பேலட் யூனிட்டில் எந்த செயல்பாடும் இருக் காது அது வாக்காளர் வேட்பாளரை தேர்வு செய் வதற்கு பொத்தானை அழுத்தியவுடன் அந்த செயலை கண்ட்ரோல் வீட்டிற்கு அனுப்புவது மட்டும்தன் அதன் செயல்பாடு என்று தேர்தல் ஆணையம் இதுநாள்வரை கூறி வந்தது. இப்போது வாக்காளர் வாக்கு அழுத்தியவுடன் யாருக்கு வாக்களித்தார் அதன் சின்னம் என்ன என்று ஒப்புகை சீட்டு கருவியில் வருவதைப் பார்க்கும்போது பேலட் யூனிட்டில் வாக்கு

அளிக்கும் இடத்தில் ப்ரோக்ராம் செய்யமுடியும் என்று தெளிவாக தெரிகிறது.

3) வாக்கு இயந்திரங்களில் ஏதாவது வெளி கருவிகளை பொருத்தினால் அது வேலை செய்யாது அந்த அளவிற்கு இயந்திரங்கள் பாதுகாப்பானது என்று கூறிய தேர்தல் ஆணையம் எவ்வாறு விவிபாட் கருவியை இணைத்தது. மேலும் விவிபாட் கருவிகள் தயார் செய்வதற்கு சில குறிப்புகளை பெல் நிறுவனம் தங்கள் இணையதளத்தில் பதிவு செய்துள்ளனர்.

விவிபாட் கருவியை தயார் செய்வதற்கு கணினியுடன் இணைத்து வேட்பாளரின் பெயர் சின்னம் போன்ற விவரங்களை பதிவேற்றம் செய்ய வேண்டும் என்பதே அதன் சாராம்சம்.

இப்போது நமக்கு தெளிவாக தெரிவது என்ன வென்றால் வாக்கு எந்திரங்கள் எதனோடும் இணைக்கலாம் நமக்கு வேண்டியவாறு அதில் ப்ரோக்ராம் செய்து கொள்ளலாம் என்பதே.

இது போன்ற தெளிவான சந்தேகத்திற்கு உரிய கேள்விகளை எழுப்பியுள்ளார் கண்ணன் கோபிநாத் அவர்கள்.

இதுநாள் வரை தேர்தல் ஆணையம் 2019 தேர்தல் முடிவுகளுக்கு இன்னும் பதில் கூற வில்லை. எண்ணப்பட்ட வாக்கு இருக்கும் வித்தி யாசங்கள் மட்டும் சுமார் 58 புள்ளி 3 லட்சம் வாக்குகள் அதிகமாக பதிவாகியிருந்தது வாக்கு இயந்திரங்களில்.

அதில் கடைசி கட்டமாக நடந்த 59 தொகுதி களுக்கு மட்டும் ஏற்பட்ட வித்தியாசம் சுமார் 35 லட்சம் மேல்.

நாம் கூறுவது இந்த அதிகப்படியான வாக்குகள் மட்டும் ஒரு கட்சிக்கு சாதகமாக அமைவது இல்லை மாறாக சுயேச்சைகள் மற்றும் இதர கட்சிகளின் வாக்குகள் கூட ஒரு கட்சிக்கு சாதகமாக மாற்றக்கூடிய செயல்பாடு வாக்கு இயந்திரங்களில் உள்ளன.

உதாரணமாக தமிழ்நாட்டில் 23 லட்சம் வாக்குகள் பெற்ற தினகரனின் கட்சி 1088 வாக்குச்சாவடிகளில் ஒரு வாக்கு கூட பதிவாக வில்லை. மக்கள் வாக்களிக்கவில்லை என்ற ாலும்கூட வாக்குச்சாவடிக்கு பொறுப்பேற்றுள்ள 15 நபர்களில் ஒருவர் கூடவா என் கட்சிக்கு வாக்களிக்க வில்லை என்று தினகரன் கேட்டது நியாயமான கேள்வியே. ஒரு சுயச்சை 0 வாக்குகள் பெற்று தான் அளித்த வாக்கு எங்கே சென்றது என்று கேட்ட கொடுமையும் நடந்தது இந்த நாட்டில்தான்.

முன்னாள் தேர்தல் ஆணையர் ஓ பி ராவர்ட் THEQUINT ஊடகத்திற்கு அளித்த பேட்டி யில் வாக்கு இயந்திரத்தின் செயல்பாடு மிகுந்த ஆபத்தானதாக உள்ளது தான் பொறுப்பேற்று இரந்த காலங்களில் இது போன்று நடந்ததாக தெரியவில்லை என்று கூறினார்.

தேர்தல் ஆணையம் வழக்கம் போல் எந்த ஒரு கேள்விகளுக்கும் பதில் சொல்லாமல் வாக்கு இயந்திரம் பாதுகாப்பானது என்று மட்டுமே திரும்பத் திரும்ப கூறிக் கொள்வதால் அதன் சந்தேகம் மேலும் அதிகரித்துள்ளது. சில மாதங் களுக்கு முன்பு நாம் வைகறை வெளிச்சத்தில் தேர்தல் ஆணையம் தனியார் ஊழியர்களை வேலைக்கு அமர்த்தியது பற்றி வெளியிட்டி ருந்தோம். M/s T&M consulting services private limited என்ற தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக் கப்பட்ட ஒரு தனியார் நிறுவனத்திடம் வாக்கு இயந்திரங்கள் ப்ரோக்ராம் செய்வது போன்ற வேலைகளை அளித்திருந்தனர் என்பதை விவரித்து இருந்தோம்.

தேர்தல் ஆணையம் தனியார் ஊழியர்களை ஈடுபடுத்தி அதே இல்லை என்று கூறுவது பொய் என்று நிறுவனமானது.

காஷ்மீரில் தேர்தல் நடத்தாமல் இருப்பதும் மற்ற மாநிலங்களில் தேர்தல் நடத்தி வாக்கு எந்திரங்கள் மூலம் வெற்றி பெறுவதும் அல்லது எம்.எல்.ஏக்கள் விலைக்கு வாங்கி ஆட்சியில் அமர்வதும் போன்ற செய்திகள் சர்வ சாதாரண மாகிவிட்டன.

இந்திய ஜனநாயகம் காக்க படுவதற்காக 70க்கும் மேற்பட்ட ஐஏஎஸ் ஐபிஎஸ் அதிகாரிகள் தேர்தல் ஆணையத்திற்கு பல கேள்விகளை எழுப்பியும் உச்சநீதிமன்றத்தில் வழக்குகளின் தொடுத்தும் போராடிக் கொண்டிருக்கின்றனர். பொது ஊடகங்களில் இந்த செய்தி மறைக்கப் பட்டு கொண்டிருந்தாலும் இன்னும் சில மாதங் களில் இது பெரும் பூதாகரமாக தான் போகிறது.

– அபுதாஹிர்

# வாக்கு இயந்திரங்களுக்கு எதிராக புதிய இயக்கம்

இந்திய ஜனநாயகம் மிகப்பெரிய ஆபத்தில் உள்ளது என்பதை அனைத்து சமூக செயல் பாட்டாளர்கள் நன்றாகவே உணர்ந்துவிட்டார் கள். ஆனால் இதனை எப்படி மக்கள் மன்றத்தில் எடுத்து வைப்பது மேலும் பாமர மக்களை புரியும் வண்ணம் விழிப்புணர்வு ஏற்படுத்துவது போன்ற சில இடர்பாடுகள் ஆரம்பத்தில் இருந்தன. வரலாறு எப்போதுமே அநியாயங்களை அதிக நாட்கள் மறைத்து வைத்து இருக்காது.

பல்வேறு சமூக செயல்பாட்டாளர்கள் இணைந்து பல மக்கள் இயக்கங்கள் நாளுக்கு நாள் உருவாகிக் கொண்டிருக்கிறது அந்த வகையில் தமிழகத்தைச் சேர்ந்த பலர் இணைந்து குறிப்பாக முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி தெய்வசகாயம் மற்றும் ஜெகத் கஸ்பர் போன்ற வர்கள் சேர்ந்து DEFEND DEMOCRACY என்ற இயக்கத்தை முன்னெடுத்து உள்ளார்கள்

கடந்த வாரம் முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி கண்ணன் கோபிநாத் இணையவழி கூட்டத்தில் கலந்துகொண்டு ஏவிஎம்மில் உள்ள குறை பாடுகளை எளிய மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் விவரித்திருந்தார்

நிகழ்ச்சி தொடங்கும் போது தெய்வ சகாயம் தேர்தல் ஜனநாயகம் பற்றி பேசினார். அதில் 'வாக்களிப்பது என்பது ஏதோ சாதாரண விஷயம் போல் அல்ல மாறாக மக்கள் தங்களின் முடிவு எடுக்கும் அதிகாரத்தை ஐந்து வருடத்திற்கு ஒருவரிடம் ஒப்படைத்து விடுகிறார்கள். இந்த வாக்களிக்கும் முறை எப்படி இருக்க வேண்டும் என்று அடிப்படை சட்டங் கள் மூன்று உள்ளன

*1)* வாக்காளர் யாருக்கு வாக்களித்தார் என்பது உறுதி யாக தெரிய வேண்டும். வேட் பாளரின் பெயர் மற்றும் சின்னம் இருப்பதை பார்த்து இதனை வாக்காளர் தெரிந்து கொள்ளலாம்.

*2)* வாக்காளர் அளித்த வாக்கு வேட்பா ளருக்கு சென்று விட்டது என்பதை உறுதியாக தெரிய வேண்டும்.

*3)* வாக்கு எண்ணும் போது அதிகாரிகள் அதை மேலும் உறுதிபடுத்த வேண்டும்.

நமது வாக்குச்சீட்டு முறையில் வாக்காளர் தன் யாருக்கு வாக்களித்தோம் என்றும் தனது வாக்கினை ஓட்டுப் பெட்டிகள் சமர்ப்பித்து தனது வேட்பாளருக்கு சென்று விட்டதாகவும் அவர் அறிந்துகொள்கிறார. பின்னர் எண்ணிக் கையின் போது தேர்தல் அதிகாரி வேட்பாளர் வாரியாக இருக்கும்போது அதை மீண்டும் உறுதி செய்து விடுகிறார்.

இதுபோன்ற எந்த அடிப்படை சட்டங்களும் வாக்கு இயந்திரத்தில் அளிக்கும் போது நாம் பெற முடியாது.

EVMP வாக்காளர் ஒரு பொத்தானை அழுத்துகிறார் பின்னர் அந்த வேட்பாளருக்கு தான் அந்த வாக்கு சென்றது என்பதை அவரால் அறிந்துகொள்ள முடியாது

ஜெர்மனியில் வாக்கு இயந்திரம் உபயோகப் படுத்தலாமா வேண்டாமா என்ற வழக்கு உச்ச நீதிமன்றத்திற்கு வந்தபோது பாமர மக்கள் தான்






அளித்த வாக்குகளை புரிந்து கொள்வதற்கு தொழில்நுட்பம் தடையாக உள்ளது என்று கூறி வாக்குச்சீட்டு முறைக்கு திரும்பியது

பேசிய முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி கண்ணன் கோபிநாத் அவர்கள்

தேர்தல் ஆணையம் மூன்று வகையான பாதுகாப்புகளை வாக்கு எந்திரங்களுக்கு அளிப்பதாக கூறுகின்றது

1) தொழில்நுட்பப் பாதுகாப்பு (TECHNOLOGY SECURITY)

2) செயல்முறை பாதுகாப்பு (PROCESS SECURITY)

3) பொது பாதுகாப்பு (PHYSICAL SECURITY)

## தொழில்நுட்பப் பாதுகாப்பு

வாக்கு இயந்திரங்கள் எந்த கருவியுடன் இணைக்க முடியாது மேலும் இயந்திரங்களில் வேட்பாளர் பெயர் சின்னம் போன்ற எந்த தகவல்களும் இருக்காது. 1234 போன்ற வரிசை மட்டுமே இருக்கும் அதில் அளிக்கும் வாக்குகள் ஓரிடத்தில் சேமிக்கப்பட்டிருக்கும். இது ஒரு சாதாரண கால்குலேட்டர் போன்றது இதனை எந்த கருவியுடன், இணையம் மற்றும் பிற தொடர்பு கருவிகளுடன் இணைக்க முடியாது என்று கூறியிருந்தது

பின்னர் விவிபாட் (VVPAT) இன்று ஒப்புகைச் சீட்டு கருவி பொருத்திய பிறகு வாக்காளர் வாக்களித்த பின் வேட்பாளரின் பெயர் சின்னம் தேதி நேரம் போன்றவை பார்க்கும்போது வாக்கு இயந்திரங்களில் வாக்காளர் பெயர் சின்னம் போன்றவற்றை சேமிக்க முடியும் என்பது புலனாகிறது.

வாக்காளரின் பெயர் சின்னம் போன்ற வற்றை பதிவேற்றம் செய்வதற்கு கணினி மற்றும் புறக்கணி கருவிகளைப் பயன்படுத்துகின்றனர். இந்தச் செயல்பாடு ஒவ்வொரு தொகுதிக்கும் வாக்கு இயந்திரங்கள் பிரித்து அனுப்பப்பட்ட பிறகு நடைபெறுகிறது இதில் பல தனியார் ஊழியர்களும் இடம் பெறுகிறார்கள்.

இந்த ஒரு சூழ்நிலையில் ஒரு மின்னணு பொறியாளர் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு

# வாக்குப்பதிவு இயந்திரம்

## ஜகத் கஸ்பர் அவர்கள், கூறுகின்றார்கள் :

2019-ஆம் தேர்தலை பாரதீய ஜனதா கட்சி திருடிக்கொண்டது என்கின்றார். விவிபாட் - என்ற வாக்குகள் சரியான வேட்பாளர்ளுக்குத்தான் சென்றதா? என்பதை சரிபார்க்கும் இயந்திரம் வழியாகத்தான் இந்தத் திருட்டு நடந்தது என்கின்றார்.

அடுத்து வாக்குகளைப் பதிவு செய்யும் 'CHIP' என்ற இயந்திரப்பதிவேட்டை ஓராண்டுகள் வரை, வைத்திருக்க வேண்டும் என சட்டமிருக்கவே, அந்த 'CHIP' ஐ மூன்றே மாதத்திற்குள் எதிர்த்து விட்டார்கள். காரணம் தங்கள் தேர்தல் தகிடு தத்தங்கள் வெளியே தெரிந்துவிடும் என்பதால் என்கின்றார் ஜெய் பாஸ்கர் அவர்கள்.

## தலைமை தேர்தல் அதிகாரி

"தலைமைத் தேர்தல் அதிகாரி" போன்ற பதவிகளில் மூன்று வருடங்களுக்கு மேல் இருக்கக் கூடாது என்பது சட்டம்.

மூன்று வருடங்கள் முடிந்தவுடன், அவரை மாற்றிட வேண்டும். ஆனால், இப்போதைய தலைமை அதிகாரியை ஆறறை ஆண்டுகள் பதவி வைத்திருக்கின்றார். காரணம், அவர் இவர்களுடைய ஆள். அவர் இந்துத்துவ அமைப்பைச் சார்ந்தவர் என்றும், அடித்துக் கூறுகின்றார். 'தமிழ்வழி' இணைய தளம்.

உலகில் முன்னேறிய நாடுகளெல்லாம், மின்னணு வாக்கு இயந்திரம் முறையைப் பின் பற்றாமல், வாக்குச் சீட்டுகளையே பயன்படுத்தும் போது, இந்தியாவில் மட்டும் எந்த நிலையிலும், வாக்கு இயந்திர முறையை மாற்றிட மாட்டோம் எனக் கூறுவதற்கு இதுவே காரணம்.

உல நாடுகளில், மின்னணு வாக்கு இயந்தி ரத்தைப் பயன்படுத்தாதற்குக் காரணம், அவற்றில் வெற்றிகளைத் தோல்விகளாகவும், தோல்விகளை வெற்றிகளாகவும் மாற்றலாம் என்பதால் தான்.

## "ஐய்யநாதன்"

ஐய்யாநாதன் அவர்கள் அண்மையில் வாக்கு இயந்திரங்கள் பற்றிய நூல் ஒன்றை எழுதி வெளி யிட்டார்கள். அவர்கள் எல்லா விவாதங்களிலும், 2019 நாடாளுமன்ற தேர்தலில் 370 இடங்களில் தகிடுத் தத்தங்களை, வாக்கு இயந்திரத்தில் செய்திருக்கின்றார்கள் என்கின்றார்கள்.

ஜெகத் கஸ்பர் அவர்களிடம் ஒரு கேள்வி :

பாரதீய ஜனதா கட்சியும் சில இடங்களில் தோற்றிருக்கின்றதோ? அதற்கு அவர் சொன்ன பதில் அனைவரும் கூர்ந்து கவனிக்கத் தக்கது.

"அவர்கள் இதை ஒரு யுக்தியாகவே பயன்படுத்துகின்றார்கள். சில இடங்களில் தோற்றால்தான், அதைச் சொல்லி வாக்கு இயந்திர மோசடியை மறுக்கலாம் என்பதும் அவர்களுக்குத் தெரியும்.

இன்னொரு உக்தியையும் கையாளுகின்றார்கள். அது, அவர்களுக்கு அறவே ஆதரவு இல்லாத இடங்களில் ஆதரவு அலைமோதுவதுபோல் ஓர் பிரம்மையைக் கட்டமைத்து. இதில் மீடியாக்கள் (எ) ஊடகங்கள் அவர்களுக்கு மிகையாகவே உதவி செய்கின்றன.

இந்த பிரம்மையை ஏற்படுத்திய பின்பு அவர்கள் தாராளமாக வாக்கு இயந்திரத்தோடு விளையாடுகின்றார்கள். அதன்பிறகு பாரதீய ஜனதா கட்சியின் வெற்றியும் – வட்டாரக் கட்சிகளின் தோல்வியும் யதார்த்தங்களாக மாறிவிடுகின்றன.

எடுத்துக்காட்டாக, மேற்கு வங்காளத்தை எடுத்துக் கொள்ளுங்கள். திரிணாமுல் காங்கிரஸ் – இலிருந்து பல சட்ட மன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கிவிட்டது. கூட்டங்களை – விலை கொடுத்து வாங்கி கூட்டிக் காட்டியாகிவிட்டது. இனி தாரளமாக வாக்கு இயந்திரங்களை மாற்றிடலாம். போனால் போகின்றது என்று திரிணாமுல் காங்கிரஸுக்கும் சில இடங்களை விட்டுக் கொடுக்கலாம். இந்த இடங்களைக் காட்டி, அதாவது திரிணாமுல் காங்கிரஸ் வெற்றிபெற்ற இடங்களைக் காட்டி வாக்கு இயந்திர மோசடியை நியாயப்படுத்தலாம்.

(இப்போது, புதுச்சேரியிலும், அப்படி ஒரு மாயை ஏற்படுத்தியாகிவிட்டது. இன்னும் சில விளையாட்டுகள் பாக்கி. தமிழகத்தில் அதற்கான பூர்வாங்க வேலைகள் தொடங்கிவிட்டன.)

## பீகார் தேர்தலும் CISF-ம்

CISF என்பது CENTRAL INDUSTRIAL SECURITY FORCE மத்திய ஆலைகள் பாதுகாப்புப்படை என்று பெயர். இதனை உருவாக்கியவர் அத்வானி. அவர்கள் உள்துறை அமைச்சராக இருந்தபோதுதான் இதனை உருவாக்கினார். இதில் சங்கப்பரிவார தீவிரவாதிகளைத்தான் தேர்ந்தெடுத்தார். இவர்கள்தாம் பீகாரில் பல வாக்குச் சாவடிகளில், புகுந்து அவற்றைக் கைப்பற்றி வாக்குகளை பாரதீய ஜனதா கட்சிக்குப் போட்டார்கள். இதில் 20 தொகுதிகள் 90% சதவீதம் வாக்குகள் பாரதீய ஜனதா கட்சிக்குக் கிடைத்தது. இவை "RJD' என்ற லல்லு பிரசாத் கட்சிக்கும் கிடைக்க வேண்டியது. – ஜெகத் கஸ்பார்.

பிறகு பதிவாகும் வாக்குகள் இத்தனை சதவீதம் இந்த வேட்பாளருக்கு மாறவேண்டும் என்று ப்ரோக்ராம் செய்து இருந்தால் என்ன செய்வது

பீகார் தேர்தலில் கடைசி கட்டமாக நடந்த தொகுதிகளில் பெரும்பான்மை தொகுதிகளை பாஜக வென்றது அவையனைத்தும் முஸ்லிம்கள் பெரும்பான்மை வகிக்கும் தொகுதிகள்.

## செயல் முறை பாதுகாப்பு

வாக்கு இயந்திரங்கள் அனைத்தும் பாதுகாப்பான முறையில் கையாள்வதாக கூறிய தேர்தல் ஆணையம் தனியார் ஊழியர்கள் ஏன் அமர்த்தப்பட்டார்கள் போன்ற கேள்விகள் எழுந்தபோது மௌனத்தையே பதிலாக தந்தது.


வாக்கு இயந்திரம் ஒழுங்காக செயல்படுகிறதா என்பதை அறிய அதனை ஆயிரம் வாக்குகள் பதிவு செய்து பரிசோதிப்பார்கள். பிறகு எந்த வாக்குப்பெட்டிகள் எந்த பகுதிக்கு செல்வது என்பதை அதன் பிறகுதான் முடிவு செய்வார்கள். இதனால் மோசடி செய்ய முடியாது என்று தேர்தல் ஆணையம் கூறி வந்தது.

ஆனால் இந்த பரிசோதனைகள் முடிந்த பின்புதான் ஒப்புகை சீட்டு கருவியை இணைத்து பெயர் வேட்பாளர்கள் பதிவேற்றம் செய்வது போன்ற வேலை நடைபெறுகிறது. பரிசோதனைக்குப் பிறகு நடக்கும் வேளையில் தவறு நடந்திருந்தால் அதனை கண்டறிவது கடினமாக உள்ளது.

## பொது பாதுகாப்பு

வெளித்தோற்றத்தில் பல காவலர்கள் பாதுகாப்புடன் வாக்குப்பெட்டி வைக்கப்பட்டிருந்தாலும் விவிபாட் கருவி இனணக்கும்போதே தங்களுக்கு வேண்டிய வேட்பாளருக்கு விரும்பும் வகையில் ப்ரோக்ராம் செய்து கொள்ள முடியும் என்ற ஐயம் இருப்பதால் பொதுப் பாதுகாப்பு தேவையற்ற ஆகிவிடுகிறத

இங்கு வாக்கு அளிக்கும் முறையே பேலட் யூனிட் (BALLOTUNIT) உள்ள பொத்தானை அழுத்தியவுடன் அதன் விவரம் விவிபாட் கருவிக்கு செல்கிறது. விவிபாட் கருவி வேட்பாளரின் பெயர் மற்றும் சின்னம் பிரின்ட் செய்தவுடன் 7 நொடிகள் கழித்து கண்ட்ரோல் யூனிட்டுக்கு தகவல் அனுப்புகிறது அங்கே வாக்கு



எண்ணிக்கை விடுகிறது.

விவிபாட் கருவியை கொண்டு யாருக்கு வாக்கு அளிக்க வேண்டும் என்ற ப்ரோக்ராமை பதிவேற்றம் செய்திருந்தால் விரும்பிய வேட்பாளரை வெற்றி பெறச் செய்து விடலாம் என்பதே பொது பாதுகாப்பு பற்றி பேச தேவையற்ற ஆகிவிடுகிறது.

## 2019 பொதுத் தேர்தல்

அனைத்து எதிர்க்கட்சிகளும் சேர்ந்து 100% ஒப்புகை சீட்டு என்ன பட வேண்டும் என்ற கோரிக்கையை தேர்தல் ஆணையத்திடம் வைத்தது. தேர்தல் ஆணையம் மறுக்கவே பின்பு உச்ச நீதிமன்றத்திற்கு சென்றனர் உச்ச நீதிமன்றமோ 5 ஒப்புகைச்சீட்டு கருவிகள் ஒரு தொகுதிக்கு எண்ண படவேண்டும் என்று கூறியத. இது 2.5 சதவீதம் தான் உறுதிசெய்யும். ஒப்புகைச் சீட்டு என்ன முடியாது என்று தேர்தல் ஆணையம் கூறுவதற்கு சொன்ன காரணம் நகைச்சுவையாகவே உள்ளது. அதில் அவர்கள் தேர்தல் முடிவுகள் அறிவிக்க ஆறு நாட்கள் ஆகும் என்று கூறியிருந்தனர் அதாவது பல மாதங்கள் தேர்தல் நடத்தியது அவர்களுக்கு ஒன்றும் தோன்றவில்லை ஆனால் முடிவை அறிவிப்பதற்கு ஆறு நாட்கள் அதிகம் என்று கூறுகின்றனர்

## சுதீப் ஜெயின்

பின்னர் பேசிய ஜெகத்கஸ்பர் மேலும் ஒரு தகவலைக் கூறினார். மூன்று ஆண்டுகளுக்கு மேல் தேர்தல் ஆணையர்கள் பணியில் இருக்கக் கூடாது என்ற சட்டம் இருக்கும்போது சுதீப் ஜெயின் என்பவர் ஆறு வருடங்களுக்கு மேலாக பணிபுரிகிறார். இவர்தான் வாக்கு இயந்திரங்களுக்கு பொறுப்பேற்று இருப்பவர். இவர் தீவிர இந்துத்வாதியாக இருப்பாத தகவல் கிடைக்கின்றன என்றார்.

ஜனவரி மாதம் தமிழ் இந்துவில் இவரது பணி காலம் மேலும் ஒரு வருடம் நீடிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது என்று கூறியிருந்தது. இது போன்ற பெரும் பதவிகளை அமர்த்துவது மற்றும் நீட்டிப்பது போன்ற முடிவெடுக்கும் அமைச்சரவையை தலைமையேற்று நடப்பதே பிரதமர் தான் என்பதுதான் சந்தேகத்தை மேலும் வலுப்படுத்துகிறது.

இதுபோன்ற மக்கள் இயக்கங்கள் நடத்தும் கூட்டங்கள் பற்றி மக்களிடம் எடுத்துச் சொல்வதும் நமது கடமையாகவே கருதுகிறோம்.

– முகம்மது அபுதாஹிர்





# அஜீரணத்தைத் துரத்துவோம்

டாக்டர் எஸ். அபிராமி பிரேம்நாத்
இயற்கை மருத்துவம் மற்றும் யோகா நிபுணர்

**பொதுவாக நாம் உண்ணும் உணவு இயல்பாக செரிமானம் ஆவதற்கு இரைப்பையில் சுரக்கும் அமிலம்தான் உதவியாக உள்ளது. ஆனால் இந்த அமிலம் அளவுக்கு அதிகமாக சுரக்கும்போது, நமக்கு அஜீரணப் பிரச்னைகள் உண்டாகும். நம் வீட்டிலேயே கிடைக்கும் பொருட்கள் மூலம் எளிதாக இதிலிருந்து நிவாரணம் பெற முடியும்.**

### வாழைப்பழம்

வாழைப்பழத்தில் அதிகளவு பொட்டாசியம் இருப்பதால் இது அமில – கார சமநிலையை உருவாக்கும். நார்ச்சத்து அதிகம் இருப்பதால் அமிலச் சுரப்பின் பாதிப்பைக் குறைக்க உதவும்.

பொதுவாக பழங்களை வெறும் வயிற்றில் உண்பதே நல்ல பழக்கமாகும். உணவு சாப்பிட்ட உடனே வாழைப்பழம் சாப்பிடக்கூடாது. அது நம் செரிமானத்திற்கு உதாவது.

### சோம்பு

ஒரு டம்ளர் தண்ணீரில் ஒரு டீ ஸ்பூன் சோம்பு போட்டு கொதிக்க வைக்கவும், அதை இரவு முழுவதும் நன்கு ஊறவிடவும். மறுநாள் காலையில் அந்த நீரைக் குடிக்கவும். இது அசிடிட்டியிலிருந்து நிவாரணம் தரும். வயிற்றுக்கும் நல்ல குளிர்ச்சியைத் தரும்.

### கிராம்பு

இது ஓர் இயற்கையான இரைபைக் குடல் வலி நீக்கியாகும். அதிகளவு உமிழ்நீர் சுரப்பதை கிராம்பு தூண்டுவதால், செரிமானத்திற்கு உதவுகிறது. ஆகவே அசிடிட்டியால் அவதியுறும்போது ஒரு கிராம்பைக் கடித்தால் போதும், அசிடிட்டியைக் கட்டுப்படுத்தி நிவாரணம் அளிக்கும்.

### முட்டைக்கோஸ் சாறு

தினமும் முட்டைக்கோஸை அரைத்து சாறு எடுத்து குடித்து வந்தால் அசிடிட்டியில் இருந்து நிவாரணம் கிடைக்கும். உடல் பருமனைக் குறைக்கவும் இது உதவுகிறது.

### இளநீர்

மருத்துவ குணம் கொண்ட இளநீரை தினமும் காலையில் குடித்தால் அசிடிட்டி குறையும். ஆனால், அசிடிட்டி அதிகமாக உள்ளவர்கள் வெறும் வயிற்றில் குடிப்பதை தவிர்க்கவும்.

### இஞ்சி

மருத்துவ குணம் அதிகம் நிறைந்த ஒரு துண்டு இஞ்சியை வாயில் போட்டுக் கொண்டால், கொஞ்சம் கொஞ்சமாக அதன் சாறு உள்ளே இறங்கும். இரைப்பையில் சுரக்கும் அதிகப்படியான அமிலச் சுரப்பானது தடைபடும். வயிற்று எரிச்சல் நீங்கி, செரிமானம் சீராகும்.

### தண்ணீர்

உடலுக்கு அவசியமான தண்ணீரை எப்போது எப்படிக் குடிப்பது என்றும் நியதிகள் உண்டு. காலையில் எழுந்தவுடன் 2 டம்ளர் தண்ணீர் குடிக்க வேண்டும். சாப்பிடுவதற்கு அரை மணிநேரம் முன்பாக நீர் அருந்த வேண்டும். சாப்பிட்ட பின் அரைமணி நேரம் கழித்துதான் நீர் அருந்த வேண்டும்.

இவ்வாறு நாம் இயற்கையான முறைகளைப் பின்பற்றினால், அசிடிட்டி பிரச்னைகளிலிருந்து இயல்பாக விடுபடலாம்.

– நன்றி : முதுமை எனும் பூங்காற்று

# இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்) நூருத்தீன் ஸங்கி (ரஹ்) சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்)

## ஓர் அறிமுகம்



வரலாற்றில் முஸ்லிம்கள் மறக்கக்கூடாத நபர்களில் முக்கியமானவர்கள் இமாதுத்துன் ஸங்கி (ரஹ்), நூருத்தீன் ஸங்கி (ரஹ்) மற்றும் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) ஆகியோர். ஆனால் மறக்கப்பட்டு விட்டவர்கள்.

நபி(ஸல்) அவர்களுக்கு பின்னர் நேர்வழி பெற்ற கலீபாக் களாலும் அதன் பின்னர் வந்த இஸ்லாமிய ஆட்சியாளர்களாலும் இஸ்லாம் வேகமாக வளர்ந்தது. உமர் (ரலி) அவர்களுடைய காலத்தில் ஜெருசலேம் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்தது.

ஜெருசலேம் யூதர்களுக்கும் கிறித்தவர்களுக்கும் முக்கியமான பூமி. குறிப்பாக கிறித்தவர் களுக்கு அது ஏசு பிறந்த மண். எனவே, அவர்கள் இந்த மண்ணை கைப்பற்ற எல்லா விதமான முயற்சிகளையும் செய்து வந்தனர். அதற்காக கி.பி.1095–இல் போப் அர்பன் 2 என்பவர் உத்தரவின் பேரில் ஐரோப்பிய நாடுகளில் உள்ள கிறித்தவர்கள் ஒவ்வொருவரின் வீட்டிலிருந்தும் ஒருவர் என பங்கேற்று முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு போரை தொடங்கினர். இதன் பெயர் சிலுவைப்போர். இப்படி பல சிலுவைப்போர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்டன.

இப்படி நடத்தப்பட்ட அனைத்து சிலுவைப் போர்களிலும் சிலுவைப்படையினர் முஸ்லிம்களுக்கு எதிராக பல்வேறு கொடுமைகளை அரங்கேற்றினர். இந்த சிலுவைப்படையினர் தாங்கள் படையெடுத்து வந்த வழி நெடுகிலும் பல்வேறு அநியா யங்களை முஸ்லிம்களுக்கு செய்தனர். இந்த அநியாயங்களில் அவர்கள் கிறித்தவர்களையும் கூட விட்டு வைக்கவில்லை. அவர்களையும் கொலை செய்தனர். சிலுவைப்படையினரின் குதிரைகளின் முழங்கால்கள் ரத்தத்தில் மூழ்கும் அளவிற்கு ரத்த சகதி இருந்தது என வரலாற்றில் பதியப்பட்டது. அந்த அளவிற்கு வெறி கொண்ட கூட்டமாக அவர்கள் இருந்தனர். சிறுவர்களோ பெரியவர்களோ யாரையும் அவர்கள் உயிரோடு விட்டு வைத்ததில்லை. கண்ணில் காண்வர்களை எல்லாம் கொன்று, பார்வையில் பட்டதை எல்லாம் கொள்ளை யடித்து சென்றனர்.

அப்படிப்பட்ட சிலுவைப்படையினரின் தாக்குதல்களை தடுக்கவே முடியாத கையறு நிலையில் முஸ்லிம்கள் இருந்து வந்த வேளையில் முதன் முதலில் அவர்களை நோக்கி எதிர் தாக்குதலை தொடுத்தவர் இமாதுத்தீன் ஸங்கி அவர்கள். முஸ்லிம்களை ஒரு தலைமைக்குள் கொண்டு வர முயன்றவர். ஜிஹாதை மறந்து இருந்த இஸ்லாமிய சமுதாயத்திற்கு ஜிஹாதை மீண்டும் நினைவுபடுத்தியவர். கிறித்தவர்களின் கையில் இருந்து எடெஸ்ஸா போன்ற முக்கிய மான பகுதிகளை கைப்பற்றியவர்.

இதன் பின்னர் இந்த பணிகளை அடுத்த நிலைக்கு எடுத்து சென்றவர் நூருத்தீன் ஸங்கி அவர்கள். சிலுவைப்படையினரை சின்னா பின்னப்படுத்தியவர். இன்று சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி(ரஹ்) அவர்களை தெரியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். ஆனால் சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் தலைவராக, வழிகாட்டியாக இருந்தவர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி அவர்கள்.

இஸ்லாத்தை பின்பற்றுவதிலும் அதனை செயல்படுத்து வதிலும் நேர்வழி நின்று ஆட்சி செய்த, சொர்க்கத்திற்கு நன்மாராயம் கூறப்பட்ட நான்கு கலீஃபாக்கள், அவர்களுக்கு பின்னர் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்), இவர்களுக்கு பின்னர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்களை தான் இந்த பெருமக்களுக்கு இணையாக கூறமுடியும்.

மேற்கத்திய நாடுகளுக்கு எதிராக முஸ்லிம் ஆட்சியாளர் களுடன் குறிப்பாக வடக்கு ஈராக் போன்ற நாடுகளுடன் இணைந்து ஒரு திறமையான இஸ்லாமிய தடுப்பு படையை உருவாக்கியவர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்கள்.

நூருத்தீன் ஸங்கி அவர்களின் கனவு ஒன்று தான். முஸ் லிம்கள் ஒன்றிணைய வேண்டும். ஈப்ரடீஸிலிருந்து நைல் வரை உள்ள இஸ்லாமிய பகுதிகள் அனைத்தையும் இணைத்து சிலுவைப் படையினருக்கு எதிராக ஓர் ஒருங்கிணைந்த இஸ் லாமிய படையை உருவாக்க வேண்டும் என்பதே அந்த கனவு.

நூருத்தீன் ஸங்கிக்கு பிறகு அந்த பணியை தொடர்ந்தவர் ஸலாஹுத்துன் அய்யூபி அவர்கள். இவர் காலத்தில் தான் ஜெருசலேம் முஸ்லிம்களின் கையில் வந்தது. இந்த வடு ஆறாத வடுவாக கிறித்தவர்களுக்கு இருந்தது. முதலாம் உலகப்போரின் போது பிரெஞ்சு தளபதி ஹென்றி ஜோசப் ஈகுவின் கௌராட் என்பவன் சலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் அடக்கஸ் தலத்தை எட்டி உதைத்து 'எழுந்திரு, ஸலாஹுத்தீன் நாங்கள் திரும்பி வந்து விட்டோம். இன்றைய தினம் பிறையை சிலுவை வெற்றி கொண்டு விட்டது' என்று சொன்னதிலிருந்து ஸலா ஹுத்தீன் அய்யூபி அவர்கள் கிறித்தவர்களுக்கு கொடுத்த அடி எப்படிப்பட்டது என்பதை உலகம் அறியும். கிறித்தவ உலகம் கிட்டத்தட்ட எண்ணூறு வருடங்களுக்கு பிறகு வரலாற்றை நினைவில் வைத்து இஸ்லாமிய உலகத்தை பழி தீர்த்து கொண்டது. ஆனால் இஸ்லாமியர்கள் தங்களது வரலாற்று நாயகர்களை மறந்து விட்டது தான் வேதனை. இனி உள்ளே..

## எதிரிகளின் மனோ நிலை அறிந்து திட்டமிடு

அசதுதீன் அவர்களின் திட்டத்தை கேட்டுக் கொண்டிருந்த அவருடைய படையினர் அதிச யித்து போய் விட்டனர். அசதுதீன் அவர்களிடம் ஆலோசனை கேட்டுக்கொண்டிருந்த போது அவர்கள் வழமையான போர் தந்திரங்களையே சொல்லிக்கொண்டிருந்தனர். அந்ததந்திரங்களை கேட்டுக் கொண்ட அசதுதுன் அவர்கள் தம் தளபதிகளை நோக்கி நாம் இப்படி சிந்திப்போம் என்பது எதிரிகளால் கணிக்க இயலுமா? இயலாதா? என்ற கேள்வியை எழுப்பினார்.

அவர்கள் ஒட்டு மொத்த குரலில் 'ஆம்' என்றனர்.

'நாம் எதிரிகள் என்ன சிந்திப்பார்கள் என்பதை உணர்ந்தால் தான் அதற்கு தக்க பதிலடி தர இயலும். எனவே, இப்போதைய நிலையில் நாம் நம்மை எதிரிகளாக உருவகப் படுத்திக்கொள்ளலாம். உங்களிடம் பத்தாயிரம் படையினர்இருந்துஎதிரிகளிடம்இரண்டாயிரம் படைகள் இருப்பதாக வைத்துக்கொண்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்' என்று கேள்வி எழுப்பினார்.

இப்போது அவர் என்ன சொல்ல வருகிறார் என்பதை உணர்ந்து கொண்ட அவருடைய படை யினர் அவருக்கு பதில் சொல்ல ஆரம்பித்தனர், 'நாங்கள் எதிரிகளின் படையாக இருக்கும் பட்சத்தில் உங்களை கொல்வதற்கோ அல்லது கைது செய்வதற்கோ தான் முக்கியத்துவம் அளிப்போம். ஏனெனில் உங்களை வீழ்த்துவது நூருத்தீன் அவர்களுக்கு கொடுக்கக்கூடிய முக்கி யமான பதிலடியாக இருக்கும்' என்று பதிலளித் தனர்.

'அப்படி ஒருவேளை என்னை கொல்வதும் கைது செய்வதும் உங்களுடைய நோக்கமாக இருக்கும் பட்சத்தில் நீங்கள் போர்க்களத்தில் எந்த பகுதியில் என்னை தேடுவீர்கள்' என்று இப்போது அவர்களை நோக்கி அடுத்த கேள்வியை எழுப்பினார் அசதுதீன்.

'நிச்சயமாக படைகளுக்கு மத்தியில் தான்' என்று அவருடைய படையினர் அவருக்கு பதில் அளித்தனர்.

இப்போது தன் படைவீரர்களை நோக்கி அசதுதீன், 'இந்த இடத்தில்தான் நாம் அவர்களை ஏமாற்ற போகிறோம். அவர்கள் எதிர்பார்க்கும் வண்ணம் நான் நம் படையினருக்கு மத்தியில் இருக்கப் போவதில்லை. ஆனால் நான் படையி னரின் மத்தியில் இருப்பது போன்ற ஒரு தோற் றத்தை நாம் உருவாக்க வேண்டும்' என்று கூறி அவர் தன்னுடைய மருமகன் ஸலாஹுத்தீன் அவர்களை நோக்கி, 'படையினருக்கு மத்தியில் என்னைப்போல் இருக்கப்போவது நீங்கள் தான் ' என்று கூறினார்.

பின்னர் அவர் தன் படையினரை நோக்கி, 'ஃபிரான்குகளும் எகிப்தியர்களும் நான் படை களுக்கு மத்தியில் இருப்பதாக கருதி அந்தப் பகுதிக்கு முக்கியத்துவம் அளித்து தாக்குதல் நடத்துவார்கள். அவ்வாறு அவர்கள் தாக்குதல் நடத்தும் போது நீங்கள் அவர்களுடன் தீவிரமாக போர் செய்யாமல் அவர்களுக்கு போக்கு காட்ட வேண்டும். அதே நேரம் உங்களை நீங்கள் பாது காத்துக் கொள்ளவும் வேண்டும். அவர்களை தாக்க அவசரம் காட்டாமல் அவர்களை சோர் வடைய செய்யவும் வேண்டும். சோர்வடைந்து அவர்கள் பின்வாங்கும் போது நீங்கள் அவர்களை துரத்த வேண்டும்' என்று கூறினார்.

பின்னர் அசதுதீன் அவருடைய துருப்புகளில் வீரத்திற்கும் பொறுமைக்கும் பெயர் பெற்ற வீரர்

களை தன்னுடன் தேர்வு செய்துகொண்டு படையின் வலது புறத்தில் நின்று கொண்டார். போர் ஆரம்பித்தது. ஃபிரான்குகளும் எகிப்தியர்களும் அசதுதீன் எதிர்பார்த்த வண்ணமே நடந்து கொண்டனர். அவர்கள் அசதுதீன் படைக்கு மத்தியில் இருப்பதாக எண்ணிக் கொண்டனர்.

எனவே, அந்தப்பகுதிக்கு முக்கியத்துவம் கொடுத்து அங்கே தாக்கத் தொடங்கினர். ஆனால், ஏற்கனவே திட்டமிட்டிருந்த வண்ணம் அந்தப் பகுதியை பாதுகாத்த ஸலாஹுத்தீன் தலைமையிலான வீரர்கள் பெரிய அளவில் எதிர் தாக்குதல் நடத்தாமல் அதே சமயம் எதிரிகளின் தாக்குதலை சமாளித்துக் கொண்டு எதிரிகளுக்கு போக்குக் காட்டிக்கொண்டிருந்தனர். இதன் காரணமாக ஒரு கட்டத்தில் எதிரிகள் சோர்வ சோடைந்தனர். இப்போது அசதுதீன் தேர்ந்தெடுக்கப்பட்ட தன் வீரர்களுடன் வெளிப் பகுதியை தாக்கிக்கொண்டிருந்த எதிரிகளை கடுமையாக தாக்க ஆரம்பித்தார். அசதுதீனை வெளிப்புறத்தில் எதிர்பார்க்காத எதிரிகள் நிலை குலைந்து போயினர். வெளிப்புறத்தில் இருந்த எதிரிகளில் பெரும்பாலானோர் கொல்லப்பட்டனர். பலர் சிறைபிடிக்கப்பட்டனர். சிலர் தப்பியோடினர்.

## தோற்றனர் எதிரிகள்

அசதுதீனை படைக்கு மத்தியில் எதிர்பார்த்து தாக்கிக் கொண்டிருந்த எதிரிகளின் மற்றொரு பிரிவினருக்கு பெருத்த சோதனை. எனவே, தங்களின் தாக்குதல் திசையை மாற்றி அசதுதீன் இருந்த பக்கம் தங்களின் படையை திருப்பி தாக்க அவர்களால் உடனடியாக இயலவில்லை. அப்படி அவர்கள் திரும்பிய போது ஸலாஹுத்தீன் தலைமையில் மத்தியில் இருந்த படையினர் எதிரிகளை பின்புறமாக தாக்க ஆரம்பித்தனர்.

ஒருகட்டத்தில் ஒட்டுமொத்தமாக சூழ்ந்து கொள்ளப்பட்ட நிலையில் எதிரிகளின் படைகள் சின்னாபின்னமாகியது. அவர்கள் தப்பி வெளியேறி வந்தபோது அவர்களை காப்பாற்ற எதிரிகளின் படைகள் எதுவும் போர்களத்தில் வெளியில் இல்லை. இதனால் எதிரிகள் ஒட்டுமொத்தமாக தோல்வியை தழுவினர். இரண்டாயிரம் பேர் கொண்ட படை பத்தாயிரம் பேர் கொண்ட படையினரை அதாவது தங்களை போன்ற ஐந்து மடங்கு பலம் கொண்டவர்களை வெற்றிக்கொண்டது ஓர் அற்புதமான நிகழ்வு. எத்தனையோ சிறுசிறு படைகள் பெரிய படைகளைஅல்லாஹ்வின்உதவியோடுவெற்றிகொண்டுள்ளது என்ற குர்ஆனின் வசனத்தை நினைவு படுத்திய அந்த வீரனின் வார்த்தைகள் உண்மையானது.

இதன் பின்னர் வெற்றி வீரராக அசதுதீன் அலெக்சாண்டிரியாவை நோக்கி சென்றார். செல்லும் வழிநெடுகிலும் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. வழியில் இருந்த மக்கள் எல்லாம் அவருக்கு மகிழ்ச்சியுடன் செல்வத்தைவாரிவழங்கினர். அலெக்சாண்டிரியாவை அடைந்த போது அதன் மக்கள் அந்த நகரத்தை அமைதியாக அவரிடம் ஒப்படைத்தனர். அசதுதீன் தன் மருமகன் ஸலாஹுத்தீனை அலெக்சாண்டிரியாவின் ஆட்சியாளராக பதவியில் அமர்த்தினார்.

இதன் பின்னர் அசதுதீன் எகிப்தின் மேல் பகுதிக்கு சென்று ரமளான் வரை அங்கேயே தங்கியிருந்தார்.

## எதிரிகள் மீண்டும் தாக்குதல்

தோற்று ஓடிய ஃபிரான்குகளும் எகிப்தியர்களும் கெய்ரோவிற்கு சென்று அங்கு ஒன்று கூடினர். அவர்களில் கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தாருக்கு இழப்பீடுகளை வழங்கினர். பின்னர் அவர்கள் அலெக்சாண்டிரியாவை கைப்பற்ற மீண்டும் ஒரு படையுடன் அலெக்சாண்டிரியாவை நோக்கி சென்றனர். அலெக்சாண்டிரியாவை காப்பாற்றும் பொறுப்பு இப்போது ஸலாஹுத்தீன் அவர்களின் கைகளில். விட்டுவிடுவாரா அவர்.

ஸலாஹுத்தீன் அவர்களின் நடத்தையும் மக்களை நடத்திய விதமும் அலெக்சாண்டிரியாவின் மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றிருந்தது. மேலும் அவர்கள் பொதுவாகவே ஃபிரான்குகளுக்கும் ஷவாருக்கும் எதிரான மனோநிலையை கொண்டிருந்தனர். அவர்கள் இப்போது ஸலாஹுத்தீனுக்கு உதவ தயாராகி விட்டனர்.

எனவே ஸலாஹுத்தீன் அவர்களின் படையுடன் இப்போது அலெக்ஸாண்டிரியாவின் மக்களும் சேர்ந்துகொண்டனர். இருப்பினும் கிறித்தவர்களின் எகிப்தியரின்படைகள் அளவில் பெரியவை. அவை அலெக்ஸாண்டிரியாவை

முற்றுகையிட்டன. மக்களின் பாதுகாப்பையும் எதிரிகளின் படை அளவையும் கருத்தில் கொண்டு ஸலாஹுத்தீன் எதிர் தாக்குதலை தவிர்த்துவிட்டார். முற்றுகை நீடித்தது.

இப்போது அலெக்ஸாண்டிரியாவில் உணவுப் பொருட்களின் அளவு குறைந்து கொண்டே வந்தது. ஒரு கட்டத்தில் உணவு பொருட்களுக்கு மிகுந்த தட்டுப்பாடு ஏற் பட்டது. ஆனாலும் அலெக்ஸாண்ட்ரியாவின் மக்கள் அதை பொறுமையுடனும் உறுதியுடனும் தாங்கிக் கொண்டனர்.

இதற்கிடையே எதிரிகள் அலெக்சாண்டிரி யாவை தாக்க முற்றுகையிட்டுள்ள செய்தி அசது தீனுக்கு தெரியவந்தது. அவர் தன் படைகளுடன் எகிப்தின் மேல் பகுதியிலிருந்து அவர்களுக்கு உதவுவதற்காக வந்தார். எதிரிகளுக்கு மீண்டும் ஓர் இக்கட்டான சூழ்நிலை. இம்முறையும் ஒரு பெரிய இழப்பை ஏற்றுக் கொள்ளும் தைரியம் அவர்களுக்கு இல்லை. எனவே, அவர்கள் அசதுதீன் அவர்களிடம் ஒரு சமரசத்திற்கு முன் வந்தனர். தங்களை உயிருடன் விட்டு விட்டால் அவர்கள் ஏற்கனவே அசாதுதீன் எகிப்தியர்களி டமிருந்து கைப்பற்றியவற்றை தவிர்த்து இன்னும் 50000 தினாரை அவருக்கு தருவதாக உறுதி யளித்தனர்.

அசதுதீன் இப்போது ஒரு சில நிபந்தனை களுடன் இந்த சமரசத்தை ஏற்றுக் கொண்டார். அதன்படி கிறித்தவ படைகள் எகிப்து அல்லது எகிப்தின் எந்த ஒரு கிராமத்திலும் இருக்கக் கூடாது. மேலும் அலெக்சாண்ட்ரியாவை அதன் மக்களிடமே ஒப்படைக்க வேண்டும். அலெக் ஸாண்டிரியாவிற்கு எந்தவிதமான தொந்தரவை யும்ஷவாரோஃபிரான்குகளோஅளிக்கக்கூடாது. இந்த இரண்டு நிபந்தனைகளையும் எதிரிகள் ஏற்றுக்கொண்டனர். இதன் பின்னர் அசதுதீன் லெவான்த் திரும்பினார். அவர் டமாஸ்கஸ்–ஐ வந்தடைந்தார்.

## ஒப்பந்த மீறல் – எதிரிகளின் நயவஞ்சகம்

இதற்கிடையே கிருத்துவர்களும் ஷவாரும் நயவஞ்சகமாக தங்களுக்கிடையே ஒரு சமர சத்தை ஏற்படுத்திக் கொண்டனர். அதன்படி சிலுவைப்படையினரின் பிரதிநிதி ஒருவர் எகிப் தில் இருப்பார். அத்துடன் சிலுவைப் படையினர் எகிப்தின் நுழைவாயில்களை நூருத்தீன் அவர்கள் எகிப்துக்குள் நுழைவதை தடுக்கும் வண்ணம் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டிருப் பர். இதற்காக சிலுவை படையினருக்கு எகிப்து வருடம் ஒன்றிற்கு ஒரு லட்சம் தினார்களை வழங்கும். இவை ஒப்பந்தத்தின் நிபந்தனைகள். இந்த ஒப்பந்தம் ஷவாருக்கும் சிலுவை படையின ருக்கும் இடையில் மட்டுமே ஏற்பட்ட ஒப்பந்தம் என்பது குறிப்பிடத்தக்கது.

எகிப்தின் ஆட்சியாளர் அல் அதீத் என்பவ ருக்கு நடந்த நிகழ்வுகள் ஒன்றும் தெரியாது. எனவே அவரால் அதன்பிறகு நடந்த எதையும் கட்டுப்படுத்த இயலவில்லை. இதற்கிடையே ஷவார் சூழ்ச்சி செய்து அவரை பதவியிலிருந்து நீக்கியதாக அறிவித்தார். சிலுவைப் படையினர் இப்போது அவர்கள் வீடுகளை விட்டு விட்டு எகிப்தில் குறிப்பாக கெய்ரோவில் வீடுகளை ஏற்படுத்திக் கொண்டு இருக்க ஆரம்பித்தனர்.


சிலுவைப் படையினரின் முக்கியமான வீரர்கள், முக்கியமான தலைவர்கள் போன்றோர் எகிப்தில் வசிக்க ஆரம்பித்தனர். அவர்களின் செல்வாக்கு நாளுக்கு நாள் எகிப்தில் வளர்ந்து கொண்டே இருந்தது. அங்கிருந்த முஸ்லிம் களுக்கும் ஷவாரின் மகன் அல்காமில் ஷுஜா என்பவருக்கும் இதனை தாங்கிக்கொள்ள இயல வில்லை. முஸ்லிம்களை இறை நிராகரிப்பாளர் கள் ஆளுமை செலுத்துவதை அவர்களால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை.

எனவே ஷவாரின் மகன் அல்காமில் ஷுஜா நூருத்தீன் ஸங்கி அவர்களுக்கு ஒரு செய்தி அனுப்பினார். அதில் தன் விசுவாசத்தை வெளிப் படுத்தி நடந்து கொண்டிருக்கும் நிகழ்வுகளை அவருக்கு தெரியப்படுத்தி இதை சீரமைக்க அவரிடம் உதவி கோரினார்.

**எகிப்தின் மக்களை கட்டுப்படுத்தவும் முஸ்லிம்களை ஒன்றிணைக் கவும் அவரிடம் உதவி கோரினார். அதுமட்டு மன்றி இந்த உதவியை செய்வதற்கு தேவையான பொருள் உதவியையும் அவர் அனுப்பி வைத்தார்.**

**ஹிஜ்ரி 564 கி.பி. 1169 –**
**சிலுவைப்படையினரின் பேராசை**

இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில் தொடரும்




# முதல் சிலுவைப்போரில் கிறிஸ்தவர்கள் சொன்ன பொய்

முதல் சிலுவைப்போரின் போது, இஸ்லாத்தை, உலகை விழுங்கவரும் பூதம் எனச் சித்தரித் ததோம். அது வரலாற்றையே புரட்டிப்போடும் அளவிற்கு உலகை அதிர வைத்தது. எங்கும் இஸ்லாத்தின் மீது ஓர் வெறுப்பு அதனால் முஸ் லிம்களின் மேல் கோபம்.

*2006* ஆம் ஆண்டில் போப் பெனடிக்ட் XVI-16 ரெஹன்ஸ்பர்க் பல்கலைக்கழகத்தில் உரை ஒன்றை நிகழ்த்தினார். அவர் பைசார்ந்திய மன்னர் மேனுவேல் II அன்று முஹம்மத் அவர் களைப்பற்றிப்பேசியதைக்குறிப்பிட்டார். அதில் முஹம்மத் இந்த உலகத்திற்கு மிச்சமாக இட்டுச் சென்றதெல்லாம், தீமைகளையும், மனிதத்திற்கு எதிரான குரூரங்களையுந்தான் எனக் குறிப்பிட் டார். அத்தோடு முஹம்மத் வாளைக் கொண்டு தான் தன் மார்க்கத்தைப் பரப்பிட வேண்டும் எனக் கட்டளையிட்டுள்ளார் என்றும் கூறினார்.

ஆனால் இப்போது முஸ்லிம்கள் அன்றைய நாட்களைப் போலல்ல. அவர்கள் எங்களது சதியை – வெறுப்புப் பிரச்சாரத்தை புரிந்து கொண்டார்கள். தங்கள் எதிர்ப்புகளைக் காட்டி னார்கள். அதில் முஹம்மத் அவர் மனித மாண்பு களையும், சிறப்புகளையும் உலக மக்கள் மன்றத் திலும் போப் பெனடிக் *16*–இன் முன்பும் வைத்தார்கள்.

செய்வதறியாது திணறினார்கள் போப் பெனடிக்–*16* அவர்கள் பின்னர் மன்னிப்பும் கேட்டார்கள். என்னுடைய பேச்சு தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது எனக் கூறினார். *(56)* (Pope "Sorry' for Offens to Islam. BBC News Sept-16,2006. http//newsbbc.co.uk/2/hi/535stm)

இப்படி போப்புகள் தாங்கள் கூற நினைப் பதையெல்லாம் உரக்க முழங்கிவிட்டுப் பின்னர், இல்லை என்று தங்களை தூரப்படுத்திக் கொள்வது இதுவல்ல முதல்முறை.

போப் ஜான்பால் II அவர்களும், இப்படித் தான் தன்னுடைய உரைகளால், கிருஸ்தவர்களுக் கும், யூதர்களுக்குமிடையே பகையை ஏற்படுத்தி னார். அதேபோல் முஸ்லிம்களையும் பகைத்தார். குரூரமான வார்த்தைகளைக் கொட்டினார். ஆனால், பின்னர் கொண்ட பகையைத் இல்லா மலாக்குவதற்கு! பயங்கரமான முயற்சிகளை மேற்கொண்டார். *(57)* (Akbar.S. Ahamed the Muslim World, "Beliefnet, April, 2006) (Bridge Builder to the Muslim World)

ஒரு கட்டத்தில் போப் பெனடிக் அவர்கள் பகிரங்கமாகவே இப்படிக் கேட்டார். "ஒரு பன் முகத் தன்மையுள்ள சமுதாயத்தில் இஸ்லாத்தை அனுமதிக்க இயலுமா?" பத்திரிகையாளர் கிருஸ்தோபர் (Cald Well) கால்டுவெல். போப் பெனடிக் அவர்கள் கேட்டதற்கு வக்காலத்து வாங்கி எழுதினார். (Christopher Cald Well, Reflections on the Revolution in Emporean. New York Doubleday 2009-187) பின்னர் தப்பித்துக் கொள்வதற்காக முஸ்லிம் உலகில் தான் நியமித்திருந்த செயலாளர்களைப் பதவிறக்கம் செய்தார்.

உலகில் தான் நியமித்திருந்த செயலாளர் களைப் பதவி இறக்கம் செய்தார். அதன்பின் உற வுகளைச் சீர் செய்ய இத்தாலி. "பிராஸ்சிஸ்கான்" துறவிகளைப் பயன்படுத்தினார். (FRACISCAN AT ASSISI) (இவர்கள் கத்தோலிக்க கிருஸ்தவ சபையின் ஒருபிரிவு துறவிகள்)

உண்மையைச் சொன்னால், போப் பெனடிக் அவர்கள் எங்கள் கால, போப் அர்பன்-II அவர் கள்தாம் தனது அயராத உழைப்பால் முதல் சிலுவைப் (1095) போருக்குப் படை திரட்டினார் என்பதே வாசகர்களுக்கு முந்தையத் தொடர் களில் சொல்லி இருந்தோம்.

போப் பெனடிக், பத்திரிகையாளர்கள் அறிவாளர்கள் ஆகியோர் எல்லோரும் ஒருவருக்கொருவர் சளைக்காமல் இஸ்லாத்தின் மீதுள்ள வெறுப்பை வளர்த்தனர்.

எழுத்தாளர்களெல்லாம், தங்களால் இயன்ற மட்டும் இஸ்லாத்தை இழித்தும், முஸ்லிம்களைப் பழித்தும் தாராளமாக எழுதி குவித்தார்கள். அவற்றுள்ள பெர்னால்டு 1990−இல் அட்லாண் டிக்என்றபத்திரிகையில்எழுதியகட்டுரைஉலகில் மிகப்பெரியதொரு பரபரப்பை ஏற்படுத்தியது.


இதே பெர்னார்ட்டு லூயிஸ், தான் பிற்றை நாளில் சேமுவேல் பி. ஹான்டிங்டன் −இன் 'Clash of Civil Zations' "கலாச்சாரங்களின் மோதல்" என்ற நூலுக்குத் தேவையான எல்லா அனல் பறக்கும் தகவல்களையும் தந்தவர். முஸ்லிம்களின, தீவிர வாதம் வன்முறை எல்லாம் நாங்களே ஏற்படுத் தியது என்றாலும், முஸ்லிம்களும், முஸ்லிமல்லா தவர்களும் மறுக்க முடியாத அளவுக்கு நிகழ்வுகள் இடம்பெற்றன. (சேமுவேல் பி ஹழண்டிங்டன், இனின், கலாச்சாரங்களின் மோதல் போர்த் திட்டத்தையும், அதன் பின்னணிகளையும் வைகறை வெளிச்சம் பத்திரிகையில் பலமுறை வெளியிட்டிருக்கின்றோம்)

ஹட்டிங்டன் தனது 1996/97 நூலில், 11ஆம் நூற்றாண்டின், சிலுவைப் போர் வீரர்கள், என்ன மனநிலையில் இருந்தார்கள் என்பதை மிகவும் துல்லியமாக குறிப்பிட்டுள்ளார்.

(Samuel.P Hundington. The Clash of Civilizations and the Remaking of the world 1996-258)

இனி ஏன் நாங்கள், சிலுவைப் போர் 2.0 வை தொடங்கினோம்...?

இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில்






# சீர்காழியில் இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் பணி!





*சீர்காழியில் முன்னாள் நீதிபதி குலாம் முஹம்மது அவர்களின் வீட்டில் **10.02.2021** அன்று இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் பணி நடைபெற்றது. இதில் நீதிபதி அவர்களின் 'ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம்' என்கிற புத்தகமும் செந்தமிழ்நாட்டு சேரிகள், எங்கே சமத்துவம் அது இங்கே கிடைக்கும் வாரீர், சிக்கல் நாயக்கன் பேட்டையிலிருந்து புனித மக்கா மாநகரம் வரை, கருப்பாயி என்கிற நூர்ஜஹான்*

# மேலை நாடுகளில் பெண்கள்

கீழை நாட்டுப் பெண்கள், தங்கள் கணவன்களைக் கண்ணியப்படுத்தினார்கள். அதனால் அவர்களின் கணவன்மார்கள், தங்கள் மனைவியருக்குத் தங்களால் இயன்றதையெல்லாம் தந்தார்கள்.

பெண்கள் கண்ணியத்தோடும், கனிவோடும் நடத்தப் பெற்றார்கள். இல்லறமே நல்லறம் என வீடும் நாடும் நலம்பல பெற்று வாழ்ந்தன.

மேலை நாட்டுப் பெண்கள் இதற்கு நேர் மாற்றமாக நடந்து கொண்டார்கள். அவர்கள் ஆண்களுக்கெதிராகப் போர்த் தொடுத்தார்கள். ஆண்கள் இவளுக்கென்ன வேண்டும் என்பது போல் நடந்துகொண்டார்கள்.

தனக்குப் பிடித்த யாரோடும் உடல் உறவு கொள்வேன், நீ யார் கேட்பதற்கு? என அவள் விதிவகுத்து வீதிவந்தபோது ஆண்களின் உலகம் சல்லாப உலகமாக மாறியது. பெண்களை அனுபவிக்கலாம், ஆனால் அவளுக்கு அவன் நிறைவேற்றிட வேண்டிய கடமைகள் என்றோ, அவளுக்குத் தந்திட வேண்டிய உரிமைகள் என்றோ எதுவுமிருக்கவில்லை. வஞ்சகமாக வஞ்சித்தாலே வஞ்சிக்கொடி தருவாள் கோடி இன்பம் என்ற நிலை வந்துவிட்டப் பிறகு, எதையும் அவளுக்கென தந்திடாமலே வாழ்ந்திட முடிந்தது ஆண்களால்.

அன்பு செலுத்திட வேண்டியதுமில்லை. அரைக்காசு செலவு செய்திட வேண்டியது மில்லை.

ஆக ஆண்கள் பெண்களின் ஆடைகளாக – அரணாக இருந்திடும் பொறுப்பிலிருந்து விடுதலையடைந்தான்.

பெண் தன்னை புரட்சியாளர் என்றும், தான் விடுதலையடைந்து விட்டதாகவும் கருதிக் கொண்டாள். அதாவது ஏமாந்துவிட்டு, ஏற்றம் கொண்டதாக எண்ணிக் கொண்டாள். இந்தப் பேரழிவில் ஆண்களே தங்கள் கற்பைக் காப்பாற்றிக் கொள்ள இயலவில்லை.

ஆனால் ஆண்கள் உலகை வெற்றி கொள்ளும் வியாபாரியாக உயர முடிகின்றது. உலகை வழி நடத்தும் தலைவனாகக் கூட ஆகிவிட முடி கின்றது. சமுதாயத்தில் வியத்தகு சேவைகளைச் செய்திட முடிகின்றது. ஆனால் வாடகை மனைவியோடுதான் வாழ முடிகின்றது. திருமண ஒப்பந்தம் என்பதை அடிமைதனை என அவள் கருதிட தலைப்பட்டுவிட்டாள்.

ஒரு கணவனுடன் அன்பால் பிணைந்து வாழ்வதை, அடிமைத்தனம் என்ற சிந்தனையை வளர்த்துக் கொண்டாள். இதனால் ஆண்கள் வாழ்க்கையையே மிகவும் தரக் குறைவாக எடை போட தொடங்கிவிட்டார்கள்.



இந்த அவலங்களை இன்று மேலை நாட்டு சிந்தனையாளர்கள் மிகவும் வேதனையோடு வெளிப்படுத்திடத் தொடங்கிவிட்டார்கள்.

மேலை நாடுகளில் குடும்ப வாழ்க்கைச் சீர் குலைந்து கடந்தகால வரலாறு என வழக்கிழந்து போனது. மக்கள்வாழ்க்கைஇழந்து போனார்கள்.

திருமணம் லாட்டரி சீட்டுகளைப் போல் எப்போதாவது ஒருமுறை சிறப்பாக அமைந் திடலாம் என்ற நிலைக்குப் போய்விட்டது.

## இதயங்களை பிழிந்தெடுக்கும் அன்பு – பரிவு

புறக்கணிக்கப்பட்டு, புறந்தள்ளப்பட்ட மனைவியர்,

கைவிடப்பட்ட குழந்தைகள்.

வைப்பாட்டிகள்

கட்டியவனை வஞ்சிக்கும் உறவுகள்.

தெருவில் திக்கற்று சஞ்சரிக்கும் குழந்தைகள்.

இவையெல்லாம் மேலை நாட்டவர்களின் வாழ்க்கையின் அடையாளங்களாக ஆகிவிட்டன.

இன்று பூமியில் மிகவும் வேதனைகளை நெஞ்சிலும், வயிற்றிலும் கட்டிக்கொண்டு அலையும் அபலைகள், மேலை நாட்டுப் பெண்கள் மட்டுமே!

இதனால் சமுதாய அமைப்பில் அனைத்து முக்கியத்துவங்களையும் பெண்கள் இழந்து விட்டார்கள்.

அவர்கள் தீர்க்க முடிய மனநோய்களின் முகவர்கள் (ஏஜெண்டுகள்). இவர்கள் சமுதாயத் திற்கு அள்ளித் தந்ததெல்லாம் சிக்கலான ஒழுக் கங்கள், அதனிலும் சிக்கலான ஒழுக்கப் பிரச்ச னைகள். பாலியல் நோய்கள்.

தாங்களே ஏற்படுத்திக் கொண்ட இந்தச் சிக்கல்களை அழித்திடவும், அவற்றிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ளவும் அவர்கள் இயன்றவரை முயற்சி செய்து பார்க்கின்றார்கள். இயலவில்லை, பாவம் படுதோல்வி ஒன்றைத் தவிர அவர்கள் வேறெதையும் அடைந்திட வில்லை.

பெண்களின் கண்ணியத்தையும், கௌரவத் தையும் உயர்த்திக் காட்டுகின்றேன் என உரக்க முழங்கி களத்தில் குதித்தவர்கள், பெண்களை ஆண்களுக்கு நிகராக ஆக்கிக் காட்டுவோம் என ஆக்ரோஷமாக களம் கண்டவர்கள் கலங்கி நின்றார்கள். இவர்களால் பெண்களின் கண்ணி யத்தையும்கௌரவத்தையும்கடுகளவுகூட உயர்த் திட இயலவில்லை. தாழ்த்திடவே முடிந்தது.

வைப்பாட்டிகள், பல கிளத்திகளில் ஒருத்தி என்ற நிலைக்குப் பெண்கள் தாழ்த்தப்பட்டு விட்டார்கள்.

இதன் பயனாக மேலை நாடுகளில் பிறக்கும் குழந்தைக்கும் 60% சதவிகிதம் குழந்தைகள் கூடா ஒழுக்கத்தில் பிறந்த குழந்தைகள் எனக் கணக்கிடப்பட்டுள்ளன. இதுவும் பெண்கள் இன்று என்னென்ன கருக்கலைப்பு, கருச்சிதைவு முறைகளெல்லாம் உண்டோ அவற்றை யெல்லாம் பயன்படுத்திய பின்னர் பிறந்த குழந்தைகளைக் கொண்டு கணக்கிடப்பட்டது.

ஆண்களுக்கு நிகராக ஆகிவிட வேண்டும் என சமருக்கு நின்றதில் பெண்கள் 'தாய்மை' என்ற நிகரற்ற கண்ணியத்தை தவிடுபொடியாக்கி விட்டனர்.

**இந்த மேலை நாட்டுக் கலாச்சாரம் எந்த அவுக்குத் தரம் தாழ்ந்தது என்றால், வயிற்றுப் பசி எடுத்தால் சிற்றுண்டி சாலைகளுக்கு செல்வோம். அது எந்தச் சிற்றுண்டிச் சாலை (ஹோட்டல்) என்பதைப் பற்றி முன்கூட்டியே முடிவெடுப்பதில்லை. அதேபோல் உடல்பசி எடுத்தால், ஒருவனைக்கொள், அவன் யார் என்பதைப் பற்றி எந்தச் சர்ச்சையும் தேவையில்லை என்றாக்கி விட்டார்கள்.**

**ஆண்களின் கற்பு என்பது, திருமண ஒப்பந்தத்தின் மூலம்தான் பொறுப்பேற்றுக் கொண்ட பெண்ணுடன் உடல் உறவு கொள்வதாகும். இந்தத் திருமண உறவுக்கு வெளியே அவன் உறவு கொள்கிறான் என்றால் அவர் தன் கற்பை இழந்துவிட்டான்.**

**திருமண ஒப்பந்தம் செய்து கொண்ட பெண்கள் அல்லாமல் அல்லாத பெண்களோடு அவன் உறவு கொண்டால் கடுமையான தண்டனை அவனுக்குக் காத்திருக்கின்றது.** - MGM

‘தாய்மை’ பெண்களுக்கே உரிய தனித் தன்மைகளுள் ஒன்று என்பதைச் சரியாகப் புரிந்துகொள்ள இயலாதவர்களாக ஆகிவிட் டார்கள் பெண்கள்.

தன்னை அலங்கரித்துக்கொண்டு, அடுத்தவர்களின் மனதிற்கும் – பார்வைக்கும் கிளுகிளுப்பைத் தந்திட வேண்டும் என்று விரும்புகின்ற பெண் ;

ஆண்களில் பொழுதுபோக்காகத் தன்னைத் தந்து அதில்தான்விடுதலையடைந்துவிட்டதாகக் கற்பனைச் செய்து கொண்டிருக்கின்ற பெண் ;

வீட்டை நிருவகிப்பதில் இருக்கின்ற கஷ்டங் களையும்பின்னர்அதுதரும்திருப்தியையும்அகம் மகிழ்ந்து ஏற்றுக்கொள்ள விரும்பாத பெண் ;

குழந்தைகளைப் பேணி வளர்ப்பதில் இருக்கும் இதத்தையும் இன்பத்தையும் புறக் கணிக்கின்ற பெண் ;

யாழையும், குழலையும், வாகைகண்ட மழலையில் வீசும் இன்பத்தைச் சுவைக்கத் தெரியாத பெண் ;

திருமணத்தின் மூலம் முகிழும் உறவில் மகிழும் நிலையை அடைய விரும்பாத, அதனால்டி முடியாத பெண் ;

ஒரு நல்லதொரு எதிர்கால தலைமுறையை, நல்லதொரு பல்கலைக்கழகமான குடும்பத்தைக் கட்டியெழுப்புவது, தரும் அனுபவத்தையும் சுகத்தையும் அனுமதிக்க முடியாத பெண் ;

சமுதாயத்தின் சாபக்கேடே!

அவர்கள் குடும்ப வாழ்வில் குதூகலத்தைச் சீர் குலைப்பவர்கள்,

தனிப்பட்ட குடும்பங்களின் கூட்டமைப்புத் தான் நாடு. நாட்டின் நல்வாழ்வு என்பது, வீட்டின் நல்வாழ்வை மையமாகக் கொண்டே அமைகின்றது.

அதனால்,

வீட்டின் – குடும்பங்களைக் குலைப்பவர்கள் நாட்டின் நல்வாழ்வுக்கு வேட்டு வைக்கின் றார்கள்.

பெண்களின் கண்ணியம் என்பது ஆடைக் குறைப்பாலும், அடுத்தவர்களின் காட்சிப் பொருளாகவும், கேளிக்கைப் பொருளாகவும், அதனால் ஏளனப் பொருளாகவும் இருப்பதால் வருவதில்லை.

பெண்கள் ;

உண்மையான மகள்களாகவும்,

பண்புடைய மனைவிகளாகவும்,

பொறுப்புடைய குடும்பத்தலைவிகளா கவும், பாசமிகு தாயாகவும், இருப்பதன் மூலமே பெருமையும், பெரும் பேற்றையும் அடைய முடியும்.

அப்போது மட்டுமே ஆண்களின் அகக் கண்களிலும், புறக்கண்களிலும் கண்ணியத்தைப் பெறுவார்கள்.

மேலை நாடுகளில் அவள் பெருமையோடு பார்க்கப்பட்டுகின்றாள் என்பது போலியானது. பொய்யானது.

மேலை நாடுகளில் நடப்பிலிருக்கும் தத்து வங்கள் பெண்கள் வீட்டில், நாட்டில் – சமுதாய அமைப்பில் அவள் ஆற்றிட வேண்டிய ஆக்கப்பூர்வமான பணிகளைப் புறக்கணிப்பது, யதார்த்தங்களுக்கு அப்பாற்பட்டது.

‘முன்னேற்றம்’ விடுதலை என்ற கவர்ச்சியான முழக்கங்களை முன்வைத்து அவளை அவளு டைய வீட்டிற்கு வெளியே இழுத்து வீதிக்குக் கொண்டு வந்து விடுகின்றன. மேலை நாட்டுத் தத்துவங்கள். வீதிக்கு வந்தபின் அவள் எடுப்பார் கைப்பிள்ளையாக அந்த வீட்டை – இல்லறத்தை இல்லாமலாக்கி விடுகின்றாள். தன் வாழ்க்கையை யும் – படைப்பின் நோக்கத்தையும் தொலைத்து விடுகின்றாள்.

வீட்டிலிருந்து அவளை வெளியே இழுத்து அவளை வீதிக்குக் கொண்டுவரும் இந்த முயற்சி யில்தான் அவளுடைய இல்லற வாழ்க்யையும் – குழந்தை வளர்ப்பையும் அவளுக்கு அருவெறுப் பானதாகக் காட்டப்படுகின்றது.

பாவம்! அவளும் ஏமாந்து விடுகின்றாள். இந்த ஏமாற்றத்தை அவள் வாழ்வின் ஏற்றம் எனக் காணும்போதுதான் அவள் முழு இருட்டில் நுழைகின்றாள்.

இதில் செய்தித்தாள்களும் ஊடகங்களும் அள்ளிக் கொட்டிடும் முயற்சிகளுக்கு அளவே இல்லை. ஆண்கள் அவளுக்கு நிகராகப்

போட்டிக்கு நிற்பதுபோல் ஒரு பொல்லாதத் தோற்றத்தை ஏற்படுத்திவிடுகின்றன.

இந்தப் போட்டியை ஏற்றுக்கொண்டு சில பெண்கள் ஆண்களோடு சமருக்கு நின்றதாக ஒரு காட்சியை நாள் தவறாமல் கடை விரிக்கின்றார்கள். இந்தக் காட்சியில் அவள் வென்றதாக ஒரு வெற்றி முழக்கம், வெறிப் பிரகடனம். இந்தப் பிரம்மையில் சிக்கிக்கும் அவள், தன் கடமைகளையும் – பொறுப்புகளையும் புறக்கணித்து விடுகின்றாள்.

இதன் தவிர்க்க வியலாத விளைவுகள்தாம் கண்டவர்களைக் கொள்ளும் உறவுமுறை – இது இன்று வெட்கப்பட வேண்டிய ஒன்றல்ல என்ற அளவுக்கு வந்துவிட்டது.

– பெண்களின் உடலை முழுமையாகக் காட்டிடும் வியாபார விளம்பரங்கள்,

அவற்றால் விளையும் பாலியல் முறைகள்.

## கூடா ஒழுக்கம்

அதன் விளைவான பாலியல் நோய்கள் (இது இன்று காட்டுத் தீ போல் உலகெங்கும் பரவி வருகின்றது)

திருமணமாகாத தாய்மார்கள். அதிகரித்து வரும், மண விலக்குகள், கருக்கலைப்புகள், இவையெல்லாம் பெண்களின் விடுதலை, பெண்களின் விடுதலை என்ற முழக்கங்கள் பெற்றுத் தந்தவை.

பலதார மணத்திற்கெதிராகப் போர்க்கொடி தூக்கியவர்கள். கூடா ஒழுக்கத்தை – திருமண மாகாத்தூய்மையை அடைவதை – அசிங்கமாகப் பார்க்கவில்லை. மாறாக இவற்றிற்கு வரிந்துக் கட்டிக்கொண்டுவககாலத்துவாங்குகின்றார்கள்.

இஸ்லாம் பெண்களைப் பராமரிப்பதும் அவளுக்கு வேண்டியதைச் சம்பாதிப்பதும் ஆண்களின் கடமை எனப் பணித்தது. குடும்பத் தலைவன் என்ற அடிப்படையில் மனைவி கணவனுக்குக் கட்டுப்பட்டு வாழ்ந்திட வேண்டும் எனப் பணிக்கின்றது.

குழந்தைகள் பெற்றோர்களுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். பெற்றோர்கள் குழந்தைகளைப் பேணி வளர்த்திட வேண்டும் எனப் பணிக்கின்றது.

இவற்றையெல்லாம் பிற்போக்குத் தனங்கள் என வர்ணிக்கப்பவர்கள் பச்சை ஒழுக்கக் கேட்டை பகிரங்கமாக அறிவிக்கின்றார்கள்.

– இன்ஷா அல்லாஹ் தொடரும்.




முன்னுரை

பிப்ரவரி 21. மால்கம் – எக்ஸ் ஷஹீதாக்கப்பட்ட நாள். தாம்பரத்தில் உள்ள ஓர் இஸ்லாமிய அழைப்பு மையத்தில் மால்கம் – எக்ஸ் பற்றி உரையாற்றினேன். உரையை முடித்தவுடன் என்னிடம் வந்த நண்பர் ஒருவர், "உரை நன்றாக இருந்தது. கிட்டதட்ட இந்த உரையில் நீங்கள் குறிப்பிட்ட சம்பவங்கள் போன்றே, எனக்கு தெரிந்த ஒருவருக்கு அவரது வாழ்வில் நடந்துள்ளது. அவரைப்பற்றி நீங்கள் தெரிந்து கொண்டால் உங்களது அழைப்பு பணிக்கு உபயோகமாக இருக்கும்" என்று கூறினார்.

சரி அந்த நபர் பேசிய வீடியோ ஏதேனும் இருந்தால் எனக்கு அனுப்புங்கள் என்று கூறினேன். உடனேயே அனுப்பினார். இம்மானுவேல்(எ) அப்துல்லாஹ்தான் எப்படி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டேன் என்ற அந்த உரையைக் கேட்டு நிகிழ்ந்து போனேன்.

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்." (குறள் 69)

என்ற திருக்குறளின் விளக்கத்தை புத்தகங்களில் வாசித்திருப்போம். ஆனால் இம்மானுவேல் (எ) அப்துல்லாஹ் என்பவரின் தாய்க்கு தன் மகன் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதன் மூலம் தன் வாழ்விலேயே அந்த திருக்குறளுக்கான அர்த்தத்தை உணரும் வாய்ப்பு கிட்டியுள்ளது.

இஸ்லாம் ஒரு மனிதனை எப்படிப் பண்படுத்தி சிறந்த முன்மாதிரி மனிதனாக வாழ வைக்கும் என்பதற்கு இவரது அனுபவங்கள் ஒரு சாட்சி. வாருங்கள் அவரது அனுபவங்களுக்குள் பயணிப்போம்..

## இம்மானுவேல் (எ) அப்துல்லாஹ்

என்னுடைய பெயர் அப்துல்லாஹ். என்னுடைய பழைய பெயர் இம்மானுவேல். நான் கிருஸ்தவ மதத்தில் "பறையர்" எனும் சாதிப் பிரிவில் பிறந்தேன். எனது வயது–30.

கிருஸ்தவன் என்பதால் வாரத்திற்கு ஒரு நாள் தேவாலயத்திற்கு செல்வது, பைபிள் படிப்பது என சில பழக்கங்கள் இருந்தாலும், நான் மிகவும் மோசமான ஒரு குடிகாரனாக, ரவுடியாக, பொரிக்கியாகத்தான் வாழ்ந்து வந்தேன். குடித்துவிட்டு என் தாய், தந்தையரை அடிப்பது, சகோதர, சகோதரிகளை அடிப்பது, மனைவியை அடிப்பது என்று தான்தோன்றித்தனமாக வாழ்ந்து வந்தேன்.

ஒரு மதுபானக்கடையில் சென்று மது பாட்டில்களை வாங்கி குடித்துவிட்டு அங்கிருந்து கிளம்பும் போது, யாரும் என்னிடம் பணம் கேட்கமாட்டார்கள். ஏனென்றால் பணம் கேட்டால், அடித்து உடைத்து ரகளை செய்துவிடுவான் என்று அமைதியாக விட்டுவிடுவார்கள்.




# இவர்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றார்கள்?



ஊருக்குள் யாருக்கும் மரியாதைக் கொடுக்கமாட்டேன். ஊரில் உள்ளவர்களை, தெருக்களில் நடந்து செல்பவர்களை என எல்லோரிடமும் மோசமாக நடந்து கொள்வேன். காவல்துறையினரிடம் கூட வம்பிழுத்து அடிதடி சண்டை, சிறைவாசம் என்றே தினமும் என் வாழ்க்கைப் போய் கொண்டிருந்தது.

என் சட்டையை கழற்றி உடம்பை காட்டினேன் என்றால் உங்களுக்கு புரியும், உடம்பெல்லாம், வெட்டுக்குத்து தழும்புகள் தான் இருக்கும். அந்தளவிற்கு பொறிக்கித்தனமாக வாழ்ந்து வெந்தேன்.

வேலைக்கெல்லாம் செல்வதில்லை. கட்டப் பஞ்சாயத்து, ரவுடிஸம் என அடாவடித்தனமாகத் தான் சம்பாரித்து வந்தேன். தூத்துக்குடியில் என்னை பற்றி தெரியாதவர்களே இருக்க மாட்டார்கள்.

## நேர்வழியை நோக்கி...

இப்படியே போய்க்கொண்டிருந்த என் வாழ்க்கையில் ஒரு நாள் திடீரென்று ஒரு சிந்தனை. நாம் ஏன் இப்படி வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்? இப்படியே தாந்தோன்றித்தனமாக வாழ்ந்து கொண்டிருப்பதில் எந்த அர்த்தமுமில்லை. இந்த வாழ்க்கை முறையிலிருந்து வெளியேறி ஒழுக்கமாக வாழ வேண்டும். கடவுளென்று ஒருவர் இருக்கிறார் என்பது உண்மையாக இருந்தால் நம்முடைய நிலை என்ன? உண்மையான கடவுள் யாராக இருக்க முடியும்? என்று என் உள்ளங்களில் சில எண்ணங்கள் எழும்ப தொடங்கியது.

எல்லா சமூகத்தினரும் ஆளுக்கொரு கொள்கையை வைத்துக் கொண்டு, ஆளுக்கொரு கடவுள் என வழிபட்டுக் கொண்டிருக்கின்றனர். முஸ்லிம்கள் அல்லாஹ் என்கின்றனர். கிருஸ்தவர்கள் இயேசு என்கின்றனர். உண்மையில் யார்தான் கடவுள் என்ற குழப்பம் எனக்கு வந்தது.

இந்த எண்ணங்களுக்கான விடை தேடி சென்ற போதுதான் எனக்கு இஸ்லாம் எனும் இந்த நேர்வழி மார்க்கம் கிட்டியது. முதலில் நான் பிறந்து வளர்ந்த மதமான கிருஸ்தவம், கடவுள் பற்றியும், ஒரு மனிதன் இந்த பூமியில் எப்படி வாழ வேண்டும் என்பதைப் பற்றியும் என்ன சொல்கிறது என்பதை அறிய பைபிளை புரட்டினேன். ஆனால் அதில் எனக்கு தெளிவான விடை கிடைக்கவில்லை.

எனக்கு தெரிந்த ஒரு முஸ்லிம் நண்பரிடம் சென்று, நீங்கள் அல்லாஹ், அல்லாஹ் என்று சொல்கிறீர்களே, அப்படியென்றால் என்ன? என்று கேட்டேன். அதற்கு அவர், "அல்லாஹ் என்றால் இறைவன்." என்று சொன்னார்.

எனக்கு உங்களது இஸ்லாமிய மார்க்கத்தைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். அதனால் எனக்கு சொல்லுங்கள் என்று கேட்டபோது, அவருக்கு சொல்லத்தெரியவில்லை. அவர் என்னிடம், "நீங்கள் காயல்பட்டிணம் செல்லுங்கள். அங்கு இஸ்லாத்தை போதிக்கும் மையங்கள் உள்ளன. அங்கு சென்று அறிந்து கொள்ளுங்கள்" என்று கூறினார்.

## இஸ்லாத்தைப்பற்றி எனக்கு சொல்! இல்லை யென்றால் தற்கொலை செய்துக்கொள்வேன்!!

உடனேயே காயல்பட்டிணம் சென்றேன். அங்கு சென்று ஒரு இஸ்லாமிய அழைப்பு மையத்திடம், என்னுடைய வாழ்க்கை முறை, நான் எப்படியெல்லாம் இருந்தேன் என்றெல்லாம் சொல்லி, இப்போது எனக்கு இஸ்லாத்தைப் பற்றி தெரிந்து கொள்ள ஆவலாக இருக்கிறது. எனக்கு இஸ்லாத்தைப் பற்றியும், அல்லாஹ்வை பற்றியும் சொல்லுங்கள் என்றேன்.

ஆனால் அவர்கள், நீங்கள் இங்கு இஸ்லாத்தை கற்றுக் கொள்ள வேண்டுமானால், உங்களுக்கு AFFIDAVIT - அபிடவிட் வேண்டும் என்று கேட்டார்கள். அப்படியென்றால் என்னவென்றே

எனக்கு தெரியாது. உடனேயே என்னுடைய சொந்த ஊருக்கு சென்று அங்குள்ள ஜமாத்தார் களிடம், நடந்ததை சொல்லி, எனக்கு "AFFI DAVIT-அபிடவிட்" வேண்டும் என்று கேட்டேன்.

ஆனால் எனக்கு அவர்கள் ''AFFIDAVIT–அபிடவிட்'' கொடுக்க முன்வரவில்லை. அவர்கள் முன்வராதது எனக்கு ஒன்றும் ஆச்சரியமாக இருக்கவில்லை. ஏனென்றால், அந்த ஊரில் உள்ள அனைவருக்கும் என்னைப்பற்றி நன்றாகத் தெரியும். அந்தளவிற்கு அட்டூழியங்களை செய்து, ஒரு கேவலமான மனிதனாக, யாரும் விரும்பாத ஒரு மனிதனாகத்தான் வாழ்ந்துக் கொண்டிருந்தேன்.

பின் நேராக மீண்டும் காயல்பட்டிணத்தில் உள்ள அந்த இஸ்லாமிய அழைப்பு மையத்திற்கே சென்றேன். அங்கு சென்று, "பாய் எனக்கு இஸ்லாத்தை பற்றியும், அல்லாஹ்வைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும். இப்போது நீங்கள் என்னை இங்கு சேர்த்துக் கொள்ளவில்லை என்றால், இந்த இடத்திலேயே நான் தற்கொலை செய்துக் கொள்வேன்" என்று அனைவர் முன்னிலையிலும் கூறினேன்.

இப்படி நான் கூறியதும், பதறிப்போய் அவர்களே எனக்கு "AFFIDAVIT–அபிடவிட்" போட்டு, அந்த இஸ்லாமிய அழைப்பு மையத்தில் இஸ்லாத்தைப் பற்றி படிப்பதற்கு சேர்த்துக் கொண்டார்கள்.

## அழகிய, புதிய தருணங்கள்

உள்ளே சென்று இஸ்லாத்தைப் பற்றி படிக்க ஆரம்பித்தேன். சுப்ஹானல்லாஹ்! இதுவரை நான் பார்த்திராத ஒரு வித்தியாசமான வாழ்க்கை முறையை நான் அங்கு பார்த்தேன்.

நாமெல்லாம் என்றைக்காவது ஒரு நாள் ஒட்டுமொத்த குடும்பத்தோடு அமர்ந்து சாப்பிடுவோம். அப்படி சாப்பிடும் போது நம் கவலைகளையெல்லாம் மறந்து, சந்தோஷமாக பேசிக் கொண்டு சாப்பிடுவோம். அது ஒரு அழகிய உணர்வாக இருக்கும்.

ஆனால் இங்கு எந்தெந்த ஊர்களிலிருந்தோ படிக்க வந்தவர்கள் எல்லாம் எந்த வேற்றுமையும் இல்லாமல் ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கும் காட்சி என்னை வியக்க வைத்தது. அதுவும் தினமும் இப்படித்தான் சாப்பிட வேண்டும் என்றிருந்த போது என்னால் அந்த ஆனந்தமான தருணங்களை வார்த்தைகளால் வர்ணிக்க முடியவில்லை.

அப்போதே கலீமா சொல்லி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டேன். அதன் பின் தொழுகைக் கான பயிற்சியெல்லாம் கொடுத்து என்னையும் தொழச் சொன்னார்கள். நான் முதன்முதலில் அல்லாஹ்வை தொழுத அந்த தருணம் எல்லா வற்றையும் விட ஆனந்தமாக இருந்தது. ஓர் உண்மையான இறைவனை தொழுத உணர்வு அப்போது எனக்கு ஏற்பட்டது. இதற்கு முன் அப்படி உணர்வு எனக்கு ஏற்பட்டதேயில்லை.

## குடிகாரன், ரவுடி – இப்போது முன்மாதிரி முஸ்லிம்

அங்கேயே இருந்து நான்கு மாத இஸ்லாமியக் கல்வியை முழுமையாக கற்றுக்கொண்டு ஓர் ஒழுக்கமான முஸ்லிம் ஆண்மகனாக வெளியில் வந்தேன். நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட விடயம் என் தாய், தந்தையர்களுக்கு தெரியாது. அப்படியே என் வீட்டிற்கு சென்றேன். என் குடும்பத்தினர் என்னை மேலும், கீழுமாக பார்த்தார்கள். "நான்கு மாதங்களாக ஆளையே காண வில்லை. வீட்டிற்குள் வந்தாலே போதையாகத் தான் வருவான். இப்போது ஆளே மாறிப்போய் வந்திருக்கின்றானே!'' என்று ஆச்சரியமாக பார்க்கிறார்கள்.

நான் எதுவுமே சொல்லவில்லை. இப்படியே மூன்று நாட்கள் ஓடியது. என்னுடைய செயல்கள், வீட்டிலேயே தொழுவது, இவற்றையெல்லாம் வைத்து நான் முஸ்லிமாக மாறிவிட்டேன் என்பதை கண்டுபிடித்துவிட்டார்கள்.

ஆனால் எந்த எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. ஏனென்றால் நான் இப்போது அவர்களிடம் நடந்துக் கொள்ளும் விதம், பேசும் முறை எல்லாம் அவர்களுக்கு பிடித்துவிட்டது. என்னுடைய இந்த மாற்றத்திற்கு இஸ்லாம் தான் காரணம் என்பதையும் புரிந்து கொண்டார்கள்.

"தங்களுடைய மகன் எப்படி இருந்தான். ஊருக்குள் இவனால் எவ்வளவு அவலங்கள், ஆனால் இப்போது இப்படி ஒரு ஒழுக்க சீலனாக மாறி நிற்கிறானே! அதற்கு காரணம் இஸ்லாம் என்றும் சொல்கிறானே! சாகின்ற வரைக்கும் இனி இஸ்லாத்தில் தான் இருப்பேன் என்று

சபதம் எடுக்கிறானே! என்று பூரித்துப் போய் நின்ற என்னுடைய பெற்றோர்கள், எங்களுக்கும் அந்த இஸ்லாத்தைப் பற்றி சொல்'' என்று கேட்டனர்.

நான் உடனேயே எனக்கு இஸ்லாத்தை போதித்த எனது ஆசிரியர்களிடம் விடயத்தை சொன்னேன். அவர்கள் உடனேயே எனது வீட்டிற்கு வந்து என்னுடைய பெற்றோர்களிடம் இஸ்லாத்தை எடுத்துச் சொன்னார்கள். அப்போது மதியம் லுஹர் தொழுகைக்கான பாங்கொலி கேட்டது. நான் தொழ சென்று விட்டேன்.

நான் சென்றவுடன் என் பெற்றோரிடம், ''நீங்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள ஆர்வமாக இருக்கிறீர்கள்?'' என்று கேட்டனர். அதற்கு என் பெற்றோர், ''என் மகனை இந்த ஊருக்கே தெரியும். ஒரு ஒழுக்கம் கெட்டவனாக, குடிகாரனாக, ரவுடியாக வாழ்ந்துக் கொண்டிருந்தவன் அவன். ஆனால் இப்போது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு மிகச்சிறந்த ஒழுக்க சீலனாக நிற்கிறான். எங்கள் கண்முன்னே அவனது மாற்றங்களை நாங்கள் பார்க்கிறோம். அதற்கு காரணமான இஸ்லாத்தை நாங்களும் ஏற்றுக்கொள்வதில் என்ன தவறுள்ளது'' என்று சொன்னார்கள். கலீமா சொல்லி இஸ்லாத்தையும் ஏற்றுக் கொண்டார்கள்.

## அப்துல்லாஹ்வாக நான்..

நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு ஆறு மாதங்கள் ஆகின்றது. இதுவரை நான் தாவா செய்து எட்டு நபர்கள் இஸ்லாத்தை ஏற்றிருக்கின்றார்கள்.

நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன் என்னிடம் இருந்த எந்த கெட்டப்பழக்கமும் இப்போது என்னிடம் இல்லை. பொய் கூட சொல்வதில்லை. அல்ஹம்துலில்லாஹ்.

மேலும் முஸ்லிம்களுடன் பழகுங்கள். முஸ்லிம்கள் நமக்கு நல்லதுதான் நினைக்கிறார்கள். ஆனால் நாம்தான் அவர்களை தவறாகவே புரிந்துக் கொள்கின்றோம். நான் பல ஊர்களுக்கு சுற்றி திரிந்திருக்கின்றேன். ஆனால் காயல்பட்டிணம் போன்ற ஓர் ஒற்றுமையான ஊரை பார்த்ததேயில்லை. அங்கே மனிதர்களுக்கு ஒழுக்கத்தை போதிக்கிறார்கள்.

## இஸ்லாம் தீவிரவாத மார்க்கம் அல்ல! அமைதி மார்க்கம்!!

என்னுடைய இந்த ஒழுக்கமான வாழ்விற்கு காரணம் இஸ்லாம் தான். இஸ்லாத்தைப் பற்றியும், முஸ்லிம்களைப் பற்றியும் நிறைய தவறாக சொல்வார்கள். முஸ்லிம்கள் எல்லாம் தீவிரவாதிகள் என்றெல்லாம் பழிபோடுவார்கள். உண்மையில் இஸ்லாத்திற்கும், தீவிரவாதத்திற்கும் சம்மந்தமே இல்லை. இஸ்லாம் ஓர் அமைதியை போதிக்கக்கூடிய மார்க்கம். இஸ்லாத்தை பின்பற்றினால் மனிதர்கள், ஒழுக்கமான, அமைதியான வாழ்க்கையை வாழ முடியும். என்னைப் பாருங்கள். என்னுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றமே இதற்கு ஒரு சான்றாக உள்ளது. சிந்தியுங்கள் சகோதரர்களே!

''ஒரு மல்யுத்த வீரனை அடித்து துவைத்து, நெஞ்சை நீட்டி கெத்தாக நிற்பவன் வீரனல்ல. தன் கோபத்தை கட்டுப்படுத்துபவனே உண்மையான வீரன்'' என்று சொல்கிறது இஸ்லாம்.

என்னுடைய அடியார்களே...

கிருஸ்தவ மதத்தில் கூட அதன் வேதமான பைபிளின் நிறைய வசனங்களில், ''பாவிகளே, பாவத்தில் வீழ்ந்தவர்களே'' என்றுதான் வரும். ஆனால் அல்லாஹ்வின் இறுதி வேதமான திருக்குர்ஆனில், ''என் அடியார்களே, மனிதர்களே, வரம்பு மீறி பாவம் செய்தவர்களே'' என்று கருணையோடு அல்லாஹ் மனிதர்களை நேர்வழியின் பக்கம் அழைக்கின்றான்.

சகோதர, சகோதரிகளே நீங்கள் திருக்குர்ஆனை படித்துப் பாருங்கள். திருக்குர்ஆன் அனைத்து மனிதர்களுக்கான வேதம். யார் வேண்டுமானாலும் அதைப்படிக்கலாம். அது வெறும் முஸ்லிம்களுக்கான வேதம் கிடையாது. எனவே ஒரேஒருமுறையாவது இந்தக்குர்ஆனைபடித்துப் பாருங்கள். அப்படி நீங்கள் படித்துவிட்டீர்கள் என்றால், ஒன்று நீங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வீர்கள். அல்லது இஸ்லாத்தின் மீது ஒரு நல்லெண்ணம் உங்களுக்கு தோன்றும். அஸ்ஸலாம்.

ஆதாரம்: https://www.youtube.com/watch?v=5kp7ZenChxA

– த. அஷ்ரப் இஸ்லாம்.

# மயிலாடுதுறை மாவட்டத்தில் ஒருநாள் தாஃவா சுற்றுப் பயணம்






மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி தாலுக்கா, தைகாலை சுற்றியுள்ள சில கிராமங்களில் 24.02.2021 அன்று காலையில் ஒரு நாள் தாஃவா நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர் சகோதரர் மன்சூர் அலி அவர்கள் தாஃவா நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியின் சிறப்பு அழைப்பாளராக சகோதரர் முஹம்மது ஜக்கரிய்யா அவர்களும், இஸ்லாத்தை வாழ்வியலாக ஏற்ற சகோதரர் ராஜா முஹம்மது, அன்பகம் மதரஸாவின் செயலாளர் அப்துல் ரவூஃப் மற்றும் அன்பகம் மதரஸாவின் நிர்வாகி யாசர் அரஃபாத் அவர்களும் சுமார் காலை 10:30மணியளவில் தைகாலை சுற்றியுள்ள பகுதிகளான ஆச்சால்புரம், தாண்டவகுலம், சித்திவினாயகபுரம், தைகால் ஆகிய கிராமங்களில் இருக்கின்ற மக்களை நேரில் சந்தித்து இஸ்லாம் பற்றிய அறிமுகமும், இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்கிற அழைப்பும் கொடுக்கப்பட்டது. இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது கட்டாயமல்ல உண்மையான கடவுளை பற்றிய சிந்தனையை வளத்துக் கொள்ளுங்கள் அதை நோக்கி பயணியுங்கள் என்று சொல்லப்பட்டது.





இதில் இஸ்லாம் பற்றியும் முஸ்லிம்கள் பற்றியும் தவறாக விளங்கி இருந்த மக்கள் அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதில் கொடுத்தார் மன்சூர் அலி அவர்களும் முஹம்மது ஜக்கரிய்யா அவர்களும். அதன்பின் இஸ்லாத்தை வாழ்வியலாக ஏற்ற ராஜா முஹம்மது அவர்கள் இஸ்லாத்தை ஏற்றதன் காரணத்தையும், இஸ்லாத்தை ஏற்றபின் நடந்த மாற்றத்தையும் விளக்கமாக எடுத்துக் கூறினார்.



இந்த சுற்றுப் பயணத்தில் நமக்கு கண்ணீர் வரவலைத்த










ஓர் நிகழ்வு நடைப்பெற்றது. அது சித்திவினாயகபுரம் என்கிற கடல்வாழ் மக்கள் வாழ்ந்துவரும் ஒரு கிராமத்தில் கோயில் வாசலில் குழு குழுவாக மக்கள் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர் அங்கே சென்றோம். அப்போது எங்களை பார்த்து ஒருசிலர் கேட்டார்கள் நீங்கள் என்ன விசயத்திற்காக இங்கே வந்துள்ளீர்கள் என்றனர். நாங்கள் கூறினோம் கடவுளை பற்றியும், இஸ்லாம் பற்றியும் உங்களுக்கு சொல்ல வந்துள்ளோம் என்றோம். முஹம்மது ஜக்கரிய்யா அவர்கள் ஒரு குழுவாக ஒன்றுகூடி இஸ்லாம் தனக்கு வருவதற்கு முன்னாள் வாழ்க்கையில் நடந்த பல சம்பவங்களை பற்றி கூறினார் இஸ்லாம் வந்தபின் வாழ்க்கையில் நடந்த மாற்றத்தை பற்றியும் விரிவாக விளக்கினார். அதன்பிற்கு மரணத்திற்கு பின் வரும் வாழ்க்கை பற்றியும், இந்த உலகத்தில் நீங்கள் வெளிப்படையாக, யாருக்கும் தெரியாது என்று மறைமுகமாக செய்த அனைத்து விசயங்கள் பற்றியும் இறைவன் நாளை இறந்தபின் வரும் வாழ்க்கையில் கேட்பான் நீங்கள் பதில் சொல்லியாக வேண்டும் இல்லையெனில் உங்களுக்காக தயார் செய்யப்பட்டிருக்கும் நரகத்தில் நீங்கள் வீசப்படுவீர்கள்

என்று சொன்னபோது ஒருவர் தேம்பி தேம்பி அழுதுவிட்டார் எங்களுக்கு மிகவும் கஷ்டமாக ஆகிவிட்டது. அதன்பிறகு அங்கே கூடியிருந்த மக்களுக்கு அல் குர்ஆன் தமிழாக்கம், புத்தகங்கள் போன்றவற்றை இலவசமாக வழங்கப்பட்டது. மாலை 4:30 மணியளவில் தாஃவா நிகழ்ச்சி நிறைவு பெற்றது அல்ஹம்துலில்லாஹ்.

– யாசர் அரஃபாத்



# மர்ஹூம் மணிமொழி மௌலானா பாகவி



ஹாஜி. பி.எம். அப்துல் கரீம், குளச்சல்

இவர்களின் இயற்பெயர் கலீலுர்ரஹ்மான். ஊர் பள்ளப்பட்டி, பிறந்த தேதி 29-1-1905. தந்தை பெயர் ஜமால் முகம்மது பாகவி. தாய் மம்தூஹாபீவி. தாய்வழிப்பாட்டனார் மௌலானா அப்துல் லத்தீப் சாகிப். தம்பாட்டனாரிடம் அரபி கல்வியும், குஞ்சல் இராவுத்தவர் பள்ளியில் தமிழும் கற்றார். இவர் வேலூர் பாக்கியாத்துஸ்ஸாலி ஹாத்தில் 1914 முதல் 1919-ம் ஆண்டு வரை ஓதினார்.

காந்திஜியின் அன்னிய நாட்டு பொருள் பகிஷ் கரிப்பு போராட்டத்தால் ஈர்க்கப்பட்டு ஓதும் பொழுதே மத்ரஸா மாணவர்களிடம் இருந்த அன்னிய நாட்டு துணிமணிகளையும், அங்கு ஆசிரி யரப்பணி செய்த அமானிஹஸ்ரத் அவர்களின் திருமண ஆடைகளையும் மதரஸா உளூ செய்யு மிடம் அருகே போட்டு தீ வைத்தார். மதரஸா முதல்வர் இதற்கு முன்னிப்பு கேட்கவினவிய போது கேட்க முடியாதென மறுத்து மதரஸாவை விட்டு வெளியேறினார்.

கிலாஃபத் இயக்கத்தில் ஈடுபட்டார். கிலாஃபத் இயக்கம் பற்றி மக்களிடையே பிரச்சாரம் செய்தார். இவர் தமிழ், அரபி, உருது, பார்ஸி போன்ற வற்றில் பேசும் நாவன்மை மிக்கவர். வாயிலிருந்து உதிரும் பேச்சு கவரும்படியாகவும், மணிஓசை போன்ற தொனியையும் உடையதுமாகும். ஆகவே மௌலவி சாகிபை மக்கள் மணிமொழி மௌ லானா என அழைத்தனர். கயாவில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் கலந்துகொள்ள இருபத்தி ஐந்து தொண்டர்களை அழைத்துச் சென்றார்.

1924-ம்ஆண்டு பள்ளப்பட்டி ஜமால்முகம்மது இராவுத்தர் மகள் ஸபூரா பீவியை மணமுடித்தார். அவ்வூரைச் சார்ந்த ஒரு பெரியவர் பேசிக் கொண்டிருந்த போது தம்பதிகள் எங்களூரில் இல்லற வாழ்வில் முன்மாதிரியான பெருவாழ்வு வாழ்ந்தவர்களென்றார்.

மணிமொழி மௌலானா திருமணத்திற்குப் பின் பள்ளப்பட்டி அரசு பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றி இராஜகிரி காஸிமிய்யா மதரஸாவி லும் பெங்களூர் பள்ளிவாயலிலும் 1929 முதல் 134 வரை இமாமாக பணியாற்றியுள்ளனர். சைகோன் சென்று அங்கும் பள்ளியில் இமாமாக பணியாற்றி யுள்ளனர்.

நேதாஜி டோக்கியோ செல்லும்போது சைகோனில் சந்தித்த எட்டு இந்திய பிரமுகர்களில் ஒருவர். மூன்றரை ஆண்டுகள் சைகோனில் சுதந்திர உணர்வையூட்டும் சொற்பொழிவுகள் நிகழ்த்தி னார். நேதாஜி சைகோனில் தங்கியிருக்கும் பொழுது அவரது நெருங்கிய சகாவாகவும் மொழிப் பெயர்ப் பாளராகவும் விளங்கினார். நேதாஜி மௌலா வியை ரொம்பவும் நேசித்தார். எப்பொழுது அழைத் தாலும் மௌலவி சாகிப் என்றே அழைப்பார். மேலும் இவர்களைக் கண்டால் எழுந்திருந்து கை கொடுத்து இவர்கள் அமர்ந்த பின்பே அமர்வார்.

குளச்சல் ரிபாயிப் பள்ளியில் ரிபாயி நாயகம் (ரழி) வருட விழாவில் 11 நாள் பேச கலீலுர்ரஹ்மான் வந்தபோது, நேதாஜி உயிரோடு இருக்கிறாரா என்பது பற்றி விசாரிக்க ஷாநவாஸ் கான் கமிஷன் அன்றைய மத்திய அரசு போட்டிருந்தது. அப்பொழுது சென்னை சென்று இக்கமிஷன் முன்பு வாக்குமுனலம் அளிக்க குளச்சலிலிருந்து மௌலவி கலீலுர்ரஹ்மான் ஹஸ்ரத் சென்னை சென்றார்கள். இதுநாள் ஹதீஸ் வேறு ஆலிம் நிகழ்த் தினார். சென்னையில் ஷாநவாஸ்கான் கமிஷன் முன்பு ஆஜராகி தாம் வாக்குமூலம் கொடுத்தது பற்றி மணிமொழி மௌலானா தன் ஹதீஸ் பேருரையின்போது குறிப்பிட்டார்கள்.

விழாக்கண்வீனர் மர்ஹூம் P.M.அப்துல் காதர் அண்ணன் ஆகும். மணிமௌலானா உரை கருத்தா ளமிக்கது அன்னார் சப்தம் மணி ஓசையை போல கிணீர்கிணிரென இருக்கும். அல்லாமாசர் முகம்மது இக்பாலின் உருது பாடல், மௌலா

னாறுமியின் பாரசீக பாடல் நாட்டு நடப்பு மேற்கோள் காண்பித்து பேசுவார்கள்.

இரண்டாவது உலகப் போரில் ஜப்பான் சரணடைந்த பின் நேதாஜிக்கும் தமக்கும் இருந்த தொடர்பு பற்றிய ஆவணங்களை பொசுக்கி தாய்லாந்தில் அடைக்கலம் புகுந்தார்கள். பாங்காக்கில் தம்பி சாகிப் மரைக்காயர் வணிக நிலையத்தில் தங்கிய இவரை பிரிட்டீஸ் ஒற்றர்கள் அழைத்துச் சென்று டெல்லி செங்கோட்டையில் ஐ.என்.ஏ. விசாரணை முடியும் வரை வைத்திருந்தனர். இந்திய விடுதலையை தவிர வேறு நோக்கமில்லாததால் தாயகம் திரும்ப இவருக்கு பாஸ்போர்ட் வழங்கினர் பிரிட்டீசார்.

சிங்கப்பூர் சென்று மலேயா நண்பன் பத்திரிகை ஆசிரியர் குழுவில் கரீம் கனியோடு தொடர்பு கொண்டு அதன் வளர்ச்சிக்காக 55 ஊர்களுக்கு பிரயாணம் செய்தார். அல்லாமாசர் இக்பாலின் பாடல்களை மலேயா நண்பனில் மொழி பெயர்த்து பணியிட்டு வந்தார்.

1946−ல் இந்தியா வந்து பிறகு இலங்கை சென்று கொழும்பு மேமன் பள்ளியில் இமாமாக பணியாற்றினார். இவரின் கண்ணியமான நடத்தையால் இமாம் பதவிக்கு தனிப்பெருமை ஏற்பட்டது. ஒவ்வொரு ஜூம்ஆவிலும் 15 நிமிடம் உருதுவிலும், 15 நிமிடம் தமிழிலும் காலத்திற்கேற்றார் போல் தன் சிம்மக்குரலில் குதுபா பேருரை ஆற்றுவார்கள். இவர்கள் குதுபா பேருரை கேட்க மக்கள் கூட்டம் அலைமோதியதால் அப்பள்ளி மாடிகள் பற்றாமல் தெருக்களில் மக்கள் தொழ வேண்டியதாயிற்று. இவர்கள் 1960−ம் ஆண்டு இந்தியா திரும்பும் போது பிரிவு விழா நிகழ்வில் பிரிவாற்றாமையால் மக்கள் தேம்பி தேம்பி அழுதனர்.

குளச்சல் ரிபாயிப் பள்ளியில் ரிபாயி சேகுடைய ஆண்டு விழாவில் பேச வந்தபோது, சிலோனில் தொழில் செய்த நம் ஊர் வாசிகள் அன்றைய நம் ஜமாஅத் நிர்வாகிகளிடம் சொல்லி ஓர் ஜூம்ஆ ஹாலில், நம் ஊரில் குதுபா பேருரையாற்ற மணிமொழி மௌலானாவை வேண்டினர். அன்று அன்னார் ஜூம்ஆவில் ஓதிய குதுபா பேருரையும் ஜூம்ஆவில் கூடிய மக்களை உளப்பூரிப்பும் உணர்ச்சியும் இறையச்சமும் ஏற்படச் செய்தது. நான் அன்னாரைப் போன்ற சிம்மக்குரலோனை அரபி, பார்ஸி, உருது போன்றவற்றில் கலாவல்லவனை பார்த்ததில்லை. அரிமா போன்ற நடை குஞ்சம் போட்டடர்க்கி கேப், கோட், சர்வாணி அணிந்து வரும்போது பார்க்க பிரம்மாதமாக இருக்கும்.

நான் ரவ்ளா ஷரீபில் ஒருநாள் இருக்கும் பொழுது ஒருவர் என் அருகே வந்து அமர்ந்தார். சலாம் சொல்லி நலம் விசாரித்தார். ஊர் தமிழகத்தில் பள்ளப்பட்டி என்றார். நான் என் வியாபார நண்பர் அவ்வூர் E.M.S. கயர் கம்பெனி ஆட்களைத் தெரியுமா? என விசரித்து விட்டு மணிமொழி மௌலானா உங்கள் ஊரல்லவா எனக் கேட்டேன். அவர்கள் உங்களக்கு அவர்களைத் தெரியுமா? எனக் கேட்டார். நான் என் தந்தை, தந்தையின் சகோதரர்கள் எல்லோரும் (S.M.குடும்பத்தார்) சிலோனில் வியாபாரம் செய்ததால் மணிமொழி மௌலானாவோடு தொடர்பு இருந்ததைச் சொன்னேன். மேலும் எங்கள் குளச்சல் ஊரில் பள்ளிவாசலில் 11 நாள் மார்க்கப் பேருரையாற்ற வந்திருந்தார்கள். அப்பொழுது எங்கள் வீட்டிற்கு என் மாமா மர்ஹூம் அமீது சாகிப் மௌலவியை அழைத்து வந்திருந்தார்கள் என்று ரவ்ளா ஷரீபில் சந்தித்த பள்ளப்பட்டி நண்பரிடம் சொன்னேன். மணிமொழி மௌலானாவுடைய மார்க்கப் பேருரையைப் பற்றியும், அரபி, பார்சி, உருது புலமையைப் பற்றியும் சொன்னபோது அவர் ரொம்பவும் அதுபற்றி கேட்டறிந்தார்.

மேலும் சொன்னார் நான் திருமணம் செய்திருக்கும் பெண் மௌலவியுடைய அண்ணன் பேத்தியென்றார். வல்ல அல்லாஹ் புனிதமான ரவ்ளாவில் யாரைப் பற்றி அளவளாவக்கூடிய வாய்ப்பு தந்தான் என சிந்திக்கும் போது உலமாக்கள் அல்லாவாகிய என்னை பயப்படக் கூடியவர்கள் என திருமறையும் என் சமுதாயத்தில் உண்டாகக் கூடிய உலமாக்கள் பனீ இஸ்ரவேல் கால நபிமார்களுக்கு ஒப்பானவகளென்ற நபிமொழியும் எனக்கு நினைவுக்கு வந்தது. அல்ஹம்து லில்லாஹ்.

பர்மா சென்று ஐம்பது கூட்டங்களில் பேசிவிட்டு தாயகம் திரும்பி சமூக அரசியலில் ஈடுபட்டார்கள். காயிதேமில்லத்தோடு தொடர்பு இருந்தது. கி.பி. 1969−ல் ஜூன் மாதம் 12−ல் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார்கள். இவர்களின் அடக்கஸ்தலம் பள்ளப்பட்டியிலுள்ளது.

இக்கட்டுரை எழுத உதவிய புத்தகம் மர்ஹூம் M.R.M. ரஹீம் சாகிபின் இஸ்லாமியக் கலைக் களஞ்சியமாகும்.

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor M. Gulam Mohamed, Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFSET PRINTERS,**
19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.